Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 114 | ஞாயிற்றுக்கிழமை 20 மார்ச் 2022 | பங்குனி 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 28 | விலை: 40/=

## முன்னணி போராட்டம் பம்மினார் மஹிந்த

விகாரைக்கு அடிக்கல் நடுகை செய்யச் செல்லவில்லை 27

## மஹிந்தவுக்கு எதிராக இன்றும் போராட்டம்

யாழ்., மார்ச் 20
பிரதமர் மஹிந்த ராஜ பக்சவுக்கு எதிராக மட்டுவில் 26



## தமிழ் பேசும் பிக்குகளை வரவழைக்கவேண்டுமாம்

நயினாதீவில் மகாநாயக்க தேரர் தெரிவிப்பு 27

## மஹிந்தவால் மாட்டினார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 20
நயினாதீவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பங்கேற்ற நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்றபோது மேற்கொள்ளப்பட்ட அண்டி 27

## ஊடகங்களுக்கு கதவடைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ்ப்பாணத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுப் பங்கேற்ற நிகழ்வுகளில் செய்தி சேகரிப்புக்கு ஊடகவியலாளர்கள் 26

## எரிபொருள் வரிசையில் நின்ற முதியவர் சாவு!

கண்டி, மார்ச் 20
கண்டியில் மண்ணெண்ணெய்க்காக வரிசையில் காத்திருந்த முதியவர் மயங்கி விழுந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 26

# புத்தர் வந்த நயினாதீவில் விகாரையை விரிவாக்குவோம்!

### மதவாதத்தைக் கக்குகிறார் மஹிந்த

**யாழ்ப்பாணம், மார்ச் 20**

**வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரை, புத்தரின் வருகையால் புனிதமடைந்த இடமாகும். புனித பூமியைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.** 27



## நாவற்குழி விகாரையின் பிக்குகள் தங்குமிடத்தை திறந்துவைத்தார் மஹிந்த

27

## மருந்துகளுக்குத் தட்டுப்பாடு கண் சத்திரசிகிச்சை நிறுத்தம்

யாழ்.போதனா பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்., மார்ச் 20
மருந்துப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கண் சத்திர சிகிச்சை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் 26

## காணாமற் போன சிறுமிகள் துஷ்பிரயோகமான நிலையில் மீட்பு

### பேஸ்புக் காதலால் வந்த வினை

முல்லைத்தீவு, மார்ச் 20
முல்லைத்தீவு - புதுமாத்தளனிலிருந்து காணாமற் போன இரண்டு பதின்ம வயதுச் சிறுமிகளும் நேற்று முன்தினம் மீட்கப்பட்டனர். பேஸ்புக் காதலனை நம்பி வீட்டை விட்டுப் புறப்பட்ட இரண்டு சிறுமிகளும், இரு வெவ்வேறு இடங்களில் பாலியல் துஷ்பிர 27

## ஹெரோய்ன் பறித்தது இளைஞனின் உயிரை!

குடாநாட்டில் இரு வாரங்களில் இரு சாவுகள்

யாழ்., மார்ச் 20
ஹெரோய்ன்போதைப் பொருளை அதிகளவு எடுத்துக் 26




noolaham.org | aavanaham.org




# மஹிந்தவின் வருகையை எதிர்த்து நேற்றுப் போர்!

**யாழ்ப்பாணம், மார்ச் 20**

**மஹிந்த ராஜபக்சவின் நேற்றைய யாழ்ப்பாண வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளாக சிறையில் உள்ளோரின் உறவினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

மஹிந்த ராஜபக்சவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமலாக்கப்பட்டோரைக் கண்டறிய சர்வதேச விசாரணை வேண்டும், இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும், கந்தரோடையில் புத்தர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டாதே, நாவற்குழி சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்து போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-25,26,125)

## காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்
# ஈ.பி.டி.பி, புளொட் என்பவற்றுக்கு எதிராகவும் விசாரணை வேண்டும்
### கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 20

அரசோடு சேர்ந்து இயங்கிய ஈ.பி.டி.பி, புளொட் போன்ற ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலும் உரிய முறையில் விசாரணை நடத்தப்படவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ச இன்றையதினம் (நேற்று) யாழ்ப்பாணத்துக்கு வருகின்றார். அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு சரிந்துள்ள நிலையில் அதனை நிமிர்த்துவதற்காக, தமிழ்ப் பிரதேசங்களில் புத்த விகாரைகளைக் கட்டுகிறோம் என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக இங்கே வருகின்றார்கள். அவர்களின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

போர்க்காலத்தில் காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும். அரசோடு சேர்ந்து இயங்கிய ஈ.பி.டி.பி, புளொட் போன்ற ஆயுதக்குழுக்களால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலும் உரிய முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றார். (ம-26)



# அனைத்துப் பிரச்சினைகளையும் ஒரேதடவையில் தீர்க்கமுடியாது
### பிரதமர் மஹிந்த விளக்கம்

கொழும்பு, மார்ச் 20

நாட்டு மக்களின் பிரச்சினை தொடர்பாகச் சிறந்த புரிதல் உள்ளது. அந்தப் பிரச்சினைகளை ஒவ்வொன்றாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடு மிகவும் கஷ்டமான நிலைமையில் இருக்கும் நேரம் என்பது உங்களுக்குத் தெரியும். ஒருபுறம் கொரோனாவை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. கொரோனாவை நாங்கள் மிக வெற்றிகரமாக எதிர்கொண்டோம். அதே போல் பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டுள்ள காலத்தில் நாம் இருக்கின்றோம். அரசாங்கம் என்ற வகையில் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்களை வழங்குவது அரசாங்கத்தின் கடமை.

அதைச் செய்ய அரசாங்கம் தயாராக இருக்கின்றது. கிராமங்கள், பிரதேசங்கள் முன்னேற்றமடைய வேண்டுமாயின் வீதிகள், மின்சாரம், குடிநீர் வசதிகளை வழங்க வேண்டும். படிப்படியாக ஒவ்வொன்றாக எடுத்து வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. நாங்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் புரிதல் உள்ளவர்கள். நாட்டு மக்களின் தேவைகளை அறிந்த தரப்பினரே தற்போது ஆட்சியில் உள்ளனர். ஒரே தடவையில், ஒருநாளில், ஒரு மணிநேரத்தில் அல்லது ஒரு வருடத்தில் அனைத்தையும் செய்ய முடியாது. ஒவ்வொன்றாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதற்காக மக்களின் ஒத்துழைப்பு எமக்குத் தேவை- என்றார். (எ-இ)

## சர்வகட்சி மாநாட்டை பங்காளிகள் புறக்கணிப்பர்

கொழும்பு, மார்ச் 20

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

மாறாக சர்வகட்சி மாநாட்டுக்கு அரசாங்கத்தின் 10 பங்காளிக் கட்சிகளில் இருந்து இரண்டு பிரதிநிதிகளை மாத்திரம் அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களான அத்துரலியே ரத்தினதேரர் மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது. எனினும், சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ள சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. (எ-இ)



# மணல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சி, அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் மணல் அகழ்வு இடம்பெறுகின்றது என்று கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இரு உழவியந்திரங்களில் மணலை ஏற்றி டிப்பர் வாகனம் மூலம் வேறொரு பகுதிக்குக் கொண்டுசெல்ல முற்பட்ட மேற்படி சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-14,113)

# மூடப்படும் அபாயத்தில் லிட்ரோ காஸ் நிறுவனம்

கொழும்பு, மார்ச் 20

லிட்ரோ காஸ் நிறுவனம் முற்றாக மூடப்படும் நிலையைத் தவிர்ப்பதற்கு சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை (12.5) 2 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேண்டியுள்ளது என்று லிட்ரோ காஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லிட்ரோ நிறுவனத்தைப் பாதுகாப்பதற்கான சங்கத்தைச் சேர்ந்த தொழில்சார் வல்லுநர்கள் என தங்களைக் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் சிலர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

2021ஆம் ஆண்டு இலங்கை நுகர்வோர் அதிகாரசபை எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை (எல்.பீ) அதிகரிக்க மறுத்ததால் நிறுவனத்துக்கு 11 பில்லியன் [illegible] [illegible] ளால் எரிவாயுவை விநியோகம் செய்ய முடியாது. தற்போதைய விலையில் சமையல் எரிவாயுவை வழங்கினால் நிறுவனத்தை மூடவேண்டி ஏற்படும்.

தற்போது இலங்கை வந்துள்ள எரிவாயுவை 2 ஆயிரத்து 675 ரூபாவுக்கு விற்பனை செய்தால் நிறுவனத்துக்கு 200 மில்லியன் டொலர் இழப்பு ஏற்படும். 2 ஆயிரம் ரூபாவால் விலையை அதிக[illegible]விட்டால் 3 மாதங்களில் லிட்ரோ காஸ் நிறுவனம் மூடப்படும் ஆபத்துக் காணப்படுகின்றது. தற்போது வந்துள்ள சமையல் எரிவாயு மூலம் 200 மில்லியன் இழப்பைச் சந்தித்தால் அடுத்த கப்பலுக்கான கட்டணத்தை நாங்கள் எங்கிருந்து, எப்படிப் பெறுவது? விலைகளை அதிகரிப்பதற்கு நாங்கள் நுகர்வோர் அதிகாரசபையிடம் அனுமதிபெற வேண்டிய அவசியமில்லை, நிறுவனம் மூடப்படும் ஆபத்தை எதிர்நோக்குகின்றது என்பதை பொது மக்களுக்குத் தெரிவிப்பதே எங்கள் நோக்கம்- என்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் அழகையும்
ஆரோக்கியத்தையும் அதிகரிக்கும்
சம்பத் பரிசுகள் ஏராளம்
மார்ச் 31 வரை

சர்வதேச மகளிர் தினத்தின் நிமித்தம்
LADIES 1ST கணக்குரிமையாளர்களுக்கு

Ladies 1st டெபிட் அட்டைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட அழகுக்கலை பங்காளர்கள் இடமிருந்து 25% வரை கழிவு

British Cosmetics
Swabha Ceylon

மார்ச் 08 தொடக்கம் மார்ச் 31 வரை ஆரம்பிக்கும் சிறுவர் சேமிப்பு கணக்குகளுக்கு வைப்பு செய்யும் தொகைக்கு சமமான தொகை எம்மிடமிருந்து (அதிகபட்சம் ரூ. 5,000/- வரை)

Ladies 1st டெபிட் அட்டைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் 25% வரை விசேட கழிவு

Asiri Health
kings Hospital Colombo
Lanka Hospitals
Singhe Hospitals

மார்ச் 01 ஆம் திகதி காணப்பட்ட கணக்கு மிகுதியை மார்ச் 31 ஆகும் போது ரூ 75,000/- த்தால் அதிகரித்து கொள்ளும் கணக்கு உரிமையாளர்களுக்கு சம்பத் வங்கியிடமிருந்து விசேட பரிவு

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

நிபந்தனைகள் உண்டு
0112 30 30 50 www.sampath.lk Sampath Bank Fitch Ratings AA-(lka)

புதியதோர் அத்தியாயத்தின் ஆரம்பம்

ஐடியல் பினான்ஸ்
இப்போது
மஹிந்த்ரா ஐடியல் பினான்ஸ்

பெயர் புதிதென்றாலும், மாறாத நம்பிக்கை

Ideal Finance உம், Mahindra Finance உம் கைகோர்த்து Mahindra Ideal Finance என்ற புதிய அமைப்பாக உருவெடுக்கின்றன. இவ்வமைப்பு இலங்கையில் புதிய நிதித் தயாரிப்புக்களையும், சேவைகளையும் தந்து, உயரும் வாடிக்கையாளர்களை வலுவூட்டும்

பரந்த கிளை வலைப்பின்னல்
Fitch தரப்படுத்தல் AA- (நிலையான உறுதிப்பாடு)
மாறாத நம்பிக்கை மற்றும் உயர்ந்த சேவை

எமது தயாரிப்புகள்
தங்கக் கடன்கள்
தனிப்பட்ட கடன்கள்
நுகர்வோருக்கான நிலையான கடன்கள்
வாகன லீசிங்

இலங்கை - BFSI இல் மிகச்சிறந்த 10 வேலைத்தளங்களில் ஒன்றாக (GPTW, 2021)

Hotline Number: 011 7 724 724

2011 இல. 42 நிதி வர்த்தக சட்டத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றது ஓ அனுமதி இல. (042) | கூட்டிணைவு சான்றிதழ் இல. PB 4963 (திகதி - 24/1/2021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை நிர்வகிக்க முடியாவிடில் அமெரிக்காவுக்கே செல்லுங்கள்

## ஆசிரியர் சேவை சங்கம் ஜனாதிபதிக்கு ஆலோசனை

**கொழும்பு,மார்ச் 20**

**நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாவிட்டால், இன்னொருவரிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு, தனது வாழ்விடமான அமெரிக்காவுக்கு ஜனாதிபதி செல்லவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அதிபர், ஆசிரியர் பிரச்சினைகளுக்காக எமது தொழிற்சங்கம் குரல் கொடுக்கும். எரிபொருள் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரே பேசியிருந்தோம். அதற்கு எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை. இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று வருவது தொடர்பில் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இன்று வரை அதற்கான தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை.

இதனால் நகரப் பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாகவுள்ளது.

இந்த வருடம் பாடசாலைகளின் வாயில்கள் திறக்கப்பட்டுள்ளபோதும் பாடசாலைக்குச் செல்வதற்கு வழியில்லாமல் உள்ளது.

இந்த அரசால் நாட்டைக் காப்பாற்ற முடியாது. நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதுள்ளது. அதனால் புதிய அரசைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

ஜனாதிபதியால் நாட்டைக் காப்பாற்றமுடியவில்லை. கொரோனாவால்தான் இந்த நாட்டில் பிரச்சினை என்று பொய் கூறுகின்றனர். ஜனாதிபதியின் இயலாமையாலேயே நாட்டுக்கு இந்த நிலைமை -என்றார். (ஒ-4-இ)

# சட்டவிரோத மது விற்பனை மானிப்பாயில் ஒருவர் கைது



மானிப்பாய், மார்ச் 20

மானிப்பாய் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சாவற்கட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் ஒருவர் கைதாகியுள்ளார்.

இதன்போது 540 மில்லிலீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டது எனவும் கைதானவர் அதே பகுதியைச் சேர்ந்த 48வயதானவர் எனவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.(வ-125)

# மக்களின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி பதவிவிலக வேண்டும்

## சாணக்கியன் எம்.பி வலியுறுத்து

மன்னார், மார்ச் 20

மக்களின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி பதவி விலகவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பாக காலியில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய உரையில், ஜனாதிபதியாக வருமாறு மக்கள் விடுத்த அழைப்பை ஏற்றே தான் ஜனாதிபதியாக அரசியலுக்கு வந்தேன் என்று சொன்னார்.

இன்று அனைத்து பிரதேசங்களிலும் 'கோ ஹோம் கோத்தா' (வீட்டுக்குச் செல்லுங்கள் கோத்தா) என்று மக்கள் சொல்கிறார்கள். அவர் மக்களுடைய கருத்தைக் கேட்டு அரசியலுக்கு வந்தவர் எனின் இன்று அதே மக்களின் கருத்தை ஏற்றுப் பதவி விலகவேண்டும்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக அவர் தனது உரையில் தெரிவித்திருந்தார். இதனைத்தான் நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் - என்றார். (வ-213)

# ராஜபக்ச அரசு இல்லாவிட்டால் நாடு முற்றாக அழிந்திருக்குமாம்

கொழும்பு, மார்ச் 20

தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருப்பதாலேயே நாடு இந்த மட்டத்திலாவது இருக்கின்றது. இல்லாவிட்டால் நாடு முற்றாக அழிந்து போயிருக்கும் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் செய்தவற்றுக்காக நாங்கள் இழப்பீடு செலுத்த நேரிட்டுள்ளது. எனினும் ஜனாதிபதி கூறியதுபோல், சவால்கள் வரும்போது கைவிட்டு ஓடிவிடமாட்டோம். சவால்களை எதிர்கொண்டு, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இது எமக்குப் புதிய விடயமல்ல. போர் நடைபெற்ற காலத்திலும் எதிர்க்கட்சிகள் இப்படியே நடந்துகொண்டன. அதையே தற்போதும் செய்கின்றனர். அதற்காகக் குற்றஞ்சுமத்தப் போவதில்லை. எங்களிடம் குறைகள் இருக்கின்றன. தவறுகள் இருக்கின்றன. அவற்றைச் சரிசெய்ய நாங்கள் நடவடிக்கை எடுப்போம்- என்றார். (எ-இ)

5 ஆம் ஆண்டு நினைவு

மண் உலகில் 26 . 01 . 1938



விண் உலகில் 20 . 03 . 2017

தெல்லிப்பளை வீமன் காமத்தினை பிறப்பிடமாகவும்
யாழ். மடம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி ஞானராசா பூமணி

அன்றைமை ஈன்ற பொழுது நீ கொண்ட சந்தோசம்
எம்மை காப்பதற்காய் நீ தாண்டிய தடைகள்
ஆயிரமாயிரம் எம் ஞாபகத்தில் மைந்தர்கள்
இருவரும் மறைந்தும் கல்லான உங்கள் நெஞ்சம்
காலப்போக்கில் காங்கணம் கட்டி சென்றதே...
மக்கட் பின் மாதவமாய் எமை பெற்ற மாதாவே நீங்கள்
மண் சுமந்து சென்று இன்று ஆண்டுகள் ஐந்து
கடந்தும் ...! விழிக் கடையோரம் இன்னும் காயாத ஈரம்
எமதன்பு சொல்லும் எம்மை ஆசீர்வதிக்க மண்ணோக்கி
பாரும் அம்மா... உங்கள் மூவரின் ஆன்மாவும் எங்கள் ஞாபகங்களின்
இருக்கில் உள்ளது உங்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காக விழி வழியும்
துளியுடன் உமது பிள்ளைகள்

Raveenthiran Vasanthy
432 / 6, Convent Road, Jaffna.
076 535 9438

(CS 18884) (2.6)

# ஜனாதிபதித் தேர்தலே தற்போதுள்ள தீர்வு!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

நாடு எதிர்கொள்ளும் இன்றைய நெருக்கடியில் தேர்தலுக்குச் செல்லவேண்டும் என்றால் முதலில் ஜனாதிபதித் தேர்தலையே நடத்தவேண்டும். கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக வைத்துக்கொண்டு எம்மால் அரசாங்கத்தைக் கொண்டுசெல்லமுடியாது. இன்றைய நெருக்கடிக்குத் தேசிய அரசாங்கம் தீர்வாக அமையாது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை வைத்துக்கொண்டு எமது அரசாங்கத்தை அமைத்துக்கொண்டால் எமது தீர்மானங்களை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி இடமளிக்கமாட்டார். இதற்கு முன்னரும் அவ்வாறான அனுபவம் எமக்குள்ளது.

முதலில் தற்போதைய ஜனாதிபதியை மாற்றி எமக்கான ஜனாதிபதி ஒருவரை நியமித்துக் கொள்ளவேண்டும். அதன் பின்னரே எமக்கான அரசாங்கத்தை அமைக்கவேண்டும். ராஜபக்சவினர் ஆட்சியில் நாட்டைச் சரியாக வழிநடத்துவோம் என்றனர். தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன், அபிவிருத்தியும் முன்னெடுக்கப்படும் என்றனர். ஆனால் இன்று சகல விதத்திலும் நாடு நாசமாகிக்கொண்டிருக்கிறது. ஒரு சிறிய நாடான எம்மால் விரைவாக அபிவிருத்தியை நோக்கிச் செல்ல முடியும். ஆனாலும் அவ்வாறு பயணிக்க முடியாதுள்ளது என்றால் எமது ஆட்சியாளர்களின் தவறான கொள்கையே அதற்குக் காரணமாகும்.

நாட்டுக்குத் தேவையானவற்றை நிராகரித்துவிட்டு அவசியம் இல்லாத விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே நெருக்கடிக்குக் காரணமாகும். முதலில் நாட்டில் ஜனநாயகத்தை உருவாக்க வேண்டும், சகல மக்களுக்கும் அவசியமானவற்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். தூய்மையான அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

குடும்ப ஆட்சி, பரம்பரை ஆட்சி ஆகிய கொள்கையை அரசியல்வாதிகளின் மனதில் இருந்து நீக்கவேண்டும். தேசிய அரசாங்கம் தொடர்பாகப் பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை, இன்றைய சூழ்நிலையில் தேசிய அரசாங்கம் தீர்வு அல்ல. தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதென்றால் ரணில் விக்கிரமசிங்கதான் பொருத்தமானவராக இருப்பார். அவர்கள் அனைவரும் ஒரே கூட்டணியாகவே உள்ளவர்கள்-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட அறிவித்தல்

கடந்த 32 வருட காலமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு கிளைகளுடன் இயங்கி வந்த ஈஸ்வரன் ரேடர்ஸ், ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேவிஸ், ஈஸ்வரன் பயணிகள் சேவை, ஈஸ்வரன் விரைவு பொதிகள் சேவை உட்பட எமது நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் மற்றும் சேவை தொடர்பாக ஆட்சேபனைகளோ அல்லது நிறுவனம் தொடர்பான கொடுக்கல் வாங்கல் முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் இம்மாதம் 31ஆம் (31.03.2022) திகதிக்கு முன்னராக எமது நிறுவனத்தின் தலைமைக் காரியாலயமான இலக்கம் 201B டாம் வீதி கொழும்பு - 12 அமைந்துள்ள ஈஸ்வரன் டேர்ஸ் நிறுவனத்துடன் நேரிலோ தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொண்டு தீர்த்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**ஈஸ்வரன் நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளர்**
**தியாகராஜா துவாரகேஸ்வரன்**
**தலைமைக் காரியாலயம்**
**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
**இல 201B டாம் வீதி,**
**கொழும்பு - 12**
**தொடர்புகளுக்கு**
**011 243 3889 / 011 243 5247**
**077 780 6573 / 077 780 6574 / 077 780 6583**

(CS 43657) (3/6)

## UK இல் கல்வி வாய்ப்பு

- 13 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- 13 வயது தொடக்கம் 17 வரையுள்ள மாணவர்களுக்கு உடன் விசா வழங்கப்படும்.

Grade 08 London → 4Years → O/L London → 2Years → A/L London → University UK
- Medicine
- Engineering
- IT & Others

தொடர்புகளுக்கு :
Tel : +94 74 229 3324 | Whatsapp : +44 7958 408 280
Email : principal@croydonmet.org.uk, joseph.vilvaraj@gmail.com

(CS 18897) (2.6)

## HIV தொடர்பான வேலைத்திட்டத்திற்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றை பங்காளராக இணைத்துக்கொள்ளல்

சுகாதார அமைச்சின் எயிட்ஸ் நோய்க்கட்டுப்பாட்டிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட பாலியல் நோய்கள் சிகிச்சை நிலையத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள HIV தடுப்பு தொடர்பான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த யாழ் மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றை இணைத்துக்கொள்ள விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**யார் விண்ணப்பிக்கலாம்?**

- தேசிய, மாகாண.மாவட்ட மட்டங்களில் HIV/AIDS பாலியல் சுகாதாரம் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான வேலைத் திட்டங்களில் அனுபவமும் ஆர்வமும் உடைய நிறு வனங்கள்.
- நிறுவனக்கட்டமைப்பு, நிதியியல் முகாமைத்துவம் மற்றும் கண் காணிப்பு, மீளாய்வு தொடர்பான விடயங்களில் வலுவான அமைப் பைக் கொண்டுள்ள நிறுவனங்கள்
- யாழ். மாவட்டத்தில் இருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆர்வமுள்ள நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 26.03.2022ம் திகதிக்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பாலியல் நோய்கள் சிகிச்சை நிலையம்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இல - 0212217756
ஈமெயில் - stdclinic.jaffna@gmail.com

(cs 436..)

*உற்சவத்தை முன்னிட்டு*

# தென்மராட்சி மக்கள் தடுப்பூசி பெற ஆர்வம்

சாவகச்சேரி, மார்ச் 20

தென்மராட்சியில் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலின் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கொரோனாத் தடுப்பூசியைப் பெறுவதற்கு மக்கள் ஆர்வமாகவுள்ளனர் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நாளை ஆரம்பமாகும் நிலையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் உற்சவத்தில் மற்றும் கோயிலில் நடமாடமுடியாது என்று கோயில் நிர்வாகத்தால் தடை விதித்து அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்தே உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக பெருமளவானோர் தடுப்பூசியைப் பெறுவதற்கு சாவகச்சேரி சுகாதார பணியகத்துக்கு சென்றுள்ளனர். அத்துடன் உற்சவத்தில் கலந்து கொள்பவர்களுக்கு நாளை சாவகச்சேரி சுகாதாரப் பணியகத்தில் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும் சாவகச்சேரி சுகாதாரப் பணியகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14.9)

## சுற்றுலா

USA/UK/FRANCE
CANADA / BAHAMAS

ஆகிய நாடுகளுக்கு குழு (GROUP) சுற்றுலா மற்றும் தனிப்பட்ட விஜயங்களுக்கான வீசா பெறுவதற்குரிய ஆவணங்கள் உரிய முறையில் ஒழுங்குபடுத்தல் ஆலோசனைகளுக்கு தொடர்புகொள்ள - பிரதீபன்

0114294245 | 0742530245

YAARL RESIEN | 4, Geethanjalee Pl, Colombo - 03
(CANADA / JAPAN VFS அலுவலக கட்டடம்)

## தேவை
### பயிற்றப்பட்ட பாலர் ஆசிரியை

க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்த, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பாலராசிரியருக்கான டிப்புளோமா பாட நெறியை நிறைவுசெய்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் சுயவிபரங்களுடன் 25.03.2022 முன்னர் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**இணைப்பாளர்,**
**29/1, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.**

(cs 43652) (2.6)

## விற்பனைக்கு

நீர்கொழும்பு நகரப்பகுதியில் மேன்ஷன் பிளேஸில் 10 பேர்ச் காணியில் வீடு விற்பனைக்கு உள்ளது. ஆவே மரியா பள்ளி, ஆவே மரியா மருத்துவமனை மற்றும் ஆயுர்வேத மருத்துவமனைக்கு ஐந்து நிமிட நடை டவுன் சென்டர் மற்றும் ரயில் நிலையத்திற்கு 10 நிமிட நடை மற்றும் பிரதான பேருந்து நிலையத்திற்கு 20 நிமிட நடை. உட்காரும் அறை. 4 படுக்கையறைகள், சமையலறை, ஒரு குளியல் மற்றும் ஒரு வெளிப்புற குளியலறை மற்றும் ஒரு ஸ்டோர் அறை. வீட்டில் சிமெண்ட் சிவப்பு தரை மற்றும் டைல்ஸ் வேயப்பட்ட குளியலறை LKR 19.5 மில்லியன்

(ACO 18185) (3/6)

**மொபைல் : 077 837 3874**

## தேவை

**செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு**
- **பெண் பராமரிப்பாளர்**
- **உளவளத்துணையாளர்**

உடன் தொடர்புகொள்ளவும்
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

**071 535 4500**

(CS ekn 11611) (2.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் அபவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றுபவரும் எமது பிரதேச செயலகத்தின் நலன்புரி சங்கத்தின் பொருளாளருமாகிய திரு. தர்மரத்தினம் ஜயந்தன் அவர்களின் அன்புத் தாயார்

**தர்மரத்தினம் கமலாவதி**

அவர்கள் கடந்த (17.03.2022) காலமாகிவிட்டார். தாயாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்,**
**பிரதேச செயலகம், வேலணை.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 01 - 01 - 1942



**மறைவு** 16 - 03 - 2022

**கனகலிங்கம் சிவக்கொழுந்து**

யாழ். சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட கனகலிங்கம் சிவக்கொழுந்து கடந்த (16.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக நீர்வேலி [illegible] இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS 18927) (4/6)

# ஆலயத்தில் 15பேர் கைது

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர திருவிழாவின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் 15 பேர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆலய வளாகத்தில் கத்தியுடன் சந்தேகத்திடமான முறையில் நடமாடிய இருவரும், 3 லட்சம் ரூபா பணத்தை உடைமையில் வைத்திருந்த மானிப்பாயைச் சேர்ந்த ஒருவரும், 2 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரும், சங்கிலியை அறுத்த சந்தேகத்தில் ஒருவரும், மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் குழு மோதலில் ஈடுபட்ட 9 பேருமாக 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ,113)

# பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை, மார்ச் 18

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கூட்டத்துக்கு பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் என்.ரி.எஸ். சுபநாதன் அறிவித்துள்ளார். (14)

# அதிகரிக்கும் யாசகர்கள்!

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், கடந்த இரண்டு மாதங்களில் கொழும்பு வீதிகளில் யாசகம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு நகரில் மாத்திரம் தற்போது சுமார் 300 யாசகர்கள் யாசகம் பெறுகின்றனர் என்று கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார். இதேவேளை மேல் மாகாணத்தில் மட்டும் 671 யாசகர்கள் தற்போது யாசகம் பெற்று வருகின்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

AD சாரதிப்பத்திரம் உள்ள ஆள் தேவை. (350 கண்டர்)

(CS 18922B) (4/6) யாழ்ப்பாணம்-077 358 3879

## வாகன விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Suzuki every carry lorry 2015 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட Model வெள்ளை நிறம் 50, 500km ஓடியது விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 920 9507

(CS 18921) (3/6)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலுக்கு அண்மையில் K.K.S வீதியிலிருந்து 600m மற்றும் கோயிலிருந்து 750m தூரத்தில் 2.8 பரப்பு, 3 பரப்பு, 6.8 பரப்புக் காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

(CS 43641) (3/6)

தொடர்பு 077 731 6487

## சிறுநீரகம் தேவை

O+ குறூப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

(CS 18935) (3/6)

077 547 5450 / 077 257 2057

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள பிரபல

**இந்தியன் (Indian)**

**உணவகத்திற்கு** கீழ்காணும் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆண் / பெண் வேலையாள்கள் தேவை.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

- Waiter (வெயிட்டர்)
- Billing & Cashier (பில்லிங் - காசாளர்)
- Dosai & Rotti (மேக்கர்)
- சமையலறை உதவியாளர்
- General & Table Cleaners

தேவையுள்ளவர்களுக்கு உணவு தங்குமிட வசதி வழங்கப்படும்.

(ACO 18191) (2/3)

077 462 3742 / 075 945 9999

No.3, Havelock Road, Colombo -5

## தேவை

வீடொன்றிற்கு ஜிப்சம் வேலை செய்வதற்கு ஆள் தேவை.

(CS 18922A) (4/6) யாழ்ப்பாணம்-076 821 9414

## காணி விற்பனைக்கு

அராலி தெற்கு, பிரதான வீதியில் 10 பரப்புக் காணியும் 1 வீட்டுடன் கூடிய காணியும் விற்பனைக்குண்டு.

(CS 118865) (2/6)

070 3204 276, 0049 1771 436 867

## பெண் வரவேற்பாளர்

Female Receptionist

கொழும்பு 6 இல் பெண் வரவேற்பாளர் தேவை, உள்ளூர் மற்றும் வெளிநாட்டினருக்கான முன்னணி தங்கும் விடுதி வழங்குபவர். உங்கள் விண்ணப்பத்தை 14 நாட்களுக்குள் அனுப்பவும்.

0776332580 Whats app செய்யவும்

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1979.02.07 மிருகசீரிடம், 2 ஆம் பாதம் பிறந்த நேரம் முற்பகல் 11.03, உயரம் 5.6', சொந்தமாக தொழில் நடத்தும் மணமகனுக்கு மணமகள் தேவை.

சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

(CS 43643) (2/6)

தொடர்பு: 076 550 1939

Viber: 075 841 4011

## Luxury Apartment For Sale

வெள்ளவத்தை காலி வீதிக்கு அருகாமையில்

**IBC Road ல் Under construction Apartments விற்பனைக்குண்டு.**

**2,3, 4 படுக்கையறைகள்**

**1500, 1400, 1200, 800 SQFT**

- **Bank Loan Arrange பண்ணித்தரப்படும்.**
- **Completion 2023 oct**
- **Interest Free மாத தவணை கட்டணம் ஒழுங்குபடுத்தி தரப்படும்.**

Royal T.Construction PVT Ltd.

(ACO 18190 B) (3/6) 077 522 2613

## வீடு வாடகைக்கு

நல்லூரில் வீடு வாடகைக்கு உண்டு.

(CS 187081) (3/6)

077 797 7924, 071 847 4710

## பணிபெண் தேவை

தமிழ் குடும்பம் ஒன்றிற்கு 40 வயதுக்கு மேற்பட்ட, சமைக்கத் தெரிந்த, வீட்டு வேலைகள் செய்யக் கூடிய, அனுவமுள்ள, குடும்பப் பொறுப்புக்கள் அற்ற பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உடன்தொடர்புகொள்க:

071 843 2017

## தேவை

கொழும்பு 13 ரில் பிரபல அச்சகத்திற்கு வேலை செய்ய பெண்கள் தேவை. தங்குமிடம் வழங்கப்படும் சம்பளம் நாள் ஒன்றுக்கு Day Shift 900 night Shift Rs 1000

(ACO 18187) (3/6)

தொடர்பு 077 815 2693

## PERSONAL CLASSESS

**ENGLISH**

**Grade 04 - 11**

(CS 43637) (3/6)

Contact :077 911 5962

## Apartment For Sale

Wellawatte Galle Road, அருகாமையில் IBC Road, இல் Under Construction Apartment விற்பனைக்கு **23 million, 3 Bed, 2 Bed, Rooms**

1200 SQ FT, 1150 SQ FT, 820 SQFt Bank Loan Arrarge செய்து தரப்படும் Completion - 2023 OCT

Interest Free. மாதாந்த கட்டணம் ஒழுங்கு படுத்தித் தரப்படும்.

(ACO 18190) (3/6)

Royal T.Construction PVT Ltd.

077 522 2613

## வீட்டுப் பணிப்பெண் தேவை

25-40 வயதுக்குட்பட்ட சமையல் தெரிந்த பணிப் பெண் தேவை

(CR 81241) (4/6)

077 758 9690

விஷேடமாக Non RC மற்றும் கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகளுக்காக உருவாக்கப்பட்ட

**திருமண இணையத்தளம்**

**www.kirubaimatrimony.com**

பதிவுகள் இலவசம்.

தொடர்புகளுக்கு

011 7732288 / 076 1972285

## நாய்கள் விற்பனைக்கு

**ஜேர்மனி சப்போர்ட்**

நாய்கள் (1 ஆண், 2 பெண், ஆறு மாத குட்டிகள்) விற்பனைக்கு உண்டு.

077 363 6129

## வீடு வாடகைக்கு

கொக்குவிலில் மருத்துவபீடத்திற்கு அருகில் சிறிய குடும்பத்திற்குரிய வீடு வாடகைக்கு உண்டு.

077 363 6129

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாண நகரையண்டிய பகுதியில் வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலை மற்றும் வீட்டு வேலைக்கு 45-55 வயதிற்கு இடைப்பட்ட ஆள் ஒருவர் தேவை

(CS 18914) (4/6)

077 803 8739

## பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் வசிக்கும் தமிழ்க் குடும்பத்திற்கு சிங்கப்பூர் செல்ல விரும்பும் தமிழ் வீட்டுப் பணிப்பெண் தேவை.

(CR 37680) (3/6)

Viber / whatsapp 0065 836 81295

இலங்கை 070 286 7694

SLIIT ACADEMY

In partnership with LIVERPOOL JOHN MOORES UNIVERSITY | University of Bedfordshire

பலதரப்பட்ட வாய்ப்புகளின் உலகத்தை நோக்கி ஒரு படி

**உங்களது க.போ.த உயர்தர பரீட்சையின்**

பிறகு SLIIT Academy யுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணை குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட Bedfordshire மற்றும் Liverpool John Moores பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடைய பலதரப்பட்ட இளங்கலை பட்ட படிப்பை நீங்கள் விரும்பியவாறு தொடரலாம்.

## 2022 மார்ச் உள்வாங்கல்

நிலுவையில் உள்ள க.பொ.த உயர்தர பரீட்சையின் முடிவுகளுடன் இப்போதே விண்ணப்பிக்கவும்



க.பொ.த உயர்தர பரீட்சையில் ஒன்று அல் லது இரண்டு தேர்ச்சிகளுடன், தகவல் தொழினுட்பம் / வணிகத்தில் வெளிநாட்டு பட்டம் ஒன்றை நீங்கள் பெறலாம்.

### பட்ட நிகழ்ச்சித்திட்டங் கள் 3 வருடங்கள்

- பிஎஸ்சி (ஹானஸ்) கணினி அறிவியல் மற்றும் மென்பொருள் பொறியியல்
- பிஎஸ்சி (ஹானஸ்) கணினி வலையமைப்பு
- பிஏ (ஹானஸ்) வணிக முகாமைத்துவம்
- பிஎஸ்சி (ஹானஸ்) மனிதவள முகாமைத்துவம் UOB
- பிஇடிக்ஜி (ஹானஸ்) மின்னணு மற்றும் மின் பொறியியல் LJMU

### குறைந்தபட்ச தகுதிகள்

**தகவல் தொழில்நுட்பம் / வியாபார நிர்வாகம்**

ஒரே அமர்வில் பெறப்பட்ட க.போ.த உயர்தர பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு S தேர்ச்சி.

**பொறியியல்**

கணிதம், தொழில்நுட்பம் அல்லது உயிரியல் பாடங்களின் கீழ் க.போ.த உயர்தர பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று S தேர்ச்சிகள். மூன்று தேர்ச்சிக்கு குறைவான மாணவர்கள் விசேட தேர்வு பரீட்சைக்கு உட்படுத்தப்படலாம்.

### தகுதி பரீட்சை

**26 மார்ச் 2022**

**முற்பகல் 10 மணியிலிருந்து 11 வரை**

13 ஆவது மாடி, BOC Merchant Tower, 28, செயிண்ட் மைக்கேல்ஸ் தெரு, கொழும்பு - 03

onlinegraphic.lk

மேலதிக விபரங்களுக்கு : 0772 66 55 55

www.sliitacademy.lk  sliitacademy@sliit.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## திருந்த இடமில்லை!

**நாய்** வாலை நிமிர்த்த முடியாது என்பது தமிழில் பிரசித்தமான ஒரு சொல்லாடல். அதற்கு சிறந்த உதாரணமாக இருப்பவர்கள் இலங்கையின் பௌத்த பேரினவாதச் சிந்தனையாளர்கள். ஒட்டுமொத்த இலங்கையும் தொங்குபறியில் இருக்கும்போதும் கூட, தங்கள் பௌத்த மேலாதிக்கச் சிந்தனையையும், சிறுபான்மையினர் மீதான அடக்குமுறையையும் அவர்கள் விடுவதாயில்லை.

யாழ்ப்பாணம் வந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர் நயினாதீவுக்கு நேற்று வழிபாட்டுக்குச் சென்றபோது, புதிய புனைவொன்றை அடித்துவிட்டிருக்கிறார்.நயினாதீவு புத்தர் வந்து சென்ற இடம் என்றும், அதனால் அங்குள்ள விகாரை விரிவுபடுத்தப்படும் என்றும் தன் கற்பனைக் குதிரையை இஷ்டத்துக்கும் பறக்க விட்டிருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச. இது மட்டுமல்லாது, கந்தரோடையில் புதிய விகாரை அமைப்பதற்கு அடிக்கல்லையும் அவர் நடவிருந்தார். ஆயினும் அங்கு தமிழ்த்தேசிய முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக இறுதி நேரத்தில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

நாடு இப்போது பெரும் நெருக்கடியில் இருக்கின்றது. இலங்கை முழுவதும் எரிபொருள், எரிவாயு மட்டுமின்றி அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. விலைகளும் தாறுமாறாக ஏறிக்கொண்டே போகின்றன. மக்கள் ஒவ்வொரு பொருளுக்கும் கொளுத்தும் வெயிலில் வரிசைகளில் நிற்கின்றனர். நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ அவைபற்றி வாயைத் திறப்பதற்கும் யோசிக்கின்றனர். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய திட்டங்கள் என்ன என்பதைப் பற்றி கிஞ்சித்தும் அவர்கள் கவலைப்படுவதாகவும் இல்லை. நாடுகளிடம் இருந்து கடன்களைப் பெறுவதே தங்களின் தலையாய கடமை என்றவாறு ராஜபக்ச குடும்பம் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றது.

நாடு பற்றியெரிந்து கொண்டிருக்கும் நிலையிலும், சிறுபான்மையினரான தமிழ் மக்களின் இருப்பில் கைவைக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது ராஜபக்ச அரசாங்கம். பிரதமர் மஹிந்த ராஜபக்ச இப்போது யாழ்ப்பாணம் வந்திருப்பது பௌத்த மதத்தை வடக்கில் காலூன்ற வைப்பதற்கேயன்றி, வடக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு இல்லை என்பதை அவரது நிகழ்ச்சி நிரல் புலப்படுத்துகின்றது. தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழும் மண்ணில் பௌத்த விகாரைகளை அமைத்து, தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை பௌத்த மயமாக்கும் நிகழ்ச்சி நிரலை ராஜபக்ச அரசாங்கம் இந்த நெருக்கடி நிலையிலும் கைவிடுவதாக இல்லை.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைப் பௌத்தமயமாக்கி, அவர்களின் கலாசார விழுமியங்களைச் சிதைத்து தமிழ் மக்களுக்கான நிலத்தை இல்லாமல் ஆக்கும் இரகசிய நிகழ்ச்சி நிரலையே பேரினவாத அரசாங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. தற்போதுள்ள ராஜபக்ச அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களை விட அதில் அதிகம் முனைப்புக் காட்டுகின்றது. அதில் ஓர் அங்கமே பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வருகையும், அவர் நயினாதீவில் கூறிய புத்தர் வந்ததான கட்டுக்கதையும் விகாரையை விரிவுபடுத்தும் திட்டமும்.

இலங்கை தற்போதுள்ள நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு நாட்டிலுள்ள அனைத்து மக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்பதை மேலாதிக்கச் சிந்தனையாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சிறுபான்மையினரை நசுக்கி வைத்துவிட்டு, இந்த நாட்டை மீட்டெடுப்பது என்பது கனவிலும் கைகூடாத காரியம். அதைவிடவும் இந்த நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு தமிழ் மக்களின்,குறிப்பாக புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பு இலங்கை அரசாங்கத்துக்கு அவசியமானது என்பதையும் ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். வெறுமனே கடன் வாங்குவதாலோ, விகாரைகளைக் கட்டுவதாலோ இப்போதுள்ள பிரச்சினைகள் தீரப்போவதில்லை. எனவே அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறியாமல், மீண்டும் மதவாதம், இனவாதம் என்பவற்றையே ராஜபக்சக்கள் கையிலெடுப்பது அவர்கள் இனியும் திருந்த இடமில்லை என்பதையே காட்டி நிற்கின்றது. திருந்த மறுப்பவர்களை காலம் திருத்தியெடுக்கும். திருந்துங்கள் இல்லையேல் திருத்தியெடுக்கப்படுவீர்கள்!

நாளொரு நல்வார்த்தை

உறுதியுடைய உத்தமர்க்கு உலகம் வளைந்து கொடுக்கிறது.
- ஏராஸ்மீஸ்




# அரசாங்கத்துக்கு எதிராக ஜே.வி.பி. புதனன்று போர்

கொழும்பு, மார்ச் 20

**பொருள்களின் தொடர் விலையேற்றத்தைக் கண்டித்தும், அரசு பதவிவிலக வேண்டும் என வலியுறுத்தியும் நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துவரும் நிலையில், ஜே.வி.பியும் பெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.**

எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு குறித்த போராட்டம் நுகேகொடையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் போராட்டத்தில் ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கங்களும், மாணவர் அமைப்புகளும், மகளிர் அமைப்புகளும் பங்கேற்கவுள்ளன.

திருமலை எண்ணெய்க் குதங்கள் உட்பட தேசிய வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவற்றைமீளப்பெறுமாறு வலியுறுத்தியும், நாட்டு மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ள அரசு பதவி விலக வேண்டும், இல்லையேல் தேர்தலுக்குச் செல்லவேண்டும் என அழுத்தம் வழங்கும் வகையிலுமே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

ஜே.வி.பியின் இளைஞர் அணியான சோஷலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில், "வேண்டாம் எண்ணெய் வரிசைகள்! இந்தியாவுக்குத் தாரை வார்த்த எண்ணெய்க் குதங்களையும், அமெரிக்காவுக்குத் தாரை வார்த்த யுகதனவியையும் மீளப்பெறு!" என வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றுமுன்தினம் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

# பின்வரிசை எம்.பிக்களும் அரசாங்கம் மீது அதிருப்தி

கொழும்பு, மார்ச் 20

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் ஆளுங்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

நாட்டு மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுப்பொறிமுறை விரைவில் முன்வைக்கப்படாவிடின் அவர்கள் அரசியல் தீர்மானமொன்றை எடுக்கக்கூடும் எனவும் அறியமுடிகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி உட்பட ஒரு சில பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவிர, ஏனைய ஆளுங்கட்சி பின்வரிசை எம்.பிக்கள் கடும் அதிருப்தியிலேயே உள்ளனர்.

"நாட்டு மக்கள் பட்டினியில் வாடுகின்றனர். எங்களுக்குச் சாபம் இடுகின்றனர். வீதியில் இறங்கிச் செல்ல முடியவில்லை. எனவே, தீர்மானம் எடுக்கும் இடத்தில் இருப்பவர்கள் உரிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தீக்கமான முடிவை எடுக்க நேரிடும்" என ஆளுங்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, சில அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் அரசின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி நிலையிலேயே உள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. (ம-44)

நாளை 21.03.2022 திங்கட்கிழமை பங்குனி 07
சுபநேரம் : 12.17 - 01.47
ராகுகாலம்: 07.47 - 09.17
சங்கடஹர சதுர்த்தி, சர்வதேச வனங்கள் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கிருஸ்ணபிள்ளை சரஸ்வதி

16/113, சீனியர் லேன் கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சரஸ்வதி நேற்று (19.03.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், ஸ்ரீமோகன் (அமரர்), ஸ்ரீறஞ்சினி (இந்தியா), ஸ்ரீதரன் (அமரர்), ஸ்ரீபவானி (வவுனியா), ஸ்ரீறஜனி (பிரான்ஸ்), ஸ்ரீநளினி (அமரர்), ஸ்ரீவசந்தி (அமரர்), ஸ்ரீமுகுந்தன் (கலட்டி), ஸ்ரீநந்தினி (பிரான்ஸ்), ஸ்ரீகுமார் (கலட்டி), ஸ்ரீவீரவிஜயன் (பிரான்ஸ்), ஸ்ரீஆனந்தரூபன் (கிளிநொச்சி), ஸ்ரீஅஜந்தினி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை அவரின் மகனின் இல்லத்தில் (இல.42, சீனியர் லேனில்) நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சீனியர் லேன், கலட்டி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

(CS 18951) 1/6

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை

(பரமேஸ்வரி ரீச்சர்)



இணுவில் கிழக்கு இளந்தாரிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை (பரமேஸ்வரி ரீச்சர்) அவர்கள் கடந்த (16.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா கனகமுத்துவின் மகளும், காலஞ்சென்ற ஏழாலையைச் சேர்ந்த சிவகுரு, கதிராசிப்பிள்ளையின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், முத்துலிங்கம் மற்றும் இராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கௌரி மற்றும் திருவருள், அருள்மொழி, வளர்மதி, மாதுமை ஆகியோரின் அன்புத்தாயாரும், சுந்தரமூர்த்தி, சுரேசன், பாமா, உமா, கேதீஸ்வரன் மற்றும் அருள்வேணி ஆகியோரின் அன்பு மாமியாரும், மாறன், டினோஜன், சைந்தவி, கனிமொழி, கௌசிகன், ஆதவன், கோபிசரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 18942) (4/6)

இளந்தாரி கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவில். 076 241 2350

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கோபாலகிருஸ்ணன் செல்வநாயகம்



(இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் -காங்கேசன்துறை)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலகிருஸ்ணன் செல்வநாயகம் அவர்கள் நேற்று (19.03.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணன் ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லீலாவதியின் அன்புக் கணவரும், தட்சாகிரியின் அன்புத் தந்தையும், சிவனேசம், செல்வராணி, லோகராசா, அமரர் தேவராசா, விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தோற்றம் 23.05.1951

மறைவு 19.03.2022

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

(CS 18953) (4/6)

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம்: 15.06.1953 மறைவு: 18.03.2022

## சந்திரசேகரம் இரஞ்சிதமலர்

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரசேகரம் இரஞ்சிதமலர் அவர்கள் கடந்த (18.03.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் செல்லத்துரை சந்திரசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சசிகரன், கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதர்சினி, காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியும், மதுரஜன், மிதுன்ஜா, அம்ஷனா, நட்சத்திரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், விக்னேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் உதயகுமார் ஜெயக்குமார், செல்வகுமார், காலஞ்சென்ற ராகினி மற்றும் ரஜனி, சதீஸ்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சசிகரன்
077 899 3687

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18941) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெய் தரக்கோரி மாவட்டச் செயலருக்கு மனு

மன்னார், மார்ச் 20

மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்தில் தமது அன்றாட தேவைகளுக்கு மண்ணெண்ணெயைப் பெற்றுத்தருமாறு மன்னார் மாவட்டச் செயலருக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

கடந்த வியாழக்கிழமை இரவு குறித்தஎரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் நின்றனர். எனினும் அதிகமானவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை.

ஆனால் தொழில் நடவடிக்கைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுமார் 20 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

இதனால் எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய் அடுப்பைப் பயன்படுத்துகின்றவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாமல் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே மக்கள் தமது அன் றாடத் தேவைகளுக்கு மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள துரித நடவடிக்கைகளை மாவட்டச் செயலர் மேற்கொள்ள வேண்டும் என்றனர். (ஒ-14-56)


## தேங்காய் துருவுவதற்கு வேலை ஆட்கள் தேவை

இருபாலையில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றுக்கு இயந்திரத்தில் தேங்காய் துருவுவதற்கு வேலையாட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) அனுபவ முள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.** (CS 18959) (4/6)

தொடர்புகளுக்கு:- **077 986 2649**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் நிரந்தர குடியுரிமை உடைய, உயர் தொழில், 32 வயது, திருவோண நட்சத்திரம் உடைய மணமகனுக்கு படித்த, அழகிய, பொருத்தமான மணமகள் தேவை.
(சீதனம் எதிர்பார்ப்பு இல்லை).

**077 6740 469**

## மணமகள் தேவை

ஜேர்மனியில் பிறந்து நல்ல உத்தியோகத்திலுள்ள ஜேர்மன் குடியுரிமையுள்ள 36 வயது, உயரம் 6' 1" அழகான ஜேர்மன் பல்கலைக்கழக பட்டதாரி, இந்து மணமகனுக்கு அழகான, மெல்லிய உயரமான 31 வயதுக்குட்பட்ட மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். இலங்கை அல்லது வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். (CS 00980) (4/6)

**074 291 8981**

## மணமகள் தேவை

1990 இல் பிறந்த திருவாதிரை, மிதுன ராசி கிரக பாவம் 51, உயரம் 5' 2" உயர் கல்வி படித்து இலங்கையில் உள்ள வெளிநாட்டு தொண்டு நிறுவனம் ஒன்றில் (NGO) பணிபுரியும் இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு மணமகள் தேடுகின்றோம்.
**(G.C.E A/L வரை படித்திருப்பது விரும்பத்தக்கது)**

**074 278 1597** (CS 18945) (4/6)

## Immediate Vacancies



Sarukaya construction (pvt) ltd, is a CIDA C4 Graded construction company with over 12 years Experiences, engaged in Building & Water supply project in Northern province.

### Technical Officer (Civil)

- HNDE NCT or Equivalent (NVQ Level 5, IVQ Level 6 etc)
- 2 Years Experience in Building, Project

Please forward your CV with details to **vacancynsc@gmail.com** with two non related referees in 7 Days.

CS 18943(3x5)1-6

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

30 நாட்கள் நிரம்பிய கிறேட்டேன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (CR 8129) (4/6)

**077 179 1963**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். வைமன் வீதியில், யாழ். பிறவுண் வீதியிலும் இரு வீடுகள் வாடகைக்கு உண்டு. (CS 18955) (4/6) **077 723 2535**

## காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சியில் விவேகானந்தர் நகர் வீதியில் உள்ள வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. இலக்கம் 163 1/4 ஏக்கர் உள்ளது. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். (CR 8126) (4/6)

**076 968 2646**

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு கட்டைப்பிராய் சின்னக் கோயில் வீதியில் 3 பக்க மதில்களுடன் கூடிய இடைக்கால வீட்டுடன் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்க. (CS 18949) (4/6)

**077 072 6782**

## வேலையாட்கள் தேவை

A9 வீதி முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
காசாளர், சிட்டை எழுதுனர், உணவு தயாரிப்பவர், உணவு பரிமாறுபவர், உணவு பொதிசெய்பவர், சுத்திகரிப்பாளர் போன்ற பதவிகளுக்கு உடன் தேவை. ஆர்வம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: **077 386 6250**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

**க.பொ.த (உ/த) 2021 பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்**

**இறுதிப்பிரிவு 37**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

■காலம்:- 3 மாதங்கள் ■சான்றிதழ் வழங்கப்படும்.

**ஆரம்பம்: 26/03/2022 , 10.00AM**

குறிப்பு
- மாணவர்கள் விரும்பியகற்கைகளை தொடர முடியும்.
- அச்சடித்த பாடக்குறிப்புகள்
- மாதாந்த மதிப்பீடுகள்.

IPS to Your Future
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229
076 685 2529
Email- degreeinfo21@gmail.com


## மரண அறிவித்தல்



### கனகர் நடராசா

**(ஓய்வுநிலை மருத்துவர், T.K.நடராசா R.M.O)**

கரவெட்டி தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் நடராசா நேற்று (19.03.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர் செல்லாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், தவமணி, விமலராசா (பொலிஸ் சாயன்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலைவாணியின் பாசமிகு கணவரும், அன்பரசன் (முகாமையாளர், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), அன்புமதி, காலஞ்சென்ற அன்பழகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தெல்லிப்பளை), செந்தூரன் (ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீசங்கவி, ஸ்ரீசாம்பவி, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
0777241026

**சண்டில் வீதி, கரவெட்டி.** (CR 8127) (4/6)

# ஊடக சுதந்திரத்தை அடக்கியாள முடியாது

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்



FMM
நிදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

கொழும்பு, மார்ச் 20

ஊடக சுதந்திரத்தை அடக்கியாள ஊடக உரிமையாளர்களுக்கோ அல்லது அரசியல் அதிகாரிகளுக்கோ இடமளிக்க முடியாது என்று சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர். துமிந்த சில்வா ஊடகப் பணியிலிருந்து விலகுமாறு ஊடகவியலாளர் ராகுல் சமந்த ஹெட்டியாராச்சிக்கு தொலைபேசியூடாக அழுத்தம் கொடுத்துள்ளார். அம்பலாந்தோட்டை மணல் கடத்தல் காணொலிக் காட்சிகளை அறிக்கையிட வேண்டாமெனவும் அவரிடம் கூறியுள்ளார். அந்தத் தொலைபேசி அழைப்பின் ஒலிப்பதிவு சுதந்திர ஊடக இயக்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது துமிந்த சில்வாவின் இலக்கம் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரச நிறுவனமொன்றின் தலைவர் மற்றும் சக்திவாய்ந்த அரசியல் தொடர்புகளைக் கொண்ட துமிந்த சில்வா, பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திராவின் கொலைக் குற்றத்துக்கு சிறைத்தண்டனை அனுபவித்துக்கொண்டிருந்த வேளையில், ஜனாதிபதி மன்னிப்பில் விடுதலை அடைந்த பின்னணியில், இவ்வாறானதொரு சம்பவத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஊடகவியலாளர் ஒருவர் மீது இவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பதானது இலங்கையில் ஊடக சுதந்திரம் தொடர்பில் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்ளும் அநாகரிகமான ஒரு சம்பவம். இந்த விடயம் தொடர்பில் அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் -என்றுள்ளது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper


உக்ரைனும் ஒமிக்ரோனும் நடத்துற கூத்தால
பக்கெண்டு ஏறுது விலையெல்லாம் காத்தில
நக்கிற நாய்க்கு டொலரென்ன, ரூபாவென்ன?
விக்கிறம் எல்லாத்தையும் , 'பதிலா கடன் குடு சர்வதேசமே!

— ஒட்டுக்குழுச் சுவாமிகள்

சஞ்சீவி

பக்கங்கள்: 12

வள்ளுவர் ஆண்டு : 2053 | பங்குனி 6 | ஞாயிற்றுக்கிழமை 20.03.2022 | சிகரம் : 91






# கோத்தாபய கூட்டமைப்பைப் பேச அழைக்கிறார்?

○ நிலாந்தன்

கடந்த புதன்கிழமை கோத்தாபய கூட்டமைப்பைச் சந்திக்க நேரம் ஒதுங்கியிருந்தார். எனினும் அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது. அது 25ஆம் திகதி இடம்பெறலாம் என்று தெரிகிறது. இந்தச்சந்திப்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்திருந்தது. அதற்கு ரெலோ ஒரு விளக்கக் கடிதத்தை ஏற்கனவே அனுப்பியிருந்தது.

பதவியேற்றதிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக கோத்தாபய கூட்டமைப்போடு பேசப்போவதாக இடைக்கிடை கூறி வருகிறார். ஆனால் இன்றுவரையிலும் பேச்சுவார்த்தைகள் நடக்கவில்லை. இம்முறை பேச்சுவார்த்தை கடைசிவேளை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. முன்னைய அழைப்புக்களைப் போலன்றி இம்முறை பேச்சுவார்த்தை மெய்யாகவே நடக்குமாக இருந்தால், ஜனாதிபதி அவ்வாறு பேச முன்வருவதற்கு சுட்டிப்பாக பின்வரும் காரணங்கள் இருக்கமுடியும்

இலங்கைத் தீவு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா குறிப்பிட்ட தொகையை கடனாக வழங்கியிருக்கிறது. அதற்குப் பிரதியுபகாரமாக திருகோணமலையின் சம்பூரில் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டம் ஒன்றை நிறுவுவதற்கு இந்திய நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதுபோலவே மன்னாரிலும் பூநகரியிலும் இருவேறு மின்சக்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதாவது இந்தியா கடனைக் கொடுத்து கொழும்பின் மீது தனது பிடியை இறுக்கி வருகிறது. இதன் விளைவாக இந்திய அரசாங்கத்தை திருப்திப்படுத்த வேண்டிய ஒரு நிலைமை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கலாம். குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசாங்கம் என்ன கேட்கிறது? 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாக வைத்து ஒரு தீர்வை வழங்குமாறு கேட்கிறது. உடனடிக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்றும் கேட்கிறது. எனவே இதுவிடயங்கள் தொடர்பாக தமிழ்த் தரப்புடன் ஒரு சமரசத்துக்கு வருவது போன்ற ஒரு தோற்றத்தை காட்டவேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு.

மேலும், இம்மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் கொழும்புக்கு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. இந்தியப் பிரதமர் மோடியும் கொழும்புக்கு வரக்கூடும் என்ற ஊகங்கள் அதிகமாக உள்ளன. அவர் இந்தியாவில் இருந்து நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வருவார் என்றும் பலாலி விமான நிலையத்தில் இறங்குவார் என்றும் ஊகங்கள் உண்டு. ஆனால் இந்தியா தனது பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சரின் இலங்கை விஜயத்தை இன்றுவரையிலும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கவில்லை.

இலங்கைத்தீவின் வடபகுதியோடு இந்தியாவை இணைக்கும் நான்கு அபிவிருத்தித் திட்டங்களை இந்தியா ஏற்கனவே முன்மொழிந்தது. பலாலி விமான நிலையம், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து, மூன்றாவது யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட் டுள்ள கலாசார மண்டபம், நாலாவது மன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்கு ஒரு பயணிகள் படகுச் சேவை.

இதில் பலாலி விமான நிலையம் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் அவருடைய பதவிக்காலம் முடியும் கடைசிநேரத்தில் அவசர அவசரமாகத் திறக்கப்பட்டது. அடுத்த தேர்தலில் ராஜபக்சக்கள் வெல்லக்கூடும் என்ற எதிர்பார்ப்பின் பின்னணியில் இந்தியாவின் தூண்டுதலால் ரணில் அவ்வாறு அவசர அவசரமாக பலாலி விமான நிலையத்தை திறந்தார் என்று அப்பொழுது கருதப்பட்டது. அது ஒரு சிறிய விமான நிலையம். உள்ளூர்ப் போக்குவரத்துக்குரிய வசதிகளைத்தான் கொண்டிருக்கிறது. 70 பயணிகள் பயணம் செய்யக்கூடிய சிறிய விமானங்கள்தான் அதில் வந்து இறங்கலாம். எனவே விமான நிலையத்தை அடுத்தகட்டத்துக்கு விஸ்தரித்து சர்வதேச விமானச் சேவைகளை தொடங்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்த்தது. அதற்கு வேண்டிய நிதியையும் இந்தியா வழங்கக் காத்திருக்கிறது. ஆனால் பெருந்தொற்று நோயைக் காரணம் காட்டி கோத்தாபய அரசாங்கம் விமான நிலையத்தைத் திறப்பதை தொடர்ந்து ஒத்திவைத்து வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி அந்த விமான நிலையம் மறுபடியும் இயங்கத் தொடங்கும் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. இப்படி பல தடவை அறிவிக்கப்பட்டுவிட்டது. இலங்கை அரசாங்கம் அந்த விமான நிலையத்தை விஸ்தரிக்கவும் திறக்கவும் பின்னடிக்கின்றது. ஏனெனில் பலாலி விமான நிலையம் அமைந்திருப்பது இலங்கைத்தீவின் வட பகுதி இராணுவ தலைமையகத்தில் . வடபகுதி படைத்துறை கட்டமைப்பின் இதயமான பகுதியில் ஒரு விமான வழியைத் திறப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவுகளைப் பொறுத்தவரை இராணுவமய நீக்கம்தான். ஏனெனில் ஒரு படைக் கட்டமைப்பின் கேந்திரமான இடத்தில் சிவில் போக்குவரத்தை அனுமதிப்பது என்பது அவ்வாறான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். எனவே இந்த விடயத்தை இலங்கை அரசாங்கம் தன் படைத்துறை நோக்கு நிலையிலிருந்தே பார்க்கும். அதனால்தான் விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்கும் திறப்பதற்கும் பின்னடிக்கிறது.

அடுத்தது காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவை. அதற்குத் தேவையான பெரிய கப்பல்கள் இந்தப்பிராந்தியத்தில் இல்லை என்றும் அவை பிராந்தியத்துக்கு வெளியிலிருந்து வாடகைக்கு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறான படகுச் சேவை ஒன்றைத் தொடங்குவதற்கான வர்த்தக உடன்படிக்கை இலங்கை மற்றும் இந்தியக் கொம்பெனிகள் இரண்டுக்கிடையே கடந்த ஆண்டு மார்ச் மாதம் எழுதப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை மிகவும் பாராட்டி பாரதிய ஜனதாவின் தமிழ் நாடு முக்கியஸ்தரான வானதி சீனிவாசன் தனது ருவிட்டரில் ஒரு குறிப்பை போட்டிருந்தார். அவர் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினரும்கூட. அந்தக்கப்பல் சேவையை எதிர்பார்த்து காரைக்கால் துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கப்பல் சேவையை தொடங்குமாறு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள்

13

> மோடியின் வருகை, ஜெய்சங்கரின் வருகை போன்றன இன்றுவரையிலும் ஊகங்கள்தான். ஆனால் நெருக்கடி காலத்தில் இந்தியா இலங்கைக்கு கடன் கொடுக்கிறது. அதற்குப் பிரதியுபகாரமாக இலங்கை, இந்தியாவைத் திருப்திப்படுத்தும் உடன்படிக்கைகளுக்குத் தயாராகிவிட்டது. தமிழ்த் தரப்போடு பேச்சுக்குத் தயார் என்று காட்டுவதும் அந்த நோக்கிலானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய நிதியுதவி யாருக்கு?

அ.நிக்ஸன்

இந்தோ - பசுபிக் பாதுகாப்புக்காக இலங்கையைச் சீனக்கடன் பிடியில் இருந்து மீட்க வேண்டுமென்ற அமெரிக்க-இந்திய மூலோபாயங்களில் ஒன்றான, அரையும் குறையுமான 13 ஐ ஈழத்தமிழர்களின் தலையில் கட்டிவிடும் ஏற்பாடு உறுதியாகியுள்ளது போல் தெரிகின்றது.

இந்தோ- பசுபிக் பாதுகாப்புப் பின்னணியில் ஜெனிவா மனித உரிமைச் சபையில் இருந்து இலங்கையை மீட்கும் பணியில் ஈடுபட்டு வரும் அமெரிக்க-இந்திய அரசுகள், அதன் நீட்சியாகவே இலங்கைக்கு 2.4 பில்லியன் நிதியை வழங்க இணங்கியுமுள்ளன. கடந்த ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற ஜி-7 மாநாட்டில் இந்தியா மூலமாக பெருமளவு நிதியுதவிகளை இலங்கை மியான்மர் போன்ற நாடுகளுக்கு வழங்குவதெனப் பரிந்துரைக்கப்பட்டது. இதன் பின்னணியிலேயே இந்த ஆண்டு இலங்கைக்கு உதவியளிக்கப்படுகின்றது போலும்..

2.4 பில்லியன் டொலரை வழங்கவுள்ளதாக இந்தியா வழங்கிய உறுதிமொழிக்கு ஏற்ப முதலில் ஒரு பில்லியனை வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்திலேயே இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரை சென்ற வியாழக்கிழமை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச சந்தித்து உரையாடியுள்ளார். அந்த உரையாடலின் பின்னர் தமிழ்-முஸ்லிம் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கில், வளமுள்ள பிரதேசங்களை இந்தியா கையாள்வதற்குரிய வசதிகளுக்கான வாக்குறுதிகளையும் பஸில் ராஜபக்ச நேரடியாகவே வழங்கியுமுள்ளார். இதனையடுத்தே இலங்கைக்கு ஒரு பில்லியன் நிதியுதவி வழங்கும் ஒப்பந்தத்தில் இந்தியா ,இலங்கையுடன் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த நிலையில் செப்ரெம்பர் கூடவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கு ஆபத்தற்ற சாதக நிலை இருப்பதாகவே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேயும் கொழும்பில் செய்தியாளர்களிடம் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக புதுடில்லியும் , கொழும்பும் செய்திக் குறிப்பை வெளியிட்டிருந்தாலும் முழுமையான விபரங்கள் அதில் இல்லை. ஆனாலும் டில்லி உயர்மட்டத் தகவல்கள் சில விடயங்களைக் கசிய விட்டிருக்கின்றன.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் அமைச்சர் பஸில் ராஜபக்ச புதுடில்லிக்குச் சென்று வந்ததன் பின்னர், ஜனவரி முதல், 1.4 பில்லியன் டொலரை கொழும்புக்கு இந்தியா வழங்கியுள்ளது. இதில் 500 மில்லியன் டொலர், 400 மில்லியன் நாணயப் பரிமாற்றம் மற்றும் ஆசிய கிளியரிங் யூனியனுடன் (Asian Clearing Union) கடன் ஒத்திவைப்புக்காக 500 மில்லியன் டொலர் வழங்கப்பட்டிருக்கின்றது. 2.4 பில்லியன் டொலர் வழங்குவதாக இந்தியா கடந்த டிசெம்பர் மாதம் உறுதியளித்திருந்தது. ஆனால் ரஷ்ய- உக்ரைன் போர் ஆரம்பித்ததால் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நடவடிக்கை பிற்போடப்பட்டது. இருந்தாலும் இன்று வியாழக்கிழமை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் அதி உச்ச விருப்பம் என்று பஸில் ராஜபக்சவிடம், ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் சில தமிழ்த்தேசியக் கட்சிகள் குறைந்த பட்சமாகக் கோருகின்ற முழுமையான சமஷ்டி ஆட்சி முறை பற்றிக்கூட அங்கு பேசியதாகத் தெரியவில்லை. 13 பற்றிய விவகாரமும் சும்மா ஒப்பாசாரத்துக்காகப் பேசப்பட்ட ஒன்றே. பஸில் ராஜபக்சவுடன், இந்தியாவின் புவிசார் அரசியல் நலனுக்காகப் பேரம் பேசப்பட்ட விவகாரங்களே அதிகமாகத் தென்படுகின்றன. ஏலவே கொழும்புடன் பேரம் பேசி இணங்கிய விடயங்களையே பஸில் ராஜபக்ச டில்லியில் நேரடியாகத் தலையசைத்திருக்கிறார்.

குறிப்பாகச் சீனாவை மையமாகக் கொண்ட இந்தோ= பசுபிக் பாதுகாப்புக்காகத் தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசங்களான வடக்கு, கிழக்கில் பல பிரதேசங்களைத் தாரைவார்ப்பதற்கான ஒப்புதலுடனேயே ஒரு பில்லியன் டொலரை நிதியுதவியாகப் பெறுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றதென டில்லிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. 2.4 பில்லியன் தொகையில், முதற்கட்ட உதவிக்காக நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக கொழும்பில் உள்ள நிதியமைச்சு கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளது. ஆனால் விபரங்கள் எதுவுமே கூறப்பட்டிருக்கவில்லை. திருகோணமலை துறைமுகத்தைச் சுற்றி இந்தியாவின் மூலோபாய நலன்களை வலுப்படுத்தும் கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவது தொடர்பாக இலங்கை-இந்தியாவுக்குத் தனது எதிர்ப்பின்மையை வெளிப்படுத்தியிருக்கின்றது.

## இலக்கு வைக்கப்பட்ட தமிழர் தாயகம்

அத்துடன் திருகோணமலை துறைமுகச் சூழலில் கப்பல் பழுதுபார்க்கும் தளம் ஒன்றை நிறுவுவதற்கும் அமெரிக்க கடற்படையின் முயற்சியான பஹ்ரைனை தளமாகக் கொண்ட உளவுத்துறை பகிர்வு அலுவலகத்தில் (Intelligence Fusion Centre) கடற்படை அதிகாரி ஒருவரை நியமிக்கவும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலையிலுள்ள சம்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மன்னார், பூநகரி மற்றும் நெடுந்தீவு பகுதிகளில் சூரிய சக்தி திட்டங்களை மேற்கொள்ளவும் இந்தியாவுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது அதற்குரிய வேலைத் திட்டங்களை அதானி குடும்பத்துக்கு வழங்க விருப்பம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் வணிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தைப் பயன்படுத்தவும் இலங்கை உடன்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் கலாசார திட்டங்களைச் செயற்படுத்தவும் இந்தியாவுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே இலங்கை தற்போது எதிர்நோக்கியிருக்கும் நிதி நெருக்கடியைப் பயன்படுத்தி அமெரிக்க- இந்திய அரசுகள் தமது இந்தோ=பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களையே முன்னிலைப்படுத்தும் என்பது ஏலவே தெரிந்த ஒன்றுதான். ஆனாலும் இலங்கைத் தீவின் நெருக்கடிக்குக் காரணமான உண்மைக் காரணிகளைக் கண்டுபிடித்து நிதியைக் கையளிக்கும் நிலையில் அமெரிக்க - இந்திய அரசுகள் இல்லை. இருந்தாலும் இந்தியாவைப் பொறுத்தவரை அயல்நாடு என்ற அடிப்படையில் ஒப்பாசாரத்துக்காக 13 பற்றிப் பேசிவிட்டு முற்றுமுழுதாகத் தனது அரசியல், பொருளாதார நலன்களை அதுவும் இலங்கையில் சீன ஆதிக்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை மையப்படுத்தி வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் இந்திய முதலீடுகள் என்ற போர்வையில், தமிழர் பிரதேசங்கள் இந்தியக் கண்காணிப்பில் கொண்டு வரப்பட்டுள்ளதெனலாம். இதற்காக இந்திய-இலங்கை ஒப்பந்தம் நன்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஆகவே ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் 13 ஐ வலியுறுத்தி இந்தியப் பிரதமருக்குக் கையளித்த கடிதத்தின் அறிவுறுத்தல் அரசியல் (Instruction politics) இப்போது பலருக்கும் புரிந்திருக்கும். சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச புதன்கிழமை இரவு இலங்கைத்தீவு மக்களுக்கு வழங்கிய தனது உரையில் கூறியிருந்தார். ஆனால் பஸில் ராஜபக்ச டில்லியுடன் உரையாடிய பின்னர் இந்தியா வழங்கியுள்ள நிதியுதவி மற்றும் வழங்கவுள்ள நிதியுதவிகளுக்கான பேச்சுக்களின் அணுகுமுறையை நோக்கினால் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கையைப் பிணை எடுப்பது போன்றதொரு தன்மையை காண முடிகின்றது. இலங்கையிடம் இருந்து இந்தியா உத்தரவாதங்களைப் பெற்றிருக்கின்றதே தவிர இலங்கைக்கு நிபந்தனைகள் எதனையும் விதித்ததாகத் தெரியவில்லை. இந்தியத் திட்டங்களுக்கு இலங்கை அனுமதியளித்துள்ளது. இந்தியாவின் அயல்நாட்டு முதற்கொள்கை மற்றும் கடல்சார் அதாவது பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்ற கோட்பாட்டில் இலங்கைக்கு முக்கிய பங்கு உண்டு என்று பிரதமர் மோடி கூறியிருக்கிறார். பௌத்த மற்றும் இராமாயணச் சுற்றுலாக்களை கூட்டாக ஊக்குவிப்பது உட்பட, இருதரப்பு சுற்றுலாப் பயணிகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் மோடி இந்த ஒப்பந்தத்தின் பின்னர் வெளியிட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி மற்றும் காங்கேசன்துறையில் உள்ள இரண்டு 'இணைப்பு' திட்டங்களை விரைவாக முடிக்க இலங்கைக்கு இந்தியா 'அழுத்தம் கொடுப்பதாக' இந்திய உயர்மட்ட அதிகாரியொருவர் கூறியுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் (indianexpress.com) என்ற ஆங்கிலச் செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது. தமிழர் தாயகமான் வடமாகாணத்தில் உள்ள தலைமன்னார் மற்றும் தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் இடையே படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்தும் இந்திய= இலங்கை அரசுகள் பரிசீலிக்கின்றன.

பலாலி விமான நிலைய ஓடுபாதையின் ஒரு பகுதி மறுசீரமைப்புக்குப் பின்னர் 2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சென்னையில் இருந்து பொதுமக்கள் விமானங்களுக்கு திறக்கப்பட்டது. ஆனால் கொவிட் 19 தொற்றுநோய்த்தாக்கத்தால் அது மூடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கப்படும் பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதை வசதியை மீண்டும் திறப்பதற்கான அறிகுறியை இலங்கை இதுவரை வெளிப்படுத்தவில்லை. ஆனாலும் பலாலி விமான நிலைய ஓடுபாதை மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்னர் அதன் நீளத்தை அதிகரிக்க இந்தியா உதவியது மேலும் ஓடுபாதை மேம்பாட்டுக்கு உதவுவதாக இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டு இரு நாடுகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இதனையடுத்து எக்ஸிம் வங்கி சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், விரிவானத் திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கும், புவிசார் மற்றும் இட அமைவுகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் மற்றும் சிதைவுகளை அகற்றுவதற்கும் நிதி வழங்கியது. ஆனால் அந்தத் திட்டத்தில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை.



2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரானவொரு சூழலிலேயே இந்தியா இந்தத் திட்டங்கள் குறித்துக் கூடுதல் கவனமும் செலுத்தியிருந்தது. மற்றொரு திட்டமான திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணையின் கூட்டு அபிவிருத்திக்கான ஒப்பந்தத்தில் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இந்தியாவும், இலங்கையும் கையெழுத்திட்டிருந்தன.

இதன் பின்னணியிலேயே ஈழத்தமிழர் விவகாரத்தை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் திட்டத்தை இந்திய மத்திய அரசு வகுத்திருக்கின்றது. அதாவது சிங்கள மக்கள் கோபப்படாத அணுகுமுறையையும் ஈழத்தமிழர்கள் எப்படியாகிலும் திருப்திப்படுத்திவிடலாமென்ற நம்பிக்கையோடும் இந்தியா இந்தத் திட்டத்தை முன்னெடுத்திருக்கின்றது. ஆகவே கடந்த ஆண்டு ஜூன் மாதம் நிதியமைச்சர் பதவியை ஏற்பதற்கு முன்னர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பஸில் ராஜபக்ச அங்கிருந்து சுமந்திரன் மற்றும் சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளோடு உரையாடியதன் தொடர்ச்சியாகவே இதனை அதவதானிக்க வேண்டும்.

குறிப்பாக 13 பற்றி செல்வம் அடைக்கலநாதன் நடத்திய பேச்சுக்களும் சுமந்திரன் தலைமையிலான குழு அமெரிக்காவுக்குச் சென்று வந்ததன் பின்னணியும் மற்றும் சுமந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் சில உறுப்பினர்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தமிழகம் சென்று வந்ததையும் நோக்க வேண்டும்.

ஆகவே தமிழர் ஒரு தேசமாகச் சிந்தித்து ஒருமித்த கருத்துடன் ஒன்றுபடாதவரை வல்லரசுகளின் இப்படியான புவிசார் நலன் அரசியல் நகர்வுகளுக்குள்ளேதான் தமிழர்களின் அரசியல் விடுதலையும் அமுங்க வேண்டிய ஆபத்தானதொரு நிலை தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ தி.கோபிநாத்

1898, 1899 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட உயர்நீதிமன்ற வழக்காக நடைபெற்று முடிந்த அழகம்மா கடத்தல் வழக்கு அந்தக் காலயாழ்ப்பாணத்தின்பண்பாட்டையும்நிலைமைகளையும் விளங்கிக் கொள்ள இன்றும் உதவுவதாக உள்ளது.



# அழகம்மா கடத்தல் வழக்கு 10

அழகம்மா கடத்தல் வழக்கு முடிவடைந்து விடுதலை செய்யப்பட்ட ஹென்றி இராசையா சொலமன் இரண்டே மாதங்களில் மீண்டும் கைது செய்யப்பட்டான். 1898 நவம்பரில் தொடங்கிய காவல்துறை நீதிமன்ற விசாரணை 1899 மார்ச் வரை நீடித்தது. பெப்ரவரியில் யாழ்ப்பாணத்தில் உயர்நீதிமன்ற வழக்குகள் நடைபெற்ற போதும் இந்த வழக்கினை எடுத்துக் கொள்ள முடியவில்லை.

1899 இல் இரண்டாவது தடவையாக உயர்நீதிமன்ற அமர்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது ஓகஸ்ட் 24 முதல் 31 வரை இந்த வழக்கு இடம்பெற்றது. 26, 27ஆம் திகதிகள் விடுமுறை நாள்கள் என்ற வகையில் சுமார் 6 நாள்கள் இடம்பெற்ற இந்த வழக்கும் அந்தக்காலத்தின் நீண்ட வழக்குகளில் ஒன்றாகும்.

இந்த வழக்கின் நீதிபதியாக யோசப் கிறனியர் (Joseph Grenier) என்பவரும் யூரிமாராக சின்னத்தம்பி வேலுப்பிள்ளை தலைமையில் கதிரவேலு ஆறுமுகம், ஜே. கே. நமசிவாயம் பிள்ளை, கதிரித்தம்பி முதலியார் சிவசம்பு, கதிரேச முதலியார் மயில்வாகனம், சின்னத்தம்பி பொன்னம்பலம், அம்பலவாண முதலியார் சின்னத்தம்பர் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

அரச தரப்பில் ஆசீரப்பா முதன்மை வழக்கறிஞராக வாதாடினார். இராசையா தரப்பில் கனகசபை, அழகக்கோன், திருநாவுக்கரசு, சந்திரசேகரம் ஆகியோர் வழக்கறிஞர்களாகப் பணியாற்றினர். இவர்கள் முந்தைய கடத்தல் வழக்கில் உருத்திராவுடன் இணைந்து பணியாற்றியவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

இந்த இரண்டாவது உயர்நீதிமன்ற வழக்கில் இராசையா மட்டுமே குற்றம் சாட்டப்பட்டிருந்தான். முதல் வழக்கின் போது அழகம்மாவின் கடிதம் தனக்கு எழுதப்பட்டதாக இராசையா சொன்ன சாட்சி பொய்ச் சாட்சி என்பதாகவும் (சிலோன் பீனல் கோட் பகுதி 190) சான்றாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் மோசடியானது என்பதாகவும் (சிலோன் பீனல் கோட் பகுதிகள் 454, 569) இரண்டு குற்றச்சாட்டுக்கள் இராசையா மீது இந்த வழக்கில் முன்வைக்கப்பட்டன.

குறித்த கடிதம் அழகம்மாவால் எழுதப்பட்டது என்பதனை எந்தத் தரப்பும் மறுக்கவில்லை. அது இராசையாவுக்கு எழுதப்பட்டதா இல்லையா என்பதே இந்த வழக்கின் அடிப்படையாக அமைந்தது.

இராசையா தரப்பு வழக்கறிஞர்களுக்கு இரண்டு சவால்கள் இருந்தன. முதலாவது நல்லம்மாவின் கடிதம். நல்லம்மாவின் கடிதத்துக்குப் பதிற் கடிதமாகவே அழகம்மாவின் கடித உள்ளடக்கம் அமைந்திருந்தது. இரண்டாவது அழகம்மாவின் கடித உள்ளடக்கம். அது ஒரு காதற் கடிதத்துக்குரியதாக இருக்கவில்லை.

இராசையா தரப்பு வழக்கறிஞர்கள் சந்தர்ப்ப சாட்சியங்களையும் குறுக்கு விசாரணைகளையும் தமது தரப்புச் சாட்சியங்களையும் இலாவகமாகப் பயன்படுத்தி நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான இன்னொரு வடிவத்தினை உருவாக்கினர். அதன்படி அழகம்மாவின் கடிதம் நல்லம்மாவின் கடிதத்துக்கான பதில் அல்ல; அழகம்மாவின் கடிதத்தின் அடிப்படையில் அதற்கு முந்தையது போல எழுதித் தயாரிக்கப்பட்டு அது கொடுக்கப்பட்டிருந்தது.

காவல்துறை நீதிமன்றத்தில் கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட போது அது பிரதி எடுக்கப்பட்டது தொடர்பில் இந்தக் கடித வழக்கில் விரிவாக விசாரிக்கப்பட்டது.

காவல்துறை நீதிமன்றத்தில் வழக்காளி தரப்பில் அரச வழக்கறிஞர்களான காப்பென்ரர், குக், காசிப்பிள்ளை ஆகியோர் செயற்பட்டிருந்தனர். அவர்களில் காப்பென்ரர், குக் ஆகியோர் இந்தக் கடித வழக்கில் சாட்சி சொல்ல அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களின் சாட்சிகளின் அடிப்படையில் பின்வரும் தகவல்கள் வெளியாகின.

1898 ஜூன் 1ஆம் திகதி காலை 11 மணியளவில் அழகம்மாவின் கடிதம் இராசையா தரப்பினால் சாட்சிப் பொருளாக வழங்கப்பட்டது. வழக்கறிஞர் குக் பென்சிலால் அந்தக் கடிதத்தின் பிரதி ஒன்றினை எடுத்தார். அவ்வாறு பிரதி எடுப்பதற்கு அவர் நீதிபதியிடம் அனுமதி பெற்றிருக்கவில்லை. அவ்வாறு பிரதி எடுப்பதற்கு இராசையா மறுப்புத் தெரிவிக்கவில்லை.

அன்றைய நீதிமன்றக் காலை அமர்வுகள் 12 மணிக்கு முடிவடைந்து மாலை 2 மணியளவிலேயே மீண்டும் அமர்வுகள் தொடங்கின. 12 மணியளவில் குக் கடிதத்தைப் பிரதி எடுத்து முடித்திருந்தார். நீதிமன்ற காலை அமர்வுகள் முடிந்தபோது அழகம்மாவிடமே குறித்த கடிதம் இருந்தது. காலை அமர்வு முடிந்த பின்னர் கடிதத்தைத் தெளிவாக வாசிக்க அவர் ஜன்னல் அருகே சென்று நின்றிருந்தார். 12.30 மணியளவில் அழகம்மா நீதிமன்றத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். ஆனால் அழகம்மாவிடமிருந்து யாருக்குக் கடிதம் சென்றது என்பது தொடர்பில் யாருக்கும் தெளிவாகத் தெரியவில்லை. குக் தன்னிடமிருந்த பென்சில் பிரதியைச் சில நாட்களின் பின்னர் தனது உதவியாளரிடம் பிரதியெடுக்க வழங்கி இருந்தார். அது தவிரக் குறித்த கடிதப் பிரதி யாரிடமும் வழங்கப்படவோ வாசிக்கப்படவோ இல்லை. அத்துடன் கடத்தல் வழக்கு முடிவடைந்ததும் குறித்த பிரதியை குக் அழித்து விட்டார். கடிதத்தைப் பிரதி எடுத்ததில் குக் எவ்வித உள்நோக்கங்களும் கொண்டிருக்கவில்லை. ஆனால் நல்லம்மாவின் கடிதம் அவரால் பிரதி எடுக்கப்படவில்லை. அதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

குக் , அழகம்மாவின் கடிதத்தை ஏன் பிரதி எடுத்தார் என்பது தொடர்பில் காப்பென்ரருக்குத் தெரிந்திருக்கவில்லை. நல்லம்மாவின் கடிதம் காப்பென்ரரிடம் ஒரு மணிக்கும் 2 மணிக்கும் இடையில் செல்லப்பாவால் (அழகம்மாவின் சகோதரன்) வழங்கப்பட்டது. அந்தக்கடிதம் புதிதாக எழுதப்பட்டது போல இருக்கவில்லை. மேற்படி சாட்சியங்கள் மூலம் அழகம்மாவின் கடிதத்தின் பிரதியோ அல்லது கடிதமோ 12 மணிக்கும் 2 மணிக்குமிடையில் நீதிமன்றத்துக்கு வெளியே

## கடித வழக்கு

அழகம்மாவின் கடிதம் நல்லம்மாவின் கடிதத்துக்கான பதில் அல்ல; அழகம்மாவின் கடிதத்தின் அடிப்படையில் அதற்கு முந்தையது போல எழுதித் தயாரிக்கப்பட்டு அது கொடுக்கப்பட்டிருந்தது.

எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் குறுக்கு விசாரணைகளில் ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் இராசையாவின் காதல் தொடர்பில் குக் முன்னரே அறிந்திருந்தார் என்பதும் காப்பென்ரர் திருமண வழியில் நயில்ஸ் குடும்பத்துடன் தொடர்புடையவர் என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. அதாவது அரச தரப்பு வழக்கறிஞர்களாக அவர்கள் இருந்த போதும் அவர்களது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் உருவாக்கப்பட்டது.

இந்தச் சந்தேகங்களை வலுப்படுத்தும் வகையில் இராசையா தரப்புச் சாட்சியான மாப்பாணர் சபாபதியின் வாக்குமூலம் அமைந்தது.

மாப்பாணர் சபாபதி காவல்துறை நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெற்றபோது மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். குக் கடிதத்தைப் பிரதி எடுத்த போது இராசையா அதனை சபாபதிக்குச் சுட்டிக் காட்டி அவ்வாறு பிரதி எடுக்க விட வேண்டாம் என்று சொன்னதாகச் சபாபதி சாட்சியமளித்தார். காப்பென்ரர் வாசிக்கக் குக் பிரதி எடுத்தார் என்றும் தெரிவித்த சபாபதி ஒரு குற்றவியல் வழக்கில் புறொக்டர் ஒருவர் அப்படிப் பிரதி எடுத்த வேறு ஒரு சந்தர்ப்பம் கூடத் தனக்கு நினைவில்லை என்றும் குறிப்பிட்டார். கடிதத்தில் வெட்டப்பட்டிருந்த பகுதியினை வாசிக்க அழகம்மாவுக்கு நிறைய நேரம் எடுத்ததைக் குறிப்பிட்ட சபாபதி நல்லம்மாவிடம் கடிதம் கொடுக்கப்பட்ட போது வெட்டப்பட்ட பகுதியை உடனடியாக வாசித்ததையும் வெளிப்படுத்தினார். இதன் மூலம் கடிதத்தின் உள்ளடக்கம் நல்லம்மாவுக்கு ஏற்கனவே தெரிந்து விட்டிருந்தது என்பது வெளிப்படுத்தப்பட்டது.

நல்லம்மாவின் கடிதத்தின் உண்மைத் தன்மையைச் சந்தேகத்துக்குள்ளாக்கும் வகையில் இரண்டு வண்டிக்காரர்களின் சாட்சியங்களையும் இராசையா தரப்பு வழக்கறிஞர்கள் பயன்படுத்தினர். பாபு என்பவர் திருமதி சுசான் நெவின்ஸ் என்பவருடைய குதிரை வண்டிற்காரராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட அன்று அழகம்மாவும் சகோதரர்களும் தங்களது வண்டியில் வண்ணார்பண்ணைக்குச் சென்றமையால் நல்லம்மாவை அழைத்துவர பாபுவின் சேவையினை நயில்ஸ் தம்பதியினர் பெற்றிருந்தனர்.

போதகர் நயில்சின் சாட்சியத்தின் படி அவர் உடுவிலுக்குச் சென்றபோது போகும் வழியில் ஹண்ட் என்பவரிடம் நல்லம்மாவைச் சாட்சி சொல்ல அழைக்கலாமா என்று கேட்டிருந்தார். ஹண்ட் திருமண உறவில் நல்லம்மாவின் மைத்துனர். நல்லம்மாவை அழைத்துக் கொண்டு வருகையில் நல்லம்மா குடும்பத்தினர் கொடுத்துவிட்ட மாம்பழங்களைத் தனது வீட்டில் கொடுத்து விட்டு நயில்ஸ் வந்திருந்தார். அத்துடன் உடுவிலுக்கு நயில்ஸ் தம்பதியினர் சென்று கொண்டிருந்த போது அழகம்மாவும் சகோதரர்களும் வீட்டிலிருந்து நீதிமன்றத்துக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். கடிதம் கிடைத்ததா என்று நயில்ஸ் கேட்க ஆம் என்று வில்லியம் பதிலளித்திருந்தான். இந்த ஓரிரு நிமிடச் சந்திப்புக்கள் தவிர வேறு எங்கும் அவர்கள் செல்லவில்லை. ஆனால் பாபுவின் சாட்சியமோ நயில்சின் சாட்சியத்துக்கு முற்றிலும் மாறாக அமைந்தது.

பாபுவின் கூற்றுப்படி பாபு நயில்ஸ் தம்பதியினரைக் காவல்துறை நீதிமன்றத்துக்கு அருகில் ஏற்றிக் கொண்டு நேரடியாக உடுவிலுக்குச் சென்றான். அங்கே ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு ஹண்ட் வீட்டுக்குச் சென்றனர். ஹண்ட் வீட்டில் அழகம்மா உள்ளிட்ட இரண்டு மூன்று பெண்கள் காணப்பட்டனர். நல்லம்மா இறங்கிச் செல்ல அழகம்மா அவளைக் கட்டி அணைத்து உள்ளே அழைத்துச் சென்றாள். ஹண்ட் வீட்டுக்கு முன்பதாக இன்னொரு குதிரை வண்டிலும் நின்றிருந்தது.

ஹண்ட் வீட்டில் அவர்கள் இறங்கிக் கொண்டதும் பாபு தான் அவர்களுக்காகக் காத்திருக்க வேண்டுமா என்று கேட்க இல்லை போகலாம் என அவனை அனுப்பி விட்டிருந்தனர். அடுத்ததாகச் சாட்சி சொன்ன மயிலன் நயில்ஸ் குடும்பத்தினரின் வண்டிக்காரன். மயிலனின் சாட்சிப்படி அழகம்மாவும் செல்லப்பாவும் தமது வீட்டுக்குச் செல்லவே இல்லை. அவர்களை அழைத்துக் கொண்டு ஹண்ட் வீட்டில் விட்டு விட்டு வெளியே வண்டியில் மயிலன் காத்திருந்தான். அப்போது இன்னொரு வண்டியில் நல்லம்மாவை நயில்ஸ் தம்பதியினர் அழைத்து வந்தனர். உடுவில் வண்டி அனுப்பப்பட்டது. ஹண்ட் வீட்டில் அவர்கள் ஒன்றேகால் மணித்தியாலம் அளவில் இருந்தனர். அதன் பின்னர் செல்லப்பாவையும் அழகம்மாவையும் மயிலன் மீண்டும் நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றான். பின்னர் மீண்டும் வந்தும் நயில்ஸ் தம்பதியினரையும் நல்லமாவையும் நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றிருந்தான்.

அதாவது அழகம்மா தன் வீட்டுக்குச் சென்று நல்லம்மாவின் கடிதத்தை எடுத்து வரவேயில்லை. அவர்கள் அனைவரும் ஹண்ட் வீட்டில் சந்தித்துக் கொண்டனர். அங்கிருந்து தான் கடிதம் வந்தது.

அதாவது அழகம்மாவின் கடிதத்துக்கு முந்தைய கடிதமாக வழங்கப்பட்ட நல்லம்மாவின் கடிதம் புதிதாகத் தயாரிக்கப்பட்ட ஒன்று என்பதாக வழக்கு நகர்த்தப்படலானது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபய...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமல்ல, அரசாங்கத்தோடு நிற்கும் வியாழேந்திரன் போன்றவர்களும் கேட்கின்றார்கள். கடந்த ஆண்டு வியாழேந்திரன் பாண்டிச்சேரிக்கு ஒரு விஜயத்தை மேற்கொண்டார். அங்கே வைத்து அவர் ஊடகவியலாளர்களிடம் அவ்வாறு தெரிவித்தார். இதனிடையே இதே கடற்பாதையில் மற்றோரு சொகுசுப் படகுச் சேவை தொடங்கப்படவிருப்பதாக அண்மையில் ஒரு செய்தி வெளி வந்தது.

ஆனால் இலங்கை அரசாங்கம் இந்தக்கடல் வாசலைத் திறக்கப் பின்னடிக்கிறது. பலாலி விமான நிலையத்துக்கு சொன்ன அதே காரணம் இதற்கும் பொருந்தும். ஏனெனில் காங்கேசன்துறை என்பது வடபகுதி இராணுவப் படைக் கட்டமைப்பின் கேந்திரமான இடத்தில் காணப்படும் ஒரு துறைமுகம் . அதை சிவில் போக்குவரத்துக்கு திறந்துவிட்டால் அதுவும் நீண்ட கால நோக்கில் அந்தப்பகுதியை இராணுவ மயநீக்கம் செய்துவிடும். எனவே இலங்கை அரசாங்கம் அதற்கு பின்னடிக்கின்றது. அதாவது தனது வடபகுதிக்கான படைத்துறைக்கு கேந்திர ஸ்தானத்தில் இந்தியாவை நோக்கி ஒரு வான் வாசலையும் கடல் வாசலையும் திறந்து விஸ்தரிக்க இலங்கை உடன்படுமா? கடந்தவாரம் புதுடில்லிக்குப் போன பஸில் ராஜபக்ச, இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்திருக்கிறார். அந்தச்சந்திப்பில் இவ்விடயங்கள் உரையாடப்பட்டிருக்குமா? இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருவாராக இருந்தால் மேற்கண்ட திட்டங்களை அவற்றின் அடுத்த கட்டத்துக்கு நகர்த்துமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்பாரா? அதற்கு இலங்கை அரசாங்கம் சாதகமான சமிக்ஞைகளைக் காட்டாது என்ற ஒரு எதிர்பார்ப்பிருந்தால், மோடி இலங்கைக்கு வருவாரா?

மோடியின் வருகை ஜெய்சங்கரின் வருகை போன்றன இன்றுவரையிலும் ஊகங்கள்தான். ஆனால் நெருக்கடி காலத்தில் இந்தியா இலங்கைக்கு கடன் கொடுக்கிறது. அதற்குப் பிரதியுபகாரமாக இலங்கை, இந்தியாவைத் திருப்திப்படுத்தும் உடன்படிக்கைகளுக்குத் தயாராகிவிட்டது. தமிழ்த் தரப்போடு பேச்சுக்குத் தயார் என்று காட்டுவதும் அந்த நோக்கிலானதே.

இரண்டாவதாக ஐ.நா.வில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஒரு தகவல் திரட்டும் பொறிமுறை உருவாக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாத் தீர்மானத்தின்படி இந்தப்பொறிமுறை உருவாக்கப்படவிருக்கிறது. இந்தப்பொறிமுறை இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளைத் திரட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இலங்கை அரசாங்கத்துக்கு சார்பான சீனாவும் பாகிஸ்தான் போன்ற நாடுகளும் மேற்படி பொறிமுறையை பலவீனப்படுத்தும் விடயத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருப்பதாகக் கருதப்படுகிறது. அந்தப்பொறிமுறையின் செயற்படு காலம் முன்பு ஒரு வருடம் என்று அறிவிக்கப்பட்டது. இப்பொழுது ஆறு மாதங்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதன் அங்கத்தவர் எண்ணிக்கை முன்பு 12 என்று கூறப்பட்டது. இப்பொழுது எட்டாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொறிமுறையைத் தரம் குறைப்பதில் இலங்கையும் அதன் நண்பர்களும் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்.

அதோடு உள்நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. மேலும் அந்தச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒரு தொகுதி கைதிகளை விடுதலை செய்திருக்கிறது. நிலைமாறுகால நீதியின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளுக்கு புதிதாக நிதியை ஒதுக்கி அவை வினைத்திறனோடு செயற்படுவதாக ஒரு தோற்றத்தையும் கட்டியெழுப்பி வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு அறிவித்திருக்கிறது. இவற்றின்மூலம் ஐ.நா.வைச் சமாளிக்கலாம் என்று அரசாங்கம் நம்புகின்றது.

இந்த அடிப்படையில்தான் கூட்டமைப்பை சந்திக்க முற்பட்டுவதையும் விளங்கிக்கொள்ள வேண்டும். அதன்மூலம் நல்லிணக்கத்துக்குத் தயார் என்று ஒரு செய்தியை அவர் ஐ.நா.வுக்கும் வழங்கலாம், இந்தியாவுக்கும் வழங்கலாம். எனவே இப்போதிருக்கும் நெருக்கடிகளின் பின்னணியில், இந்தியாவையும் ஐ.நா.வையும் சமாளிக்கும் நோக்கத்தோடு கோத்தாபய, கூட்டமைப்பை சந்திக்கப் போவதாக அறிவித்திருக்கிறார். வெளியரங்கில் நெருக்கடிகளைக் குறைப்பதே அவருடைய இந்த அழைப்பின் நோக்கம். ஆனால் நாட்டுக்கு வெளியே அவர் நெருக்கடிகளைத் தணிக்க முயற்சித்துக் கொண்டிருக்க, நாட்டுக்குள்ளேயோ நெருக்கடிகள் அதிகரிக்கின்றன. அப்படியொரு நெருக்கடி காரணமாகத்தான் கூட்டமைப்புடனான புதன்கிழமைச் சந்திப்பும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.




# எண்ணெய் வாங்கிய இந்தியா; உள்ளுக்குள் எரியும் அமெரிக்கா!



ம.மயூ

ரஷ்யா - உக்ரைன் போர் தீவிரம் பெற்றிருக்கும் நிலையில், அந்தப் போரால் உலகளாவிய ரீதியில் பல்வேறு நெருக்கடிகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. அவற்றில் ஒன்று கச்சா எண்ணெய்ப் பிரச்சினை.

இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக மேற்குலகம் நேரடியாகத் தலையிடாவிட்டாலும், மறைமுகமாக ரஷ்யா மீது நிதித் தாக்குதல்களை மேற்கொண்டிருக்கின்றது. ரஷ்யாவைப் பணிய வைக்க பல்வேறு தடைகளை பல நாடுகளும் விதித்து வருகின்றன. ரஷ்யாவின் கச்சா எண்ணெய் வியாபாரத்துக்கு அமெரிக்கா தடை விதித்திருக்கின்றது. இந்தத் தடையால் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்த பல நாடுகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன. ஆயினும் அவை அமெரிக்கா மீதுள்ள அச்சத்தில் பதுங்கிருக்க, இந்தியா ஒரு வித்தியாசமான நகர்வை மேற்கொண்டிருக்கின்றது.

இந்தியா கடந்த காலங்களில் ரஷ்யாவின் பக்கம் சார்ந்தே செயற்பட்டிருக்கின்றது. 2014 மார்ச் மாதத்தில் உக்ரைனின் கிரீமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டபோது, இந்தியா அது தொடர்பாக அதிகம் பேசவில்லை. ஆனால் இந்தியா தெரிவித்த கருத்துக்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்தன. உக்ரைன் மீதான தாக்குதல்களை ரஷ்யா இப்போதுள்ள நிலையில், இந்தியா மதில் மேல் பூனையாகவே செயற்படுகின்றது. இதுவரை ரஷ்யாவின் நிலைப்பாட்டைக் கண்டிக்கும் வகையில் இந்தியா எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. ராஜீய அளவிலான பேச்சுவார்த்தையின் மூலமே இந்த பிரச்னைக்கு தீர்வு காண முடியும் என்று கூறி முடித்துக் கொண்டது இந்தியா. ஐ.நா. சபையில் ரஷ்யாவுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் தீர்மானங்களின்போதும் இந்தியா ஊமையாகவே இருக்கின்றது.

தி வில்சன் மையத்தின் தெற்காசிய திட்டத்தின் துணை இயக்குநருமான மைக்கேல் காகல்மேன், இது ஆச்சரியம் தரும் விடயமல்ல என்கிறார். "2014 ஆம் ஆண்டு கிரீமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டபோது, இந்தியா மிகக் குறைவாகவே பேசியது. இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்மொழிவு வந்தபோது, இந்தியா வாக்களிக்காமல் விலகி இருந்தது. இன்றும் இந்தியாவின் நிலைப்பாடு அப்படியே உள்ளது. இதை அமெரிக்கா அரைமனதுடன் ஏற்றுக்கொள்கிறது என்பது தெரியும்" என்று அவர் கூறுகின்றார்.

இந்த விவகாரத்தில் இன்னொரு பக்கமும் உள் [illegible] டுவரப்படுகின்றன. ரஷ்யா மீதான மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் இந்தியாவின் இராணுவ ஒப்பந்தம் பாதிக்கப்படும் பாதிக்கப்படும் அபாயமும் இருக்கின்றது. இது இந்தியாவுக்குப் பின்னடைவாக இருக்கும். அதேநேரம் கச்சா எண்ணெய் விலை உயர்வது இந்தியப் பொருளாதாரத்தையும் பாதிக்கும். இந்தப் பின்னணியில்தான் இந்தியா தற்போது அமெரிக்காவின் தடையை மீறி ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யத் தீர்மானித்திருக்கின்றது. இந்தியாவின் இந்த முடிவு அமெரிக்காவுக்கு கோபத்தை ஏற்படுத்தினாலும் இந்தியாவை எதிர்த்து எதுவும் செய்ய முடியாத நிலையிலேயே அமெரிக்கா இருக்கின்றது.

இந்தியன் எண்ணெய் நிறுவனம் 30 லட்சம் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை ரஷ்யாவிடமிருந்து 20 முதல் 25 சதவீத தள்ளுபடி விலையில் வாங்கவுள்ளது என்று சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய அதிகாரிகளும் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியிருக்கின்றனர். அதிலும் மிக முக்கியமாக, கச்சா எண்ணெய் கொள்வனவின் போது அமெரிக்க டொலரில் இல்லாமல் இந்திய ரூபாவில் கட்டணம் செலுத்தப்பட உள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி, "இன்றைய சூழலில் இந்தியாவின் நிலைப்பாடு, வரலாற்றில் எவ்வாறு பதிவு செய்யப்படும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ரஷ்யாவுக்கான ஆதரவு என்பது, போரினால் ஏற்படும் பேரழிவுக்கான ஆதரவாகும் என்பதை இந்தியா கருத்தில் கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார். இதை இந்தியாவுக்கான மறைமுக எச்சரிக்கையாகவும் கொள்ள முடியும்.

'எண்ணெய் தன்னிறைவு கொண்ட நாடுகள் அல்லது ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகள் வர்த்தகத் தடை குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இந்தியாவின் முறையான எரிசக்தி பரிவர்த்தனைகள் அரசியலாக்கப்படக்கூடாது 'என்று அமெரிக்காவுக்கு இந்தியா பதிலளித்திருக்கின்றது.

ரஷ்யப் பொருளாதாரத்தை உடைக்கும் மேற்குலகத்தின் அமெரிக்காவின் திட்டத்துக்கு, இந்தியாவின் இந்த நகர்வு ஓர் பின்னடைவே. தற்போது நெருக்கடியில் இருக்கும் பலநாடுகள் இந்தியாவின் வழியைப் பின்பற்றக்கூடும். அதனால் ரஷ்யாவுடன் புதிய வகையிலான கொடுக்கல் வாங்கலுக்கான கதவுகள் திறக்கக்கூடும். அவை மேற்குலகத்தின் திட்டங்களில் மண்ணள்ளிப்போட்டு விடலாம். அதனால் மேற்குலகம் இதற்கும் ஏதும் தடைகளை ஏற்படுத்த முயலலாம். ஆக இந்த விவகாரமும் எதிர்வரும் நாள்களில் சூடு பிடிக்கும். இரு தரப்புகளையும் இந்த நிலைமையை எவ்வாறு கையாளுகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை மறுதினம் (22.03.2022 ) உலக நீர் தினமாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# நீராலானது ... போ

அ.அன்ரன் கமிலஸ்
B.A (Hons) Geo.Spl, M.Phil.in Geo.
தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் இந்தப் பிரபஞ்சம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலும் நீரின்றி உலகில் எந்த உயிரும் இயங்காது. "நீரின்றி அமையாது உலகு" என்று நீரின் முக்கியத்துவத்தை திருவள்ளுவர் வான் சிறப்பு என்னும் அதிகாரத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளார். அனைத்து உயிரினிங்களின் தொடக்கம் நீர் என்று உயிரியலும், மனித நாகரிகத்தின் தொட்டில் என்று வரலாறும், பூமியில் 70 சதவிகிதம் பரப்பைக் கொண்டது நீர் என்று புவியியலும், இரண்டு பங்கு ஐதரசன் அணுவும், ஒரு பங்கு ஒட்சிசன் அணுவும் சேர்ந்ததுதான் நீர் என்று இரசாயனவியலும், நிறமும் மணமும் அற்ற தெளிவான திரவம்தான் நீர் என்று பௌதீகவியலும் உயிரைப் படைக்க, காக்க, அழிக்கவல்லது நீர் என்று தத்துவமும் கூறினாலும் இந்த நூற்றாண்டில் உலக நாடுகளுக்கு இடையே, ஏன் மனித சமுதாயத்துக்குள்ளே பிளவை ஏற்படுத்தப்போவதும் நீர் என்பதே நிதர்சனமான உண்மை.

மனித சமுதாயத்துக்கு கிடைத்த, விலை மதிப்பில்லாத, இயற்கை வளமான நீர் தனிமனித சொத்து அல்ல, அது ஒட்டு மொத்த மனித சமுதாயத்துக்கும் மட்டுமில்லாது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவான சொத்து. இவ்வாறான இயற்கை வளங்களை நாமும் பயன்படுத்தி வருங்கால சந்ததியினருக்கும் மாசுபடாமல் விட்டுச் செல்ல வேண்டும் என்று உறுதி கொள்ள வேண்டும்.

புவி தனது மேற்பரப்பின் முக்கால் பங்கு பிரதேசத்தைக்கொண்டு நீர் காணப்படுகின்றபோதிலும் உலக நீர்ப்பரப்பில் 97.5 சதவீதம் உவர்நீராகவும், 2.5 சதவீதமே நன்னீராகவும் உள்ளது. நன்னீர்ப் பரப்பில் 68.6 சதவீதம் பனிக்கட்டியால் மூடப்பட்ட பிரதேசமாகவும், 30.1சதவீதம் நிலக்கீழ் நீராகவும், மற்றும் 1.3சதவீதம் ஏனைய மேற்பரப்பு நன்னீர் பிரதேசங்களாகவும் அமைந்துள்ளன. பூமியில் கிடைக்கக் கூடிய நன்னீரில் 0.014 சதவிகிதம் மட்டுமே மனிதன் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. இதன் அளவும் தற்சமயம் குறைந்து வருகின்றது என்பதுதான் அதிர்ச்சிக்குரிய விடயம். இதனால்தான் நீரை அடிப்படை உரிமையாக்கி உள்ளனர். பூகோளரீதியில் நன்னீரானது, விவசாயத்துக்காக 85 சதவீதம் பயன்படுத்தப்படுகின்றது, கைத்தொழில்துறை 10 சதவீதத்தை எடுத்துக் கொள்ள, எஞ்சிய 5 சதவீதத்துக்கு உட்பட்ட நன்னீரையே மனிதன் தன் பாவனைக்கான எடுத்துக்கொள்கிறான் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## போட்டிப் பொருளான நீர்

மனிதனின் உடலிலும் சுமார் 75 வீதம் நீர்தான் உள்ளது. நம் உணவில் உள்ள சத்துகளை தேவையான உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லவும் கழிவுகளை வெளியேற்றவும் நீர் அவசியமாகும். ஒரு மனிதனின் உடலில் சராசரியாக 42 லீற்றர் தண்ணீர் உள்ளது. அதில் 2.7 லீற்றர் என்னும் மிகச் சிறிய அளவு குறைந்தாலும் உடலில் அசாதாரண நிலை ஏற்படும். உயிருள்ள அனைத்து ஜீவன்களினதும் இயக்கத்துக்கு ஆதாரம் நீர். உயிரற்ற பொருள்களின் தூய்மையை பேணவும் உதவுவது நீர்.

நீரின்றி உலகமே இல்லை. எல்லா வளங்களுக்கும் மூல வளம் நீரே. உலக மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த உன்னத பொக்கிசமே நீர். இவ் வளமானது சகல உயிரினங்களினதும் வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவையாகும். அதனை பயன்படுத்துவோர்களிடையே மேலும் மேலும் தேவைகள் அதிகரிப்பதனால் இன்று நீர் போட்டிப் பொருளாகவும், சந்தைப் பொருளாகவும் கூட மாறிவிட்டது. பூமியெனும் உயிரின வாழ்விடத்தைத் தவிர வேறு எந்தக் கோளிலும் நீர் இருப்பதாக இதுவரை அறியப்படவில்லை. இதன் மூலம் அங்கெல்லாம் உயிரினம் இல்லை எனவும் கூறப்படுகின்றது. உயிரினம் அனைத்துக்கும் தொடக்கமும் உயிரின் ஆதாரமும் நீராகும். இன்று நவீன மருத்துவ உலகுக்கே சவாலாக, மனித குலத்துக்கே அச்சுறுத்தல் விட்டு வேகமாக பரவி வருகின்ற தொற்றுநோய் வைரஸ் கிருமிகளை கட்டுப்படுத்துவதற்கான தொற்று நீக்குதல் மற்றும் சுகாதாரம் பேணுவதற்கு நீர் முக்கியமான பங்கு வகிக்கின்றது.



## ஆவதும் நீராலே, அழிவதும் நீராலே

மனித சமுதாயத்துக்கு நீரின் பயன் அளப்பரியது. பிறப்பிலும் வாழ்விலும் இறப்பிலும் கூட இணைபிரியாத, இன்றியமையாததாக விளங்குகின்றது. நீரின்றி நிலமில்லை, நிலமின்றி நீரில்லை எனும் தத்துவத்தைப் போதிக்கும் மகத்துவம் நிறைந்த தண்ணீரின் பெருமைகளை எல்லா மதங்களும் மகிமைப்படுத்துகின்றன. மதங்களில் நீர் தூய்மைப்படுத்தும் பொருளாகக் கருதப்படுகிறது. அனைத்து மதங்களும் கழுவுதல் என்ற சடங்கைக் கொண்டுள்ளன. நீர் தெய்வ சக்தியுடையதாக நம்பப்படுவதுடன் பஞ்சபூதங்களுள் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

உலக வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும்போது புகழ்பெற்ற உலக நாகரிகங்கள் எல்லாம் நீர்நிலைகளை அடிப்படையாகக் கொண்டே தோன்றியுள்ளன. நைல்நதி, சிந்து நதி, யூப்பிரடிஸ், தைகிறீஸ் போன்றன உலக நாகரிகங்களின் பிறப்பிடங்கள் எனப்படுகின்றன. எனவே இத்தகைய நாகரிக எழுச்சியின் களமே நீர் என்பது புலனாகின்றது. நாகரிகத்தின் தொட்டில் என்றழைக்கப்படும் மொஸொப்படேனியா இரு முக்கிய நதிகளான யூப்பிரடிஸ், தைகிறீஸ் இடையே அமையப் பெற்றிருந்தது. எகிப்தியர்களின் பண்டைய சமூகங்கள் நைல் நதியை முழுமையாக நம்பியிருந்தன. பெருநகரங்களான ராட்டர்டேம், லண்டன், மாண்ட்ரீல், பாரிஸ், நியூயோர்க் நகரம், பியுனோஸ் அயர்ஸ், ஷாங்கய், ரோக்கியோ, சிகாகோ, ஹொங்காங் போன்றவை தாங்கள் பெற்ற வெற்றியைத் தங்களது நீர்வழி அணுக இயலுந்தன்மைக்கும், அதனால் விளைந்த வியாபார விருத்திக்கும் உரித்தாக்குகின்றன. பாதுகாப்பான துறைமுகங்களையுடைய சிங்கப்பூர் போன்ற தீவுகளும் அதன் காரணமாகவே வளம் பெற்றன. தண்ணீர்ப் பஞ்சத்தால் அவதிப்படும் வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் போன்ற நாடுகளில், சுத்தமான குடிதண்ணீர் மனித வள மேம்பாட்டுக்கு தேவைப்படும் முக்கிய காரணியாக இருக்கிறது.

அண்மைக்கால உணவாதார உட்கொள்தல் அறிக்கை ஐக்கிய நாடுகள் தேசிய ஆய்வு மன்றத்தால் கீழ்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு பெண்களுக்கு 2.7 லீற்றரும் ஆண்களுக்கு 3.7 லீற்றரும் அவசியம்.

குறிப்பாக கருத்தரித்துள்ள மற்றும் பாலூட்டும் பெண்களும் நீரேற்றத்தைத் தக்கவைக்க அதிக நீர் உட்கொள்தல் அவசியம் என சுகாதாரத்துறை பரிந்துரைத்துள்ளது.



## பிரச்சினைகளின் பிறப்பிடம் நீர்தானோ?

இவ்வாண்டு 'தரைக்கீழ் நீர்' ஐ.நாவால் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. மழைவீழ்ச்சி மற்றும் மேற்பரப்பு நீரோட்டங்களாகக் கிடைக்கப் பெறுகின்ற நீரானது நிலத்தினுள் ஊடுருவி நிலத்தடி நீர்கொள் படுக்கைகளுக்குள் செல்லக்கூடியது. இந்த நிலத்தடி நீர் பின்னர் நீரூற்றுக்கள் வாயிலாக மேற்பரப்பிற்கு வந்தை... யும் அல்லது நிலத்தடி நீரை கிணறுகள் மூல... செயற்கையாகவும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை புத்தளத்தில் இருந்து பரந்தன், முல்லைத்தீவை இணைத்து வரையப்படும் கோட்டுக்கு வடமேற்காகவுள்ள பகுதிகள் 'மயோசீன்' காலச் சுண்ணாம்புப் பாறையமைப்பைக் கொண்டுள்ளன. இப்படிவ... கள் தரைக்கீழ்நீரைப் பெருமளவு சேமித்து வைக்கக் கூடிய தன்மை வாய்ந்தவையாகும். சுண்ணக்கல்லை அடிப்படையாகக் கொண்ட செம் மண், செம்மஞ்சள் மண்கள் நீரை உட்புக விடும் இயல்பை அதிகளவு கொண்டவையாகவும் அமைந்துள்ளன. மழையால் பெறப்படும் நீர் இப்பகுதிகளில் இலகுவாக உட்புகுந்து தரைக்கீழ் நீராகத் தேங்குகின்றது. உண்மையில் இவ்வாறு செல்லும் நீர் நன்னீர் வில்லையாக உவர்நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கின்றது. ஆனால் அவை இன்று எமது பல்வேறு செயற்பாடுகளி... னால் பாதிப்படைந்துள்ளன. குறிப்பாக அதிக... தரைக்கீழ் நீர் வெளியேற்றப்படுதல், கரையோர... அகழ்வுகள், மழை நீர் தரைக்குக்கீழ் சென்றடை... வதை தடுத்து கடலை நோக்கி செல்வதை தூண்... டுதல், விவசாயத்துக்கான அதிகளவு இரசாய... னப்பாவனை, முறையற்ற மலசலக்குழிகள், மற்றும் சீரற்ற கழிவகற்றல் முகாமைத்துவம் போன்றவற்றினால் தரைக்கீழ் நீர்வளம் பாதிப்படைந்துள்ளது. ஆய்வுகளின் பிரகாரம் பெரும்பா... லான கிணற்று நீர் நேரடியாக குடிதண்ணீராக பயன்படுத்துவதற்கு உரிய தரத்தில் இல்லை என்பது அறியப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர்!

## தண்ணீர்ப் பிரச்சினைகள்

பெருகிவரும் சனத்தொகையால் நீர்வளம் அருகி வருகின்றது. எதிர்காலத்தில் இந்நிலை மேலும் உக்கிரமடையும். உலக போர் ஒன்று மீண்டும் ஆரம்பிக்குமானால் அது நீருக்காகவே ஏற்படும். நீர்ச்சிக்கனம், நீர்த் தூய்மை மற்றும் நீர்ச் சேமிப்பு குறித்து விழிப்புணர்வும் அக்கறையும் எம்மத்தியில் எந்தளவுக்கு இருக்கிறது என்பது தொடர்பாக சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மால்டோவா மற்றும் தற்போது ரஷ்யாவின் யுத்த ஆக்கிரமிப்பினை எதிர்கொண்டுள்ள உக்ரைன் போன்றவையும் வறட்சியினால் தண்ணீர் பிரச்சினை எதிர்கொண்டு வந்த நாடுகளே. நீர்ப் பிரச்சினை என்பது உலகளாவிய பிரச்சினையாக வியாபித்துள்ளது. நாகரிகத்தை உலகுக்கே அறிமுகப்படுத்திய நைல் நதியில்கூட பிரச்சினை.

சூடானுக்கும் எகிப்துக்கும் பிரச்சினை. நிலக்கீழ் நீர் வளத்தினால் எகிப்துக்கும் லிபியாவுக்கும் பிரச்சினை. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இந்துநதியால் தீராத பிரச்சினை. இந்தியாவில் பல நீர் நிலைகள் இருந்தும் காவிரியினால் இரண்டு மாநிலங்களுக்கும் தீராத பிரச்சினை.

இவ்வாறாக உலகிலே இன்று நீருக்கான சண்டைகளும் பிரச்சினைகளும் தொடர் கதையாகவுள்ளன.

## 1.4 மில்லியன் குழந்தைகளை காக்க நீரால் முடியும்

முன்னொரு காலத்தில் குடிதண்ணீரை வீதியோரங்களில் வைத்து மனிதர்கள் மற்றும் கால்நடைகளின் குடிதண்ணீர் தேவையினை நிவர்த்திசெய்து அதன் மூலம் தாகசாந்தி வழங்கி மகிழ்கின்ற சமூகம் வாழ்ந்த காலம் மாற்றமடைந்து இப்போது குடிநீரைப் போத்தலில் அடைத்து வியாபாரம் செய்கின்ற நவீன காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் போத்தலில் அடைக்கப்பட்ட நீரில் அனைத்து கனிமங்களும் நீக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத் தவறி விடுகின்றோம். இதனால் உடலுக்குத் தேவையான கனிமங்கள் கிடைக்கப் பெறாமையால் உடல் ஆரோக்கியமற்ற தலைமுறையை உருவாக்குகின்றோம்.

பாதுகாப்பான குடிதண்ணீரும்சுகாதாரமும் கிடைக்காத உலக மக்கள் தொகையை குறைக்கவேண்டும் என்ற ஜி-8 உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட உறுதிமொழியை பல நாடுகள் ஏற்றுக்கொண்டன. இந்த கடினமான சவாலை எதிர்கொண்டு வெற்றி பெற்றாலும் கூட உலகளகவிய ரீதியில் 2.2 பில்லியன் மக்கள் தமக்கான பாதுகாப்பான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகவும் ஒரு பில்லியன் பேருக்கு மேலான மக்கள் போதுமான சுகாதார வசதியற்றவர்களாயும் இருக்கும் நிலையே உள்ளது. மோசமான நீரின் தரம் மற்றும் சுகாதாரமின்மை பயங்கரமானது. மாசுபட்ட குடிதண்ணீரால் வருடத்துக்கு 5 மில்லியன் இறப்புகள் நேரிடுகின்றன. வயிற்றுப்போக்கால் வருடமொன்றுக்கு ஏற்படும் 1.4 மில்லியன் குழந்தை மரணங்களைத் தடுக்க பாதுகாப்பான நீரால் முடியுமென உலக சுகாதார நிறுவனம் கணித்துள்ளது.

## 1.5 கோடி குழந்தைகள் சாவது ஏன்?

நீர்வளத்தை மாசுபடுத்தும் பிரதான அம்சம் தொழிற்சாலைக் கழிவுகளாகும். தொழிற்சாலைக் கழிவுகள் நீர்ச்சூழலுக்கே திறந்து விடப்படுகின்றன. இதனால் நீரானது சுவை, நிறம், மணம் என்பவற்றில் முற்றாக மாறுபடுகின்றது. நீர்ச்சூழலுக்கு தொழிற்சாலைக் கழிவுகள் விடப்படுவதால் நீரில் வாழும் உயிரங்கிகள் அழிவடைகின்றன. இதனால் முழு உயிர்ச்சூழலுக்குமே பாதிப்பு ஏற்படுகின்றது. மேலும் கப்பல்கள் கடலில் செல்வதாலும் பெருமளவான கழிவுகள் நீருக்குள் விடப்படுகின்றன. அவற்றுள் எண்ணெய்க் கழிவுகள் பிரதானமானவைகளாகும். இவற்றினால் கடல்வளம் பாதிக்கப்படுகின்றது.

மேலும் விவசாய இரசாயனப் பதார்த்தங்கள், துப்புரவாக்கிகள், வீட்டுக்கழிவுகள் என்பனவும் உயிர்ச்சூழலை மாசடையச் செய்யும் அம்சங்களாகும். உலகளாவிய ரீதியில் பல நீர்நிலைகள் மாசுபடுத்தப் பட்டுள்ளன. கைத்தொழில் புரட்சியின் பின்பு நீர்ப் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. பூமியின் நிலப்பரப்பில் 75 சதவீதத்தை நீர் கொண்டிருப்பினும் உலக சனத்தொகையின் ஒவ்வொரு நான்கு பேரிலும் மூவர் அருந்துவதற்கு தூய நீரின்றி அவதிப்படுகின்றனர். எமது நாட்டின் 25 மாவட்டங்களுள் 14 மாவட்டங்களில் வாழும் மொத்த சனத்தொகையின் 33 சதவீதமானவர்களுக்கு தூய குடிதண்ணீர் கிடைப்பதில்லை.

நகரமயமாக்கல் பல்வேறு நீர்ப்பிரச்சினைக்குக் காரணமாகின்றது. குடிதண்ணீர் போதாமை, சுகாதாரம் பேணப்படாமை மற்றும் நீர் மூலம் உண்டாகும் நோய்கள் என்பவற்றுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. உலகில் பாதுகாப்பான நீரின்றி 8 செக்கனுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மரணம் நிகழ்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு வருடமும் உலகில் ஒரு கோடியே 50 இலட்சம் குழந்தைகள் சாவதற்கு பாதுகாப்பற்ற குடிநீரே மூல காரணமாக அமைகிறது. நீர் தொடர்பான நோய்களினால் இறப்பவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துக் கொண்டே போகின்றன. உலகில் மூவரில் ஒருவருக்குப் பாதுகாப்பான குடிதண்ணீர் உறுதி செய்யப்படவில்லை.

## சிங்கப்பூரும் குடிதண்ணீரும்

ஆண்டுதோறும் நீருக்கான தேவை அதிகரித்துச் செல்கின்றன எனவே அரிதாக உள்ள வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையுமென குறிப்பிடப்படுகின்றது. நீர் தீர்ந்துபோகின்ற ஒரு வளம் என்பது பற்றிய உலகளாவிய விழிப்புணர்வு தற்போது ஏற்பட்டுள்ளது.

உலக தண்ணீர் தேவையை அதிகரிப்பதில் சமூக பொருளாதாரக் காரணிகள் முன்னணியில் உள்ள பகுதிகளில், நீர் முகாமைத்துவத்தால் அவற்றை சரிசெய்ய முடியும் என்று உலகளாவிய அறிக்கை தெரிவிக்கன்றன. அவற்றில் நிலைத்துநிற்கும் தண்ணீர் விநியோகக் கட்டமைப்பை சிங்கப்பூர் அரசு உருவாக்கியுள்ளது.

முக்கியமாக அதிக தரம் உள்ள தண்ணீர் மீளுருவாக்கம், கடல்நீர் சுத்திகரிப்பு என இந்த நடைமுறை உள்ளது.

நவீன நீர் தொழில்நுட்பங்கள் மற்றும் நீர் முகாமைத்துவத்தில் உலக அளவில் முன்னணியில் உள்ள மற்றொரு நாடு இஸ்ரேல். தண்ணீருக்கான சவாலை எதிர்கொண்டுள்ள இலங்கை போன்ற மூன்றம் உலக நாடுகள், இதுபோன்ற திட்டங்களைப் பின்பற்றி, தங்களுடைய நீர் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியும். தற்போதைய சமூகபொருளாதார நெருக்கடியில் குடிதண்ணீர் தேவைக்கான அழுத்தம் என்பது மறைமுகமான அறிகுறிதான். ஆனால் அது தொடர்பாக எப்படி கையாளப் போகின்றன என்பதைப் பொறுத்து அது அமையும். மோசமான தண்ணீர் பிரச்சினையை சில நாடுகள் வெற்றிகரமாக சமாளித்த உதாரணங்களும் இருக்கின்றன.

## காட்சிப்பொருளான மழைநீர் சேமிப்புத் தொகுதி

மழைநீர் சேகரிப்பு என்பது மழை நீரை வீணாக்காமல் சேமித்து நாளாந்த தேவைகளுக்கு பயன்படுத்த முடியும். இந்தத்திட்டத்தின் மூலம் இலகுவாக நீர்த்தேவையை நிவர்த்தி செய்ய முடியும்.

மழைநீர் ஒன்றே எளிதில் கிடைக்கக்கூடிய, சிக்கனமான நீர் ஆதாரம். இத்திட்டம் உள்ளூரிலேயே கிடைக்கும் விலைமலிவான மூலப்பொருக்களைக் கொண்டு எளிதாகக் கட்டமைக்கப்பட்டு, பெரும்பாலான வசிப்பிடங்களில் வெற்றிகரமாகச் செயற்படுத்தக்கூடியது.

ஆனால் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் கிடைக்கப்பெறுகின்ற மழைநீரைச் சேமித்துப் பயன்படுத்துகின்ற நடைமுறையில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை. மழை நீர் சேமிப்புக்களுக்காக பொது இடங்களிலும் சில தனியார் வீடுகளிலும் அரச மற்றும் தொண்டு நிறுவனங்களினால் பெரும் நிதி செலவில் அமைக்கப்பட்ட மழைநீர் சேமிப்புத் தொகுதிகளில் பல இன்றும் பயன்படுத்தப்படாமல் காட்சிப்பொருளாகவே உள்ளன.

இவற்றைச் சரியாக பயன்படுத்தக்கூடிய சமூக மாற்றம் ஏற்படுத்தப் படுத்தப்படுகின்றபோது சுயசார்பு நீர்த் தேவையைப் பூர்த்தியாக்கலாம்.



## இலங்கையில் நீர் விநியோகம்

நிலத்தை செயற்கையாகத் துளையிடுதல் மூலம் கிணறுகள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. ஏனைய நீராதாரங்களென மழை நீர் மற்றும் நதி அல்லது ஏரி நீர் என்பவற்[illegible]. ஆனாலும் மேற்பரப்பு நீரை விநியோகத்துக்குப் பயன்படுத்தும் பொழுது சுத்திகரிப்புச் செய்தல் அவசியமானது. கரையாத மற்றும் கரையக் கூடிய பொருள்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கிருமிகள் ஆகியனவற்றை அகற்றுவதாக இது அமையலாம். இதற்கான வழியாகக் கருதப்படும் மணல் வடிகட்டு முறையில் கரையாத பொருள்கள் மட்டுமே அகற்றப்படுகின்றன. ஆனால் குளோரினேற்றம் மற்றும் கொதிக்க வைத்தல் ஆகியன தீங்கு விளைவிக்கும் கிருமிகளை அளிக்க வல்லதாக இருக்கின்றன. நீரை காய்ச்சி வடிகட்டுதல் மேற்கூறிய மூன்று பணிகளையும் செய்கிறது. இன்னும் முன்னேறிய தொழில்நுட்பங்களான தலைகீழ் சவ்வூடுபரவல் போன்றவைகளும் நடைமுறை வழக்கில் உள்ளன. வறண்ட கடற்கரை காலநிலையுடைய பகுதிகளில் வற்றாத சமுத்திர அல்லது கடல் நீரை உப்புநீக்கம் செய்து பயன்படுத்துவது மிகுந்த செலவை உள்ளடக்கிய ஒரு முயற்சியாகும். இருந்தும் அண்மைக்காலமாக உவர்நீரை நன்நீராக மாற்றுகின்ற திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கை மக்கள் அனைவருக்கும் சுகாதாரமான குடிதண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதை முதன்மைப்படுத்தி இவ்வாண்டும் 'பிரஜா ஜல அபிமாநி' போன்ற பல்வேறு குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் நாடு முழுவதிலும் முனன்னெடுக்கப்படுகின்றன. தற்போது, மக்கள் தொகையில் 54 சதவீதம் பேருக்கு மட்டுமே குழாய் மூலம் பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைக்கின்றது. எனவே, "அனைவருக்கும் நீர்" கருத்திட்டத்தின் கீழ், புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்களையும் தற்போதுள்ள நீர் கருத்திட்டங்களை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கும் 2021 2024 ஆம் ஆண்டில் முழு நாட்டுக்கும் பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்குவதற்கு 1,000 சமூக நீர் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## நீரும் அரசியலும்

நீர் மீதான அரசியல் என்பது நீர் மற்றும் நீராதாரங்களால் பாதிக்கப்படும் அரசியல் ஆகும். இதன் காரணமாக நீர் உலக முக்கியத்துவம் வாய்ந்த வளமாகவும் பல அரசியல் சண்டைகளின் முக்கிய காரணமாகவும் நீர் இருந்திருக்கிறது. அது உடல் நல பாதிப்பையும், பல்லுயிர் விருத்தியையும் பாதிக்கக்கூடியது ஐக்கிய நாடுகள் அறிக்கையின்படி அனைவருக்கும் போதுமான அளவு நீருள்ளது., ஆனால் அதனைக் கிடைக்காமல் செய்வது தவறான நிர்வாகமும், நேர்மையின்மையுமேயாகும் என குறிப்பிடப்பட்டவை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. எமது பிராந்தியத்திலும் நீருக்காக பிரதேசத்துக்கு பிரதேசம் முரண்பாடுகள் தோன்றுவதை நடைமுறை வாழ்க்கையில் கண்டுகொள்ள முடிகின்றது. எதிர்காலத்தில் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தால் அல்லது அவை நீர்த்துப்போனால் நீரை அடிப்படையாகக் கொண்ட பிரதேசவாதப் பிரச்சினைகளை உருவாக்கி ,இந்தியாவை தழுவி அரசியல் செய்வார்கள் என்பதைக் கட்டியம் கூறும் வகையில் உள்நாட்டுப்போருக்குப் பின்பு இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட நீர்விநியோகத் திட்டங்களுக்கான முயற்சிகளின்போது நடைபெற்ற நிகழ்வுகளைச் சொல்லலாம்.

உலக நீர் தினம் ஆண்டுதோறும் நினைவுகூரப்பட்டால் மட்டும் போதாது. அதன் தாற்பரியமும் பேணப்படல் வேண்டும்.. நீரை வீணே விரயம் செய்வதும், எல்லை இன்றி பயன்படுத்துவதும், நீர்ப்பற்றாக்குறை நிதமும் நிலவவே வழி செய்யும்.

எடுக்க எடுக்க ஊறிக்கொண்டிருப்பதற்கு நிலத்தடி நீர் ஒரு அட்சய பாத்திரமல்ல என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். நீரின் அருமையை பற்றியும் நீரை சேமிப்பதன் அவசியத்தைப் பற்றியும் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்



○ சுழியன்



பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும், விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்தும் பெரும் எதிர்ப்புப் பேரணியை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நடத்தியிருந்தது.
ஏற்பாட்டாளர்களால் எதிர்பார்க்கப்பட்ட மக்கள் எண்ணிக்கையைவிடவும், அதிகளவானோர் இதில் பங்கேற்றுள்ளனர். சஜித் அணிக்கு இது பெரும் பலமாகவும், அரசுக்கு பலத்த அடியாகவும் அமைந்துள்ளது.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அநுராதபுரத்தில் நடத்திய கூட்டத்துக்கு பதிலாக அங்கு பிரமாண்ட கூட்டத்தை நடத்தவே சஜித் அணி திட்டமிட்டிருந்தது. ஆனால், கூட்டங்களை நடத்துவதில் பயன் இல்லை, மக்களின் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி செயலகம் முன்செல்வோம் என ராஜித ஆலோசனை வழங்கியுள்ளார். இந்த ஆலோசனையின் பிரகாரமே இவ் வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.
அத்துடன், ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு, உறுப்பினர்கள் வெளியேறவுள்ளனர் என தகவல்கள் வெளியிடப்பட்டுவந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி ஒற்றுமையாகவே உள்ளது என்ற தகவலையும் இந்தப்பேரணி ஊடாக சஜித் வழங்கியுள்ளார். சம்பிக்க உட்பட சஜித்துடன் அதிருப்தியில் உள்ளனர் எனக் கூறப்படும் உறுப்பினர்கள் பலரும் எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் களத்தில்

2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து, பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாளர் ஈடுபட்டுள்ளாராம்.
சில எதிரணிகள், சிவில் அமைப்புகள் மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே இதற்கான வியூகத்தை அவர் வகுத்துவருகின்றார் எனவும், இரகசிய பேச்சுகள்கூட இடம்பெற்றுவருவதாகவும் தெரியவருகின்றது.
களுத்துறை மாவட்டத்தில் உள்ள அரசியல் பின்புலம் கொண்ட ஒருவரையே சந்திரிகா அம்மையார் இலக்கு வைத்துள்ளார் எனவும், தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெறும் வகையிலுமே அந்த நபரை சந்திரிகா, தெரிவுப் பட்டியலில் முன்னிலையில் வைத்துள்ளார் என அறியமுடிகின்றது.
2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு சந்திரிகா அம்மையாரே, திரைமறைவில் காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருந்தார்.

## மாநாடும் பேரணியும்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் எதிர்வரும் 23 ஆம் திகதி சர்வகட்சி மாநாடு நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
எனினும், இம்மாநாட்டைப் புறக்கணிப்பதற்கு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.
அத்துடன், ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் பங்கேற்காது என தெரியவருகின்றது. அன்றைய தினம் ஜே.வி.பியினரால் நுகேகொடையில் பெருமெடுப்பில் அரச எதிர்ப்பு கூட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## யாருக்குப் பதவி?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை விரைவில் கூடவுள்ள நிலையில், கட்சியின் தலைமைப் பதவி யாருக்கு வழங்கப்படும் என்பது தொடர்பில் மலையக அரசியல் வட்டாரங்களில் பலகோணங்களில் கதை அடிபடுகின்றது.
இ.தொ.கா.வின் தலைவராகச் செயற்பட்ட அமரர் ஆறுமுகன் தொண்டமான், கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிடவிருந்த நிலையில் திடீரென மாரடைப்பால் உயிரிழந்தார்.
அவரின் மறைவின் பின்னர் இ.தொ.காவின் பொதுச்செயலாளர் பதவி ஜீவன் தொண்டமானிடம் ஒப்படைக்கப்பட்டது. தொண்டமானுக்கு பதிலாக, ஜீவன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். எனினும், தலைமைப்பதவிக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.
கட்சிக்குள் ஏற்படும் முரண்பாடுகளைக் கருத்திற்கொண்டே அந்தப் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது.
தற்போது காங்கிரஸின் தலைவராக அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மனைவி அல்லது மகள் நியமிக்கப்படக்கூடும் என உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.






## கோத்தாவுக்கு வந்த சோதனை

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த 16 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் ஒரே நேரத்தில் அதனை ஒ(லி)ளிபரப்பு செய்வதற்கும், மொழிபெயர்ப்புடன் வழங்குவதற்கும் ஜனாதிபதியின் உரை முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டது. இதற்கான நடவடிக்கை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. ஜனாதிபதியின் உரையை வீடியோ செய்துகொண்டிருக்கையில், ஜனாதிபதி செயலகத்தில் திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி செலயகத்தில் மின்பிறப்பாக்கிகள் இருந்தபோதும், ஒளிப்பதிவு இடம்பெற்ற பகுதியில் மின்பிறப்பாக்கி இன்மையால், சிறிது நேரத்தின் பின்னரே வீடியோ பதிவு மீண்டும் இடம்பெற்றுள்ளது. இதென்னடா ஜனாதிபதிக்கு வந்த சோதனை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானத்தீ

○ கருணை ரவி 26






பூறாட்டிக்கு அவர்கள் கொடுத்த ஐயாயிரம் ரூபா பெரிய உதவியாக இருந்தது. பூங்கொடி அவர்களுக்குத் தேநீர் கொடுத்து வழியனுப்பினாள். அவர்கள் போகும்போது அவர்களின் துப்பாக்கியையே நித்தி பார்த்துக்கொண்டு நின்றான். அந்தத் துப்பாக்கிக்காரர்கள் நிருபனை மடியில் வைத்திருந்து 'ஆனா, அவன்னா' சொல்லிக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். அவர்கள் போனதும் பூங்கொடியிடம் பயம் தொற்றியது. யாரும் சொல்லிவிட்டால் ஆமிக்காரர் வருவார்கள். அடித்து கைகால்களை முறிப்பார்கள். தடுப்பு முகாம்களுக்குக் கொண்டு போவார்கள். பூறாட்டி சொன்னான் 'காசு தந்ததை எவருக்கும் சொல்ல வேண்டாம்' என்று. அவர்கள் மரங்களைப் பறிக்கும்போது எவரும் வரவில்லை. கனகம் எட்டிப்பார்த்தாள். அவர்கள் போனதும் எல்லோரும் வந்தார்கள். பானை சட்டிகள், உடுபுடைவைகள் எல்லாவற்றையும் தூக்கிப் பார்த்தார்கள். பூறாட்டி வீட்டைக் கூட்டினான். வீட்டில் ஏறி எரிந்த வளைகளைக் கழட்டினான். தண்ணியை ஊற்றி சுவர்களைக் கழுவினான். பூங்கொடி உடுப்புப் பையைத் தூக்கி புதிதாக போட்ட கொட்டிலுக்குள் வைத்தாள். எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த கனகம் கேட்டாள்

"உந்த வீட்டை மேயப்போறியளே? எரிந்த வீடு உங்களை உய்ய விடுமே?"

சொல்லிவிட்டு கனகம் போனாள். பூங்கொடிக்கு அது சரியாகப் பட்டது. பூறாட்டியை இறங்கச் சொன்னாள். பூங்கொடி வயது முதிர்ந்தவர்களின் அனுபவ அபிப்பிராயங்களில் நம்பிக்கை கொண்டவள். வீட்டை புதிதாகப்போட நினைத்தாள்.

பூறாட்டி முகட்டில் இருந்து இறங்கினான். ஏற்கனவே துன்பங்களுக்கு மேலே துன்பங்கள் குவியும் நிலையில், கனகம் சொன்னபடி கிடக்கும் மரந்தடிகளைக் கொண்டு புதிதாக வீடுபோட நினைத்தான். சாத்திரியைக் கூட்டிவந்து வீட்டுக்கு நிலையம் எடுத்து வீடுகட்டவேணும் என்று பூங் கொடி சொன்னாள்.

இருள் ஊரை விழுங்கத்தொடங்கி யது. விளக்கு இல்லை. கனகம் வீட்டில் ஒரு போத்தல் வாங்கி அதை விளக்காகச் சரிக்கட்டி திரியைப் பற்றவைத்தாள். பூறாட்டி இடுப்புக்குள் வைத்திருந்த காசை எடுத்து பூங்கொடியிடம் கொடுத்தான். வாங்கியவள்

"நாளைக்கு தோட்டை எடுப்பமே?" என்றாள்.

பூறாட்டிக்கு விருப்பம் தான். ஆனால், சைக்கிள் எடுக்க விரும்பினான். அந்த விருப்பத்தை அவளிடம் சொன்னான்.

"பிலிப்பு தோட்டை வித்துப்போடுவான்"

அவள் மனமின்றிச் சொன்னாள்.

"எங்கடை நிலமை தெரியும்தானே... இன்னும் ஒருமாதம் தவணை கேட்டுப்பாக்கிறன். அதுக்கிடேலை உழைச்சு எடுக்கலாம்"

அவள் சம்மதித்தாள். விளக்கு மங்கிக்கொண்டிருந்தது. மண்ணெண்ணெய் இல்லை. நித்தியும் நிருபனும் படுத்துவிட்டார்கள். வேலி இல்லாதது அவளுக்குப் பயமாக இருந்தது. வீடும் றோட்டும் ஒரேமாதிரியாக இருக்கிறது. பூறாட்டி ஐந்தாறு கிடுகுகளை எடுத்து வாசலை மறைத்தான். பூங்கொடியும் நித்தியும் நிருபனும் உள்ளுக்குப் படுத்தார்கள். பூறாட்டி வெளியில் படுத்தான். அவன் உள்ளே படுக்க இடம் காணாது. விளக்குத் தணிந்துவிட்டது.

பூறாட்டிக்கு நித்திரை வரவில்லை. விடிய வேளைக்கு எழும்பி சாத்திரி வீட்டை போகவேணும். கனகம் வீட்டுக்கோழி கூவியது. சேவல் வேளைக்கு கூவினால், ஆந்தை அலறினால் கெடுதி நடக்கும் என்று கந்தவிக்கிழவன் ஒருநாள் சொன்னது பூறாட்டிக்கு ஞாபகம் வந்தது. பூறாட்டி இப்படியான கதைகள் எதையும் நம்புவதில்லை. அதைநினைத்து பயம்கொள்வதுமில்லை. இடது காலுக்குமேலே வலது காலைப்போட்டுக் கொண்டு படுத்தான். வலதுகால் அவனையறியாது ஆடியது. அவனுக்கு காலாட்டும் பழக்கம் எட்டுவயதில் இருந்தே இருக்கிறது. பதினைந்து வயதில் அதை நிறுத்தவேணும் என எண்ணிய அவனால் இன்றுவரைக்கும் அதை நிறுத்த முடியவில்லை. பள்ளிக் கூடத்தில் முன்வரிசையில் இருந்து கணக்குச் செய்து கொண்டிருக்க பார்வதி ரீச்சர் முகத்தில் டஸ்டரால் எறிந்தார் காலாட்டக்கூடாது என்று. அதற்குப்பிறகு அவன் முன்வரிசையில் இருப்பதில்லை.

"டொக்... டொக்... டொக்..."

அந்தச்சத்தம் அவனைக் காலாட்டாது தடுத்தது. அது சப்பாத்துச் சத்தம். அசையாமல் அப்படியே கிடந்து காதுகளை கூர்மையாக்கினான். அந்தச்சத்தம் பெருகியது. ஆமிக்காரரின் நடமாட்டங்களைக் கண்டு நாய்கள் குரைக்கவில்லை. கண்ணிவெடியோடு தொடங்கிய துப்பாக்கிச் சத்தங்களுக்கு அஞ்சி ஓடிய நாய்கள் இன்னும் ஊருக்குத் திரும்பவில்லை. வாகனங்களை எங்கேயோ மறைத்து விட்டு நடந்து வருகிறார்கள். ஏன் என்பதொன்றும் அவனுக்குத் தெரியவில்லை. வேலி இல்லாதது அவனுக்குப் பயத்தைக் கிளர்த்தியது. மெதுவாக அடித்தொண்டையால்

"பூங்கொடி..."

என்றான். அவளுக்குக் கேட்கவில்லை. அவளைத் தட்டி எழுப்புவதற்காக கையை நீட்டினான். நிருபனின் தலை கையில் அகப்பட்டது. அப்படியே கையை கொண்டுபோக அவளின் மார்பு கைகளில் அகப்பட்டது. அவள் கையைத் தட்டிவிட்டு மறுகரைக்குப் புரண்டு படுத்தாள். மீண்டும் கையைக் கொண்டு போய் அவளின் தோளைச் சுரண்டி

"பூங்கொடி..."

என்றான்.

"இஞ்சாலை வாங்கோ" மெதுவாகச் சொன்னாள்.

"சத்தம் போடாதை. றோட்டிலை ஆமி"

தலையை மிதத்தினாள். கைகளை நீட்டி அவனின் கையைப் பிடித்தாள். அவன் அவளைத் தடவிக்கொண்டு கையை முகத்துக்குக் கொண்டுபோனான்.

"பயப்பிடாதை"

"கனகமக்கா வீட்டை போவமே?"

"என்னெண்டு போறது?"

அவள் ஒரு பதிலும் சொல்லவில்லை. மெதுவாக நித்தியை எழுப்பினாள். பூறாட்டி அரக்கி உள்ளுக்குப் போய் மறைப்புக்குக் கட்டிய கிடுகை உயர்த்தி வெளியைப் பார்த்தான். இருட்டாகவே இருந்தது. சிகரட் மணம் காணியை மூடியது. நித்தி குந்திப்பிடித்தபடி இருந்தான். அவள் நிருபனைத் தூக்கி வேலிப் பொட்டுக்கால் கனகம் வீட்டுக்குள் நுழைந்தாள். அவளுக்குப்பின்னால் நித்தியும் பூறாட்டியும் போனார்கள். கனகம் வீட்டு வாசலில் ஏறினார்கள். வெளிச்சம் இல்லை. கதவுகள் திறந்தபடி இருந்தன. வீட்டில் எவருமில்லை.

(வருவாள்)

---

அரிமாநேத்ரன்

## துப்பறியும்



18

'காமிக்ஸ் தொடர்'

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்

AK67




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி 75



வனமதில் துள்ளித்திரியும்
புள்ளிமான் குட்டியாய்
சோலைதனில் ஆடித்திரியும்
வண்ணப் புள்ளி மயிலாய்
மாஞ்சோலைதனில் கூவித் திரியும்
மாங்குயிலாய் இவள்
வானமதில் பாடிப்பறக்கும்
இறக்கை கட்டிய பட்டாம்பூச்சியாய்

**சி.மகாலட்சுமி**, கொக்குவில்

எரிபொருள் பிரச்சினையும்
எரிவாயு வரிசைகளும்
மின் விநியோகக் குறைப்பும்
சிந்திக்க வைக்கும்
வசதிகள் குறைந்த
முன்தின காலத்தில்
நடமாடும் சேவைகள்
நன்றாகவே நடந்தன

**க.நாகராசா**
நுணாவில்
சாவகச்சேரி

கார் இருள் துகில்
பூண்டு பட்டாம்பூச்சி
இறக்கைதனை சூடி
கரிய பாதணியுடன்
குந்தி இருக்கும் குமரியே
கரம் தனில் துப்பாக்கி
ஏந்த ஏது என்ன?
எடுத்து விடு பண்புடனே

**கவிக்கோ**
வவுனியூரான்

## கவிதைகள்

தமிழன் எனும்
பட்டாம்பூச்சி
தரணியின் வான்
உயரம் வரை பல
துயரம் சுமந்து
அறிமுகம் ஆனது
துவக்கதின்
துவக்கமே

**சி.பாவரசன்**
யா/வட்டு இந்துக்கல்லூரி

கன்னம் தூக்கிய சின்ன பறவை
கன்னம் திரும்பிய வண்ண சிறகில்
ஆயிரம் மனக்கறைகள்
இருக்கையும் உண்ண
பருக்கையும் இன்றி
முழங்கால் நிமிர்த்திய அமர்வில்
கலக்கம் நிரப்பிய துலக்க நிலையில்
இருக்கும் சிறகுடைந்த சின்ன பறவை

**லோ.கம்சனா,**
யாழ்ப்பாணம்

வண்ணத்துப்பூச்சி
சின்னமதாய் ஏற்று
சுன்னமதில் வெற்றியே
இலக்காக ஆக்கி நம்
சின்னவனின்
துப்பாக்கி சீறி
சன்னமதைத் துப்பி
கன்னமதை வைக்கமுன்
முன்னோர்களே
வழிவிடுங்கள்
வாசல்களைத்திறந்து

**சி.விஜயராணி**
வட்டுக்கோட்டை

துயரை எதிர்த்து
துப்பாக்கி அணிந்து
துணையாக
இறகைக் கொண்டு
துணிவோடு
உலகைச் சுற்றிவா...

**றெ. மலரிசை**
நமணங்குளம்
மல்லாவி

படிப்பை விடப் பற்றிப்
பிடித்தோம் துவக்கை
சுற்றிவர இருந்த பகை
பற்றி எரிந்தது பூமி
சுற்றுவதை மறந்துகூட
சற்றே நின்று பார்த்தது எமை
பட்டாம் பூச்சியது பறந்ததுவோ
எட்டாம் இலக்கதுவாய் இறந்ததுவோ
எட்டாதவர்களாய் நாம் இன்றும்

**இ.சிவசிறிதரன்**
அராலி மத்தி, வட்டுக்கோட்டை

**பரிசு பெறும் கவிதை**

எனது ஓராயிரம்
சிறகுகளை விரிக்கவும்
வானிற் பறக்கவும் ஏங்கினேன்
வானின் நட்சத்திரங்களையும்
சூரியனையும் தொட்டுப்பார்க்க
அவாவில் என் ஆன்மா
கையினிலே காவல் அணி
செய்வதாயிற்றே என் பணி
விடுதலைக்காக அடிக்கும் சிறகுகள்
எப்போது பறக்கும் இனி,

**இ.பர்மினி**

வண்ணத்துப்பூச்சியைப் போல்
மகிழ்ச்சியுடன் துள்ளித்
திரிய வேண்டிய கனவே
புத்தகங்கள் தாங்கிய கையில்
ஆயுதம் ஏனோ?
கடுமையாய் யோசிக்கின்றாய்
உன் விடியலைத்தேடியா?
தன்விடிவு தன்னுடைய கையில்
உதயம் நிச்சயம் வசந்தம் வீசும்

**ச.துஸ்யன்**, அத்தியடி,
யாழ்ப்பாணம்



## 76

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள்.

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
**25.03.2022**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, க... யாழ்ப்பாணம்.
Sanje...
0773165555

# ஊர்ப்புதினம்

○ இராகவன்

நான் ஊர்ப்புதினத்தின்ர தொடக்கத்தில உலுவி இலட்சுமியக்கையைப் பற்றிச் சொல்லியிருந்தனான். அந்த உலுவி இலட்சுமியக்கையின்ரை கடைசித் தங்கைக்காரிதான் இந்தக் கண்ணாடி வள்ளிப்பிள்ளையக்கை. இவையளுக்கு மூத்தவா ஒராளிருந்தவா. அவாவும் கண்ணாடி போட்டவாதான். அவாவைப் பற்றி பிறகு சொல்லுறன். இப்ப வள்ளிப்பிள்ளையக்கையைப் பற்றிப் பாப்பம்.

நான் குலமக்காவின்ரை தகப்பன் புழுவெட்டிச் சின்னையாப்பாவைப் பற்றிச் சொல்லேக்குள்ள மாதினியைப் பற்றியும் சாதுவாய்ச் சொல்லியிருக்கிறன். இப்ப மாதினியைப் பற்றியும் பாப்பம். இந்த மாதினி ஆரெண்டால் கண்ணாடி வள்ளிப்பிள்ளையக்கையின்ர பேரப்பிள்ளைதான். பேரப்பிள்ளையெண்டால் மகளின்ர மகள். கண்ணாடி வள்ளிப்பிள்ளையக்கைக்கு இரண்டு ஆம்பிளைப் பிள்ளையளும் இரண்டு பொம்பிளைப் பிள்ளையளுமாய் நாலுபேர். ஆம்பிளைப் பிள்ளையளைப் பற்றிச் சொல்லுறதுக்கு முந்தி பொம்பிளைப் பிள்ளையளைப் பற்றிப் பாப்பம். அவையளில ஒராள் கணேசியக்கா. மற்றவா வசந்தாக்கா. அவா திருகோணமலையில இருக்கிறா எண்டு கேள்விப்பட்டிருக்கிறன். ஆனால் நேரில காணேல்ல.

கணேசியக்கா வட்டக்கச்சியிலயிருந்தவா. அவாவுக்கு நாலு பொம்பிளைப் பிள்ளையள். அதில மூண்டுபேர் கண்ணாடி வள்ளிப்பிள்ளையக்கையோடதானிருந்தவை. அதில குமுதினியக்கா நேர்ஸா இருந்தவா. சந்தனக் கலரில நல்ல முகவெட்டோடயிருப்பா. நல்ல பாந்தமாய் இனிமையான குரலில டிசென்ராகக் கதைப்பா.

30

அவா கண்ணாடிவள்ளிப்பிள்ளையக்கையை 'அம்மம்மா' எண்டு கூப்பிடேக்குள்ள இன்னுமொருக்கால் கூப்பிடவேணும் போலயிருக்கும்.

அடுத்தாக்கள் இரண்டு பேருந்தான் பகீரும் (பகீரதி) மாதினியும். பகீருக்கு என்னைவிட நாலைஞ்சு வயது கூட. மாதினிக்கு என்ரை வயதுதான். வள்ளிப்பிள்ளையக்கை வீட்டை நான் பின்னேரங்களில அம்மாவோட போறனான். அப்பவெல்லாம் எனக்கு மாதினிதான் விளையாட்டுத்தோழி. அடிச்சுத் தொட்டு கெந்தித்தொட்டு, ஒளிச்சுத் தொட்டு எண்டு ஏதாவதொரு விளையாட்டு விளையாடுவம். இடையில இரண்டு பேருக்குமிடையில சண்டை வந்திடும். மாதினி சரியான குண்டு. அதால நான் 'போடி குண்டுப் பூதம்' எண்டு சொல்லுவன். நான் அப்ப சரியான ஒல்லிப் பெடியன்.

அதுக்குள்ளை கொஞ்சம் வாடலும். அதால மாதினி என்னை 'போடா! ஒல்லி வாடல்கிழவா!" எண்டு சொல்லுவாள்.

சண்டை முத்திறதுக்கிடையில அம்மா குறுக்கிடுவா. "ம்...ம்... விளையாடினது காணும் வெளிக்கிடு போவம்' எண்டு அதோட அந்தச் சண்டை 'பக்'கெண்டு நிண்டிடும். கணேசியக்கா மக்களைப் பாக்க அடிக்கடி தாய்வீட்டை வட்டக்கச்சியிலயிருந்து வந்துபோறவா. அப்ப நான் அவாவைக் கண்டிருக்கிறன். கறுப்பியெண்டாலும் நல்ல முகவெட்டான மனிசி. பகீர் அச்சொட்டாக் கணேசியக்காவின்ர சாயல்தான்.

கணேசியக்கா அளவான உயரம். எப்பவும் தவிட்டு நிறச் சீலைதான் கட்டியிருப்ப. நல்ல பம்பலாய்க் கதைப்பா. அவா கதைக்கிறதைக் கேக்க எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வரும். எங்கடை அம்மாவும் கணேசியக்காவுக்கு ஈடுகொடுத்து முசுப்பாத்திவிடுவா. தேமா மரத்துக்குக் கீழேதான் இதெல்லாம் நடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

## 1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

**1842 நவம்பர் - டிசெம்பர்**
மன்னாரில் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் 700 பேர் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டனர்; 500 பேர் உயிரிழந்தனர்.


**1843 ஏப்ரல் 01**
மன்னாரில் அரச பாடசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை ஆரம்பத்தில் கச்சேரியிலுள்ள ஒரு அறையிலேயே இயங்கியது.
இராணி அப்புக்காத்து சுப்ரமணியம் அம்பலவாணர், தீவக நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இராணி அப்புக்காத்து (Queens Counsel) என்பது பிரிட்டிஷ் நீதிமன்றங்களிலும் வாதாடுவதற்கான தகுதி. இவர்கள் 'கியூ சி' என சுருக்கமாக அழைக்கப்பட்டனர்.தமிழ் அரசியல்வாதிகளில் கணிசமானோர் 'கியூ சி' தகுதி பெற்றிருந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள அரச காணிகள் ஐரோப்பிய விவசாய முதலீட்டாளர்களுக்கு ஒரு ஏக்கர் 5 ஷில்லிங் வீதம் விற்பனை செய்யப்பட்டன.

**1843 ஓகஸ்ட்**
யாழ்ப்பாணத்தில் சின்னமுத்து நோய் தாக்கியது; நோய்த் தாக்கத்துக்கு ஆளானோர் தனிமைப்படுத்தலுக்கு சிறுத் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்தை புயல் தாக்கியது

**1843 டிசெம்பர்**
ஹென்றி மார்ட்டின் யாழ்ப்பாணக் கச்சேரியில் களஞ்சியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அரச மருந்துக்களஞ்சியம், மதுபானசாலைகள், உப்புக்கொட்டில்கள் (இவை குருநகர் கடற்கரை வீதியில் அமைந்திருந்தன; பிரிட்டிஷாரின் ஆட்சியில் பெருமளவு உப்பு யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனையிறவு, வெள்ளம்போக்கட்டி போன்ற இடங்களில் உப்பளங்கள் இருந்தன.) வனபரிபாலனம் என்பன அரச களஞ்சிய பொறுப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தன. காடுகளில் மரம் தறிப்பவர்கள் அரச களஞ்சியப் பொறுப்பாளரின் அனுமதி பெற்றே மரம் தறிக்க வேண்டும். பின்னாளில் ஹென்றி மார்ட்டின் உப்புக் குத்தகை எடுத்த போது .கடும் மழை பெய்தமையால் பெருநட்டமடைந்தார். பின்னர் அரச அதிபரிடம் விண்ணப்பித்து அரச அதிபர் நட்ட ஈடு வழங்க சிபாரிசு செய்தார்.
அந்தக்காலத்தில் தோம்புகள் யாவும் பனை ஓலையிலேயே எழுதப்பட்டிருந்தன. இவை மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டமையால் அரச அதிபர் டைக் 160 ஸ்டேர்லிங் பவுன் செலவில் இரு எழுதுவினைஞர்களை அமர்த்தி 181 கிராமத் தோம்புகளையும் கடதாசியில் எழுதி முடித்தார். 1843 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தோம்பு எழுதும் பணிகள் 1844 ஆம் ஆண்டு நிறைவடைந்தன. 15877 ஏக்கர் அரச காணிகள் ஏக்கர் 20 ஷில்லிங் வீதம் விற்பனை செய்யப்பட்டன.

**1844**
அச்சுவேலியைச்சேர்ந்த கதிரேசுப் புலவர் அகால மரணமடைந்தார். இவர் பத்ம பூரணி நாடகத்தை எழுதியுள்ளதுடன் அச்சுவேலி நெல்லியம்மன் கோயில் மீது பல பதிகங்களையும் பாடியுள்ளார்.

**1844 ஜீன்**
மன்னார், கிளிநொச்சி (பச்சிலைப்பள்ளி) பகுதிகளில் யானைகளின் தொல்லை அதிகரித்தமையால் யானைகளைக் கொன்று அதன் வாலை எடுத்து வந்து, கச்சேரியில் ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என அரச அதிபர் அறிவித்தார். அரச அதிபரின் அறிவிப்பைத் தொடர்ந்து 150 யானைகள் கொல்லப்பட்டு அவற்றின் வால்கள் எடுத்து வந்து கச்சேரியில் ஒப்படைக்கப்பட்டன. இவை கச்சேரி வளாகத்தில் புதைக்கப்பட்டன.


Sir. James Emmerson Tennent

**1844 ஜீலை**
ஜீலை 13 யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.
யாழ்ப்பாணத்தை பிரித்தானியர் கைப்பற்றிய போது கேர்ணல் பார்பட்டின் மொழிபெயர்ப்பாளராக இருந்த மன்னாரைச் சேர்ந்த ஜோன் பொத்மோர் தனது 84 ஆவது வயதில் காலமானார்.

**1844 ஒக்ரோபர்**
வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்டது.

**1844 நவம்பர்**
நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் சின்னமுத்து தாக்கியது. றொபேர்ட் ஜோன் டன்லப் (Robrt John Dunlop) யாழ்ப்பாணம் வந்து காணி கொள்வனவு செய்து, தென்னைச் செய்கையில் ஈடுபட்டார். ஒரு ஏக்கர் காணி ஒரு ஸ்டேர்லிங் பவுணுக்கு விற்பனை செய்யப்பட்டது. 800 காணி ஐரோப்பியர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

**1844 டிசெம்பர் 20**
இலங்கையில் அடிமை முறை முற்றாக ஒழிக்கப்பட்டது.
பொதுவேலைத்திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்தில் நீர் வடிகாலமைப்பு திட்டம் உருவாக்கப்பட்டது. மானிப்பாயை சேர்ந்த எதிர்மன்னசிங்கம் சட்டசபை உறுப்பினராகப் பதவியேற்றார்.
நல்லூர் உடையாராகப் பதவி வகித்த சரவணமுத்துப்புலவர் காலமானார்.
இவர் வேதாந்த சுயஞ்சோதி என்ற நூலை இயற்றியதுடன் ஆத்மபோத பிரகாசிகை என்ற நூலை சமஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தார்.
அடுத்த வாரம் குடியேற்ற நாடுகளின் செயலாளராக (Colonial Secretarry) இருந்த எமர்சன் ரெணன்ரின் (Sir. James Emmerson Tennent) யாழ்ப்பாண விஜயம் பற்றிப் பார்ப்போம்.

*(வரலாறு நீளும்)*



# சொற்சிலம்பம் போட்டி 75

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | ■ |
| 6 | | ■ | 7 | | | ■ | 8 |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | |
| 14 | | | ■ | 15 | | | ■ |
| | ■ | 16 | 17 | | ■ | 18 | 19 |
| ■ | 20 | | | ■ | 21 | | |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................................

கையொப்பம்:.........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. நிகழக்கூடாத ஒன்று 6. பழம் 7. சில சமயத்தில் யானைக்குப் பிடிப்பது 9. கை 10. சிங்கம் 11. புலவன் 13. கிணற்றில் நீர் அள்ளப் பயன்படுத்தும் கயிறு. 14. இதுவும் கயிறே. ஆனால் பெரியது. 15. ஒரு வகைப் பூச்சி 16. உரம் 18. தூக்கிச் செல்ல 20. விரலின் பகுதி 21. மிதமிஞ்சிய 22. எரிக்கப்படும் உருவப் பொம்மை 23. திக்கு.

## மேலிருந்து கீழ்

1. மமதை/ செருக்கு 2. கிரகங்களில் ஒன்று 3. சாதாரணமானவன் 4. ரகம் 5. ஓர் அசைச்சொல் 8. வேறுபடுவதைக் குறிக்கும் 9. இது ஒரு பிரபந்தவகை 10. அமராவதியின் மனம் கவர்ந்தவன் 12. ஒரு திசையின் சுருக்கம். 13. படர்க்கை, பன்மையைக் குறிக்கும் சொல் 15. துவாரம் போடு 17. ஓர் அரிசி வகை 19. ஒழுங்கில் அமைந்தது 20. மத்தி

### சொற்சிலம்பம் போட்டி 74 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பாதுகாப்பு 5. எது 7. தணிவு 8.வதனம் 10. தகனம் 12. வில்வம் 13. இல் 14. தரு 15. படு 16. முதுகு 18. உருக்கு. 20. தசமி 22. கண் 23. குடும்பி 24. தண்டு

**மேலிருந்து கீழ்**

1. பாதம் 2. துணி 3. காவுதல் 4. புவனம் 5. என 6.தும்மல் 9. தம் 11. கவலை 12. விருது 13. இடுக்கண் 14. தமுக்கு. 15. பரு. 17. குதம் 18. உமி 19. குண்டு 21. சபி.

### சொற்சிலம்பம் போட்டி இல.75

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,**
என்னும் முகவரிக்கு
**25.03.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

...சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான ...காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 74 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**ர.சங்கவிகா**
வேரவில், பூநகரி

**2 ஆம் பரிசு**
**ச.நிதுரா**
தும்பளை, பருத்தித்துறை

**3 ஆம் பரிசு**
**ஜெ.தனுசா**
4ஆம் வட்டாரம், புங்குடுதீவு

**4 ஆம் பரிசு**
**ச.கிருபன்**
இல .76, பழம் வீதி, கந்தர்மடம்.

**5 ஆம் பரிசு**
**ஆ.ஐஸ்வரியன்**
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஷெலன்ஸ்கி: ஓர் உலகப்போருக்கான சூத்திரதாரி!

ஆர்.பிரகாஷ்

உக்ரைன்-ரஷ்யா இடையிலான மோதலை மூன்றாம் உலகப் போராக மாற்றிவிட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நிற்கின்றார் உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி.

அவர் முன்னெடுத்து வரும் அத்தனை நகர்வுகளும் உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான இராணுவ நடவடிக்கையை ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையிலான போராகவோ அல்லது ரஷ்யாவுக்கும் ஒட்டுமொத்த உலக நாடுகளுக்கும் இடையிலான போராகவோ மாற்றிவிட வேண்டும் என்பதாகத்தான் அமைந்திருக்கின்றன.

ரஷ்யாவுக்கு எதிராக உலக நாடுகளின் பொருளாதாரத் தடைகளையும் இராணுவ உதவிகளையும் தன் உணர்ச்சிமிக்க பேச்சால் கோரிவந்த ஷெலன்ஸ்கி தற்போது ஒருபடி மேல்சென்றுள்ளார். உக்ரைனுக்குச் சாதகமான நாடுகளின் நாடாளுமன்றங்களில் உரையாற்றிவரும் அவர் , பல்வேறுபட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் உக்ரைனில் ரஷ்யா மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளை ஒப்பிட்டுப் பேசியிருக்கின்றார்.

முன்னதாக ஈபிள் கோபுரம் ரஷ்யாவால் தகர்க்கப்படுவதுபோன்ற காணொலியை வெளியிட்டு பிரான்ஸின் கவனத்தை வெகுவாகவும் நுட்பமாகவும் ஈர்த்திருந்த ஷெலன்ஸ்கி, தற்போது அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலை அமெரிக்க நாடாளுமன்றத்தில் நினைவுகூர்ந்து உக்ரைனில் ரஷ்யா மேற்கொள்ளும் தாக்குதலும் அதே வகையறாதான் என்ற வகையிலான கருத்தை வலியுறுத்தியிருக்கின்றார். ஷெலன்ஸ்கி எந்தெந்த நாடாளுமன்றங்களிலெல்லாம் உரையாற்றினாரோ அந்தந்த நாடாளுமன்றங்கள் அவரின் உரைக்கு சிறப்பான அங்கீகாரத்தையும் கொடுப்பதற்குத் தவறவில்லை. உக்ரைனுக்கு போதும்போதும் என்கின்ற அளவுக்கு இராணுவத் தளபாடங்களையும் இதர உதவிகளையும் அந்தந்த நாடுகள் ஷெலன்ஸ்கியின் உரைக்குப் பின்னராக வழங்கியுள்ளமை இங்கே கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயம்.

உலக உலா

உக்ரைனின் கீவ் நகரம் ரஷ்யப் படைகளால் சுற்றி வளைக்கப்பட்டு, பெரும் போரொன்றுக்கான தொடக்கப்புள்ளி தென்படும் நிலையில்கூட, ஷெலன்ஸ்கி தன் கபடத்தனமான நகர்வுகளைக் கைவிடவில்லை. அமெரிக்காவின் நிழல் அரசாக = கைப்பொம்மையாக =போரை எவ்வளவுதூரம் வலியதாக மாற்ற முடியுமோ அந்த வேலைகளைத்தான் ஷெலன்ஸ்கி தொடர்ந்து வருகின்றார்.

நேட்டோவில் இணைவதற்கான தனது அனைத்து நம்பிக்கைகளையும் உக்ரைன் கைவிட வேண்டும், ஏனைய நாடுகளது தளங்கள் எவையும் உக்ரைனுக்குள் இருக்காது என்பதை அது உத்தரவாதப்படுத்த வேண்டும், வெளிநாட்டுப் படைகளோ ஆயுதங்களோ நாட்டுக்குள் வராது என்பதை கீவ் உறுதிப்படுத்த வேண்டும் என்பனதான் ரஷ்யா உக்ரைனிடம் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வரும் விடயம். இந்த மூன்று நிபந்தனைகளுக்கும் உடன்பட்டால் மறுநாளே ரஷ்யா தன் படைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும். ஆரம்பத்தில் நேட்டோவில் இணையும் நகர்வைக் கைவிட்ட ஷெலன்ஸ்கி, ரஷ்யாவுடனான அண்மைய பேச்சுக்களிலெல்லாம் நேட்டோவை மீண்டும் முதன்மையாகத் தூக்கிப்பிடிக்கத் தவறவில்லை.

இருதரப்பு முரண்பாட்டுக்கு அடிப்படைக்காரணங்களாகிய இந்த மூன்று விவகாரங்களையும் ஏற்பதானால், தனது முக்கிய நிபந்தனை ஒன்றை வெளிநாடுகளது முன்னிலையில் ரஷ்யா எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என உக்ரைன் கேட்டிருக்கிறது. எதிர்காலத்தில் ரஷ்யா, உக்ரைனை ஆக்கிரமிக்க முற்பட்டால் நேட்டோ நாடுகள் இராணுவ உதவி அளிப்பதை உடன்படிக்கை மூலம் உத்தரவாதப்படுத்த வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. உக்ரைனின் இந்தக் கோரிக்கைக்கு ரஷ்யா உடன்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் இருக்கவே செய்கின்றன. ஆனால், ஒப்பந்தத்தில் மீண்டும் நேட்டோவைத் திணித்த ஷெலன்ஸ்கியின் நகர்வுகள் ரஷ்யாவை கோபப்படுத்திக் கொண்டிருக்கவே செய்யும். இந்தப் போர் உடனடியாக முடிவுக்கு வருவதற்கு உக்ரைன் பெரிதாக ஒன்றையும் செய்ய வேண்டியதில்லை. நேட்டோவுடன் எப்போதும் இணைய மாட்டேன் என்று அறிவித்தாலே போதும். ஆனால், உக்ரைன் நடுநிலை நாடு என்று அறிவித்து போரை முடிவுக்குக் கொண்டுவருவதை ஷெலன்ஸ்கிக்கு விரும்பவில்லை. இன்றும் உக்ரைன் எரிவதற்கும், அந்த நாட்டு மக்கள் அழிவதற்கும் ஒரே ஒரு நபர்தான் காரணம், அவர் ஷெலன்ஸ்கி அன்றி வேறு எவருமிலர்.

ஆர்.லயனல்



# சாதனைகளின் சொந்தக்காரன் ரொனால்டோ!

கால்பந்தாட்ட உலகில் ஒன்றன் பின்னர் ஒன்றாக பல்வேறு சாதனைகளைப் படைத்துவரும் நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ, தற்போது மற்றொரு மகத்தான சாதனையையும் படைத்துள்ளார். தொழில்முறை கால்பந்தாட்டப் போட்டிகளில் அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரர் என்ற சாதனையையே அவர் நிலைநாட்டியுள்ளார்.

இங்கிலிஸ் பிறீமியர் லீக் தொடரில் இந்த வாரம் நடைபெற்ற டொட்டென்ஹோம் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ரொனால்டோ 3 கோல்களைப் பதிவுசெய்ய 3:2 என்ற கணக்கில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது. இந்த மூன்று கோல்களையடுத்து ரொனால்டோ தொழில்முறை கால்பந்தாட்ட அர்ங்கில் பதிவுசெய்த கோல்களின் எண்ணிக்கை 807 என்று உயர்ந்தது. ஜோசப் பைகான் பதிவுசெய்த 805 கோல்கள்தான் தொழில்முறை கால்பந்தாட்ட அரங்கில் ஆகக்கூடுதலான கோல்களாக இதுவரை இருந்த நிலையில் அந்தச் சாதனையையே ரொனால்டோ தகர்த்துள்ளார். சர்வதேச அரங்கில் அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரராகவும் ரொனால்டோ உள்ளார். அவர் 115 சர்வதேசக் கோல்களைப் பெற்றுள்ளார்.

# ஆசியாவின் பெரும்போர் ஆரம்பமாகுமா?



இந்தியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இருதரப்புத் தொடர் கைவிடப்பட்டுள்ள நிலையில், இந்த மோதல் மீண்டும் ஆரம்பமாகுமா? என்ற எதிர்பார்ப்பும் கேள்வியும் இப்போது மீண்டும் எழுந்துள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான மோதல் ஆசியாவின் பெரும்போர் என்று அழைக்கப்பட்டது. ஆனால், இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் போட்டிகள் மற்றும் இராணுவ அத்துமீறல்களால் இரு அணிகளுக்கும் இடையிலான கிரிக்கெட் தொடர் கைவிடப்பட்டது. சர்வதேச கிரிக்கெட் சபையின் தொடர்களைத் தவிர ஏனைய இருதரப்புத் தொடர்களில் இந்த இரு அணிகளும் இப்போது விளையாடுவதில்லை. இதனால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு எவ்வித இழப்பும் இல்லை. ஆனால், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை பெரிதும் சார்ந்திருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இதனால், இரு தரப்புத் தொடரை மீண்டும் நடத்துவதற்காக இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவரான கங்குலியை அணுகியுள்ளார் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவரான ரமீஸ் ராஜா. வழக்கம்போல, 'பரிசீலிக்கின்றோம்' என்ற பதிலைத்தான் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளதாம்.

# திறந்தவெளிச் சிறைக்குள் ஐ.பி.எல்.




இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடர் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், வீரர்களுக்கான 'பயோ பபிள்' (உயிர்காப்பு வளையம்) விதிமுறைகள் மிகக் கடுமையாக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் ஐ.பி.எல். தொடர் இந்தியாவில் நடத்தப்பட்டது. எனினும் வீரர்களுக்கான 'பயோ பபிள்' வலயத்தில் காணப்பட்ட தொய்வு நிலையால் கொரோனா ஊடுருவியது. இதன் பின்னர் தொடர் கைவிடப்பட்டு பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தப்பட்டது. இந்த நிலை இந்த வருடம் வந்துவிடக்கூடாது என்பதால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் 'பயோ பபுள்' வலயத்தின் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வரவிருக்கும் சீசனில் வீரர்கள் மட்டுமல்ல, அணிகளின் அதிகாரிகள் உட்பட யாரேனும் 'பயோ பபுள்' பாதுகாப்பு நெறிமுறைகளை மீறினால்1 கோடி ரூபா அபராதம் முதல் பல்வேறு தண்டனைகளைச் சந்திக்க வேண்டிவரும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆகமொத்தத்தில் திறந்தவெளிச் சிறைபோன்ற நிலையில்தான் இந்தத் தொடர் நடத்தப்படப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கைவண்ணம்



J.L.நிஷாரா
தரம்- 6
யா/ ஏஞ்சல் இன்ரர்நெஷனல் பாடசாலை.



வ.ஜானுஷா
தரம்-4
யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.



R.N.ஹெஷோனா
தரம்-8A
யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்



A.ஜெனிபர்
தரம்- 7A
யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்

**மாணவர்களே!** நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com

## சிறுவர் சுடர்

# நாவினால் சுட்ட வடு



ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்த படி எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப் படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை .

அவனுடைய அப்பா பொறுத்துப்பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத்தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மரவேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும்படி அறிவுரைத்தார்.

முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான்.

நாட்கள் செல்லச்செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப்பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாள்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை .

அப்பாவிடம் போய் விவரத்தைச்சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக்கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது.

எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப்போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப்போலவே மறைவது மிகக்கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார். மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.

# விடுகதைகள்

1. இருட்டு வீட்டில் குருட்டுத்தம்பி அது என்ன?
   **கனவு**
2. பச்சை வீட்டில் சிவப்பு பாய் அது என்ன?
   **கிளியின் அலகு**
3. தன் வீட்டுக்கு தானே ஓடமைப்பவை எவை?
   **ஆமை, நத்தை**
4. வானிலிருந்து வருபவன் வரிசையாக வருபவன் அவன் யார்?
   **மழை**
5. உரித்த கோழி சந்தைக்கு போகும் அது என்ன?
   **தேங்காய்**

**ம. சாதுரியன்,** தரம் - 10
யா/ அருணோதயா கல்லூரி.

# ‘க்’ வேறுபாடுகள்

க் ச் ட் த் ப் ற்

எழுத்துக்கென்று சில வரையறைகள் இருக்கின்றன. அவற்றை அறியாமல் எழுதினால், பொருளே மாறிவிடும்.

எடுத்துக்காட்டாக, மருந்து கடை என்பதும், மருந்துக் கடை என்பதும் ஒரே பொருளையா தருகின்றன? இரண்டும் ஒன்றுதான் என்று சொல்லமுடியுமா?

'மருந்து கடை' என்பது 'மருந்தினைக் கடைவாயாக' என்னும் பொருளைத் தருகிறது. சித்த வைத்தியத்தில் பல்வேறு இடுபொருள்களை இட்டு மருந்தைக் கடையும் முறை உண்டு.

'மருந்துக் கடை' என்பது 'மருந்தை விற்கும் கடை' என்னும் பொருளைத் தருகிறது. ஆக, மருந்து கடை, மருந்துக் கடை ஆகிய இரண்டும் வெவ்வேறு பொருளைத் தருகின்றன.

இரண்டு சொற்களுக்கு இடையே ஒற்று மிகுவது என்னும் பண்பு 'வலிமிகுதல்' எனப்படும். இங்கே 'வலி' என்பது வல்லின மெய்யெழுத்துகளைக் (க்,ச்,ட்,த்,ப்,ற்) குறிக்கும். இருசொற்கள் இணையும்போது ஒற்றெழுத்து வந்தால், அதனை 'வலி மிகுதல்' என்போம்; வராது எனில் 'வலி மிகாது' என்போம்.

ஒற்றெழுத்துப் பிழை, ஒற்றுப் பிழை, வல்லெழுத்துப் பிழை, சந்திப் பிழை என்று பலவகைகளில் கூறப்பட்டாலும், அவை வலிமிகுதல், மிகாதல் ஆகியவற்றைத்தான் குறிக்கின்றன. வலி மிகல், வலி மிகாமை இரண்டுக்குமே, எம் இலக்கணத்தில் தெளிவான வழிகாட்டல்கள் இருக்கின்றன.

தோப்புகள், தோப்புக்கள், படிகல், படிக்கல் என ஒரே சொல்லுக்குள்ளும் வலிமிகுதல், மிகாமை உண்டு. தோப்புகள் என்பது தோப்பின் பன்மையைக் குறிப்பது. தோப்புக்கள் என்பது தோப்பிலிருந்து இறக்கப்பட்ட கள்ளைக் குறிப்பது.


படிகல் என்றால் 'படிப்பாயாக கற்பாயாக' என்று கட்டளை பிறப்பிக்கும். செய்யுளில் அவ்வாறு சொல் இடைவெளி இல்லாமல் சேர்த்து எழுதிச் செல்வார்கள். படிக்கல் என்றால் படியாக இடப்பட்ட கல்லைக் குறிக்கும்.

வலிமிகுதல் என்னும் இந்த மொழிப்பண்பு உலகின் வேறெந்த மொழிகளிலும் இல்லையாம். தமிழ் மொழியிலும் மலையாள மொழியிலும் மாத்திரமே காணப்படுவதாக மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

# Microsoft

1. பில்கேட்ஸ் மற்றும் பால் ஆலன் ஆகிய இருவரும் இணைந்து மைக்ரோசாப்ட் நிறுவனத்தை 1975 ஆம் ஆண்டு தொடங்கினர்.
2. 'மைக்ரோ கம்ப்யூட்டர்' மற்றும் 'சொப்ட்வேர்' ஆகிய வார்த்தைகளை இணைத்து, 'மைக்ரோசொப்ட்' என்று இந்த நிறுவனத்துக்கு பெயர் வைக்கப்பட்டது.
3. 1987ஆம் ஆண்டில், தனது 31 ஆவது வயதில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் நிறுவநர்களில் ஒருவரான பில்கேட்ஸ், இளம் பில்லியனராக உருவெடுத்தார்.
4. மைக்ரோசொப்ட்டில் பணியாற்றும் டெவலப்பர்களின் சராசரி ஊதியம் ஒரு லட்சத்து 6,000 அமெரிக்க டொலர்கள்.
5. 2021 ஆம் ஆண்டு மே மாதம் எடுக்கப்பட்ட ஆய்வின்படி, உலகின் மதிப்பு வாய்ந்த 2வது மிகப்பெரிய நிறுவனமாக மைக்ரோசாப்ட் உள்ளது.

எங்களை இணைப்போம்




## அறிஞர் வாக்கு



ஒரு தேசத்தின் முதன்மையான நம்பிக்கை அதன் இளைஞர்களின் சரியான கல்வியில் உள்ளது.

டிசிடெரியஸ் எராஸ்மஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)

## வருடாந்த பொதுக்கூட்டமும் வேட்புமனு தாக்கலும்

### வருடாந்த பொதுக்கூட்டம் 2022/2023

**காலம்** :- 2022.04.24 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்** :- காலை 10.00 மணி
**இடம்** :- கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
**தலைமை** :- திரு.விக்னேஸ்வரன் தயாபரன்

பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 01.04.2022ம் திகதிக்கு முன்னராக தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்

தபால் முகவரி :- செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

### 2022/2023 காலப்பகுதிக்கான நிர்வாகசபை தெரிவிற்கான வேட்புமனு தாக்கல் செய்தல்

- **சங்க அங்கத்தவர்கள் மாத்திரம் வேட்புமனு தாக்கல் செய்யலாம்.**
- 2022/2023 ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபை தெரிவானது சங்க அமைப்பு திட்ட விதி உப பிரிவு 6.2 இன் பிரகாரம் நிர்வாகசபை தெரிவு தேர்தல் மூலம் நடைபெறவுள்ளதால் சங்க அமைப்பு திட்ட விதி உப பிரிவு 6.1 உள்ளவாறான பதவிகள் மற்றும் யாப்பு விதி உப பிரிவு 15.1 இன் பதவி அனைத்திற்கும் போட்டியிட விரும்பும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் தாம் போட்டியிட விரும்பும் பதவிகளுக்கான வேட்புமனுவை பாடசாலை அலுவலகத்தில் 23.03.2022ம் திகதி புதன்கிழமை முதல் 31.03.2022ம் திகதி வியாழக்கிழமை வரையிலான நாட்களில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.2.00 மணி வரையிலான காலப்பகுதியில் பெற்று, பூரணப்படுத்திய வேட்புமனுவை 01.04.2022ம் திகதி **வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு முன்னராக நேரடியாக பாடசாலையில் தேர்தல்** குழுவால் நியமிக்கப்படும் அலுவலகரிடம் கையளித்தல் வேண்டும்.
- **தங்கள் வேட்புமனுவினை கையளித்தமைக்காக வழங்கப்படும் பொறுப்பேற்றல்** கடிதத்தினை தேர்தல் குழுவால் நியமிக்கப்படும் அலுவலகரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

### நிர்வாக சபைக்கான வாக்கொடுப்பு

காலம் :- 2022.04.24 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- பி.ப 1.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி.
பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்

**செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.**

## விற்பனைக்கு

வாகன பெயர்:- Foton -போடென்
மொடல்:-10-10 நல்ல நிலையில் உள்ளது
கூடு பதிவு உள்ளது
(CS 18952) (4/6) **077 882 1413**

## விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களுடன் கடை விற்பனைக்கு உண்டு. (கட்டடம் தவிர்ந்த ஏனைய பொருட்கள் மட்டும்)
(CS 18946) (4/6) **074 128 4648**

## தேவை

பொதிகள் சேவைகள் நிறுவனம் ஒன்றில் உதவியாளர் பணிக்கு ஆள் தேவை. நல்லூரை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
**சம்பளம் :- 15000.00** (CS 18948) (4/6)
**074 200 1212, 075 330 5500**

## காணி விற்பனைக்கு

கைதடி BOC வங்கிக்கு அண்மையில் 19 பரப்பும் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் 72 பரப்பு வயல் காணியும் விற்பனைக்குண்டு. (CS 18947) (4/6)
**077 601 1135, 077 703 7058**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2021 ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில்
169 புள்ளிகளைப் பெற்று**
பாடசாலைக்கும் எமக்கும் பெருமை சேர்த்த
யா/ நல்லூர் சென் பெனடிக்ற் றோ.த.க வித்தியாலய
மாணவி

## செல்வி பாலரூபன் லதுஜா




அவர்களை மனதாரப் பாராட்டுவதுடன் எதிர் காலத்தில் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
இவர் சிறந்த பெறுபேறுகள் பெற ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அதிபர் ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
**அப்பா, அம்மா, பெரியப்பா, பெயரிம்மா, தாத்தா, அம்மம்மா, அண்ணா, அக்கா,
லதுஜா ஸ்டோர்ஸ் கேணியடி
கொக்குவில்.**

(CS 43659) (3/6)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 - 01 - 1955 | 17 - 03 - 2022 |



## செல்லையா குலசேகரம்

யாழ். கோப்பாயைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் East Ham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குலசேகரம் அவர்கள் கடந்த (17.03.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற தம்பையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும், பிரியங்கா, பிரதீபா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தங்கமலர், நாகரத்தினம், பூமணி, தங்கராஜா, வசந்தி, சதீஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இராமகிருஷ்ணன் அவர்களின் அன்பு மாமனாரும், ரவீந்திரன் சுகந்தி, ரசி ரவீந்திரன், ரதி மகிந்தா, ராதை லோகநாதன், ராகினி ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டன் East Ham இல் உள்ள அவரின் இல்லத்தில் (23.03.2022) புதன்கிழமை நடைபெறும் [illegible] உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொ[illegible]

**ரஞ்சினி (மனைவி):- 0044 2085523532
பிரியங்கா (மகள்):- 0044 7940197248** (CS 18937) (4/6)

தகவல்:
**குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி



யா/யூனியன் கல்லூரி 96 A/L பழைய மாணவர்கள்
**திரு.சசிகரன் சந்திரசேகரம்**
அவர்களின் பாசமிகு தாயாரும், திருமதி **சுதர்சினி சசிகரன்**
அவர்களின் பாசமிகு மாமியாரும் ஆகிய
**திருமதி ரஞ்சிதமலர் சந்திரசேகரம்** அவர்கள்
நேற்றுமுன்தினம் (18.03.2022) வெள்ளிக்கிழமை
அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து நாம் மிகுந்த வேதனை அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின்
[illegible] எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**யா/யூனியன் கல்லூரி நண்பர்கள் குழு
(96 உயர்தரம்)**

(cs 18936) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்.ஜோன்ஸ் கல்லூரி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி தரம் 01, 06, இற்கான மாணவர் அனுமதி 2023

01. அ) விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 21.03.2022 முதல் 06.04.2022 வரை பெற்றுக் கொள்ளலாம்.
    ஆ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
    இ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22.04.2022 வெள்ளிக்கிழமை அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
02. விண்ணப்பப்படிவங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ள லாம்.
03. தரம் 01 இற்கான விண்ணப்பபடிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photo copy) இணைக்கப்பட வேண்டும்.
04. ஒரு படிவத்திற்கானதும், பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1500.00
05. வயதெல்லைகள்:
    அ) தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2017 க்கும் 31.01.2018க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
    ஆ) தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2012 க்கும் 31.01.2013 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம் 6 (தமிழ் மொழி மூலம் / இரு மொழி மூலம்) அனுமதிக்கான விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படலாம்.
07. தரம் 01 இற்குரிய நேர்முகப்பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்படும்.
08. தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 15.10.2022 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**குறிப்பு :**

- தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 05 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 6 இற்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான புலமைப்பரிசில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

(CR 37686) (3/6)

அதிபர்கள்

## 6 ஆம் மாத (அரையாண்டு) மீளாத்துயர் நினைவஞ்சலி

மண்ணுலகில் 18 . 06 . 1967



விண்ணுலகில் 22 . 09 . 2021

### ஆலாலசுந்தரம் முருகானந்தன்

**(St.John's College Jaffna. Information Technology Teacher)**

எமது அன்புத் தெய்வமே என் தம்பி வவாவே!

நீ எம்மை விட்டுப் பிரிந்து ஆறு மாதங்கள் சென்று விட்டனவே இருந்தாலும் உம்முடைய நினைவிலே இன்றும் இக்கணமும் வாழந்து கொண்டு இருக்கின்றோம்.

உம்முடைய நிமிர்ந்த நடையும், சிரித்த பார்வையும், கலகலப்பான பேச்சும் ஓம் என்னும் வார்த்தையும் சுறுசுறுப்பான காரிய திறமையும், இறை சிந்தனையும், எம் கண் முன்தோன்று கின்றனவே.

தம்பி எப்பிறப்பில் உன்னைக் காண்பேன். நீ எதிர்பார்த்து விட்டு சென்றதெல்லாம் நிச்சயம் நிறைவேற்றுவோம்.

உன் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இருக்க எல்லாம் வல்ல பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாளை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

(CS 43631) (3/6)

என்றும் உன் நினைவுகளுடன்

மனைவி, மகள், சகோதர, சகோதரிகள், மைத்துனிமார்

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 02 - 1950



மறைவு 14 - 03 - 2022

### வைரவன் நடேசன்

யாழ்ப்பாணம் புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை (Berlin) வசிப்பிடமாகவும் வாழ்ந்த வைரவன் நடேசன் அவர்கள் கடந்த (14.03.2022) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் வள்ளி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலட்சுமியின் பாசமிகு கணவனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி நாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமன் (கண்ணாடி இறைவரித்திணைக்கள உத்தியோகத்தர்) மற்றும் பாலச்சந்திரன் (சந்திரன்), சின்னத்தம்பி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், மகேஸ்வரன், விக்னேஸ்வரன், கிருஸ்ணபவானி, குணரஞ்சினி, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தியாகராஜா (கிளி), இராமநாதன் (ரகு), செந்தூரன், சசிகலா, யாழினி ஆகியோரின் பாசமிகு மாமாவும், சதீபன், ஜெதீபன், தர்சான், கிஷாந்தன், சாருஜன், நிஷாந்தன், கௌசிகன், திலக்சியா, கீர்த்தனா, கார்த்திகா, பாதுசியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.03.2022) வியாழக்கிழமை ஜேர்மனியில் (Berlin) நண்பகல் 12.00-15.00 மணிக்கு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :**

செந்தூரன் (மருமகன்):- 0049 302 216 5596, 0049 176 225 27511
சதீபன் (பேரன்):- 0049 176 613 39958
ஈசன் (மகன்):- 0049 157 579 71801
நேசன் (மகன்):- 0049 152 108 85549
பாலச்சந்திரன் (சந்திரன்-மைத்துனர்):- 077 283 0313

(CS 18930) (4/6)

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 06 - 01 - 1940



ஆண்டவன் அடியில் 15 - 03 - 2022

### இராஜேஸ்வரி பாலசுந்தரம்

யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், சுருவிலை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Aubervilliers ஐ வதிவிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி பாலசுந்தரம் அவர்கள் 15.03.2022 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரை பாலசுந்தரம் (குணம்) அவர்களின் அன்பு மனைவியும், கேதீஸ்வரன் (பிரான்ஸ்), சுதாகரன் (சுவிஸ்), விஜயதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், எப்ஸி, விஜயபாலினி (விஜி), தவனேஸ்வரி (தங்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சகானா, ஸ்ரீதாஸ், ஆகாஷ், சுவிஜா, அகிந், ஆதவன், அபிஜா, சகிந், சஜீனா, இம்மானுவேல், பிரிஸில்லா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், அமராஸ்ரீதேவி, ஆகனா சகாதேவி ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, யோகம்மா, பரமேஸ்வரி மற்றும் தவமணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவசம்பு, கந்தசாமி, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுசிலாதேவி, காலஞ்சென்ற தனலட்சுமி, மற்றும் வன்னியசிங்கம், கமலாம்பிகை, பூலோகதாதன், காலஞ்சென்றவர்களான இந்திராதேவி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்பு அண்ணியும், காலஞ்சென்றவர்களான நடராசா (மாஸ்டர்), கந்தையா, மற்றும் செல்வராஜா (கொழும்பு) ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரியும், சிவகாந்தி, வாகீஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2022) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : திருமதி கமலாம்பிகை**

**தொடர்புகளுக்கு**


**கேதீஸ்வரன் (ஈசன் - மகன்) + 33 750 984 4051**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராசதுரை யோகராஜா

தோற்றம் 28.02.1956 மறைவு 17.03.2022



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை யோகராஜா அவர்கள் கடந்த (17.03.2022) அன்று இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசி இராதுரை அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு தர்சனம் தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் கணவரும், டயனி (சுவிஸ்), துக்ஷாயினி (சட்டத்துறை மாணவி) ஆகியோரின் தந்தையும், சஞ்சீவ் (சுவிஸ்), நிரோகிசன் (Huawei Company) ஆகியோரின் மாமனாரும், ஆரார்த்யா (சுவிஸ்), அவர்களின் பேரனும், சொர்ணலிங்கம் (அண்ணா - சுவிஸ்), அரியரட்ணம் (குண்டு - சுவிஸ்), பரமலிங்கம் (சின்னத்தம்பி - சுவிஸ்), வனிதா (டில்லி - சுவிஸ்), பவானிஸ் (பப்பி - கனடா), தவலிஸ் (மாத்தையன் - கனடா), சுபா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், குமாரசிங்கம் அவர்களின் மைத்துனரும், காலஞ்சென்ற சின்னத்துரை - இராசரட்ணம் (கனடா), இராசலிங்கம், பிள்ளையிமணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 109 9918

(cs 43658) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 01 - 1942

மறைவு 14 - 03 - 2022



## முருகேசு கந்தசாமி

பூனகரி கல்முனையைப் பிறப்பிடமாகவும் தோப்புக்காட்டை வதிவிடமாகவும் கந்தன் போட்யாட் உரிமையாளருமாகிய முருகேசு கந்தசாமி அவர்கள் கடந்த (14.03.2022) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு பூசம்மா தம்பதியினரது அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா இராசாத்தியம்மா தம்பதியரின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தங்கமயில் தம்பதியினரது பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கமலவேணியம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற துரைச்சாமி அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி அவர்களின் அன்பு மைத்துனரும், உதயதாசன் (பிரான்ஸ்), தமிழ்ச்செல்வி (நோர்வே), கலைச்செல்வி (லண்டன்), ஆனந்ததாசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கமலநாதன், கமலாம்பாள் (பிரான்ஸ்), காந்ததாசன் (பிரான்ஸ்), உதயநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தந்தையும், சுகந்தி (பிரான்ஸ்), விஜயராஜா (நோர்வே), ஸ்ரீகுகன் (லண்டன்), நின்மதி (பிரான்ஸ்), ஸ்ரீநடராஜமூர்த்தி (பிரான்ஸ்), அருள்வாணி (பிரான்ஸ்), வினோ (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், குகநேசன் (நோர்வே), தேவராஜா (நோர்வே), இதயராஜ் (நோர்வே), சுயன் (நோர்வே), தினேஸ்குமார் (நோர்வே), லோஜன் (நோர்வே), ரூபன் (லண்டன்), திலீபன் (லண்டன்), சோபிகா (லண்டன்), தினேஸ் (லண்டன்), குமரன் (பிரான்ஸ்), சிந்துஜா (பிரான்ஸ்), லக்ஷ்மன் (பிரான்ஸ்), தென்னவன் (பிரான்ஸ்), நிரேகா (பிரான்ஸ்), தருணிகா (பிரான்ஸ்), நிரேஜிகா (பிரான்ஸ்), தேரவன் (பிரான்ஸ்), ஜெயஸ்ரீ (பிரான்ஸ்), டீசன் (பிரான்ஸ்), றொசான் (பிரான்ஸ்), டெனீஸ்ரா (பிரான்ஸ்), ஆரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சைலஜா (நோர்வே), தீபன் (லண்டன்), அஸ்வினா (நோர்வே), பிரசாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனும், மிருதுலா (நோர்வே) ஆர்தீகா (நோர்வே), ப்பிரேதா (நோர்வே), சதுர்ஜன் (லண்டன்), அஞ்சனா (லண்டன்), லக்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் நீலன்காடு இந்து மயானத்திற்கு எ[illegible] அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ[illegible]

தகவல்: குடும்பத்தினர்

(CS 18929) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 03 . 1958

இறப்பு 18 . 03 . 2022



## திரு. சின்னத்துரை சிவகுமார்

(ஓய்வுபெற்ற முகாமையாளர் - இலங்கை வங்கி)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை சிவகுமார் நேற்றுமுன்தினம் (18.03.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் மகனும், ஏழாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராஜா - நேசரத்தினம் தம்பதியரின் மருமகனும், வினோஜினியின் அன்புக் கணவரும், நிதர்சன், காருண்ஜா, ஷீவஸ்திகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிசாந்தினியின் அன்பு மாமனாரும், திரு.சிவராஜா, திருமதி சிவதேவி முத்துக்குமார், திருமதி சித்திராதேவி சிவலிங்கம், திருமதி இந்திராதேவி விஜயவேல்குமாரன் ஆகியோரின் சகோதரனும், திருமதி றஜனி கணேசலிங்கம், திரு. நடராஜா ஸ்ரீறஞ்சன், திரு.நடராஜா ஸ்ரீகாந்தன், சுமதி நடராஜா, திருமதி றமணி இளம்பூரணன், திருமதி மீனலோஜினி ஞானசம்பந்தன், திரு.நடராஜா செந்தில்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்குக் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.ஷீவஸ்திகன் - 077 786 3116
நிதர்சன் +124 987 72757 (Whatsapp)

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 43599) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 08 - 1955

இறப்பு 19 - 03 - 2022



## செல்வி கமலராணி இராசரத்தினம்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கமலராணி இராசரத்தினம் அவர்கள் நேற்று (19.03.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் மகேஸ்வரி அவர்களின் அருமைப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான வரதராஜன், லோகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தியாகராசா, கனகேஸ்வரி ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற சிவபாக்கியம், கலாமதி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற ஜதீஸ்வரன், அதிசயராஜன் (CTB நடத்துனர் - அம்மா) சபரீசன், சாம்பவி, சிவசக்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மகாலக்ஷியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (எம்.எஸ்.வீதி, கோண்டாவில் கிழக்கு) நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

M.S Lane,
Kondavil East,
Kondavil.

தகவல் :
வ. அதிசயராஜன்
(மகன் CTB நடத்துனர்)
T.P.: 077 403 6311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## தவக்காலச் சிந்தனை

### சுய ஆய்வே மனமாற்றத்தின் ஊற்று

"நீங்கள் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பாராது பிறர் கண்ணில் உள்ள துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன். வெளி வேடக்காரரே உங்கள் கண்ணில் உள்ளதை எடுத்து எறிந்து விட்டு பிறரின் கண்களை சுத்தம் செய்ய முயலுங்கள்"

அதாவது, நாம் அடிக்கடி பிறருடைய தவறுகளை மிகைப்படுத்தி கடுமையாக விமர்சனம் செய்கின்றோம். அவ்வாறு செய்வதற்கு எமக்கு உரிமையில்லை என்கிறார் கிறிஸ்து.

தனது நிலையை அறியாது அடுத்தவரைக் குறைகூறும் மனிதர்கள் ஒரு வித மனநோயாளிகள் எனலாம். தன்னையே முழுவதும் அறிவதுதான் வாழ்க்கையின் முதற்படி. அவன்தான் குறைநிறைகளோடு மற்றவர்களை ஏற்றுக்கொள்வான்.

தான்செய்யும் தவறுகளை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவநெறிகளைக் கடைப்பிடிப்பவன்தான் பிறருக்கு வழி காட்ட முடியும். இருளைப் பழிப்பதை விட ஒளியேற்றுவதே மேல் என்பதை உணரவேண்டும். மற்றவர்களிடம் உள்ள நற்குணங்களை, சேவைகளை தட்டிக்கொடுக்க வேண்டும். குற்றம் கூறுவதை விடுத்து அதி லிருந்து மீண்டெழும் வழியைக் காட்டவேண்டும். எம்மிடம் தூய்மையான சிந்தனை உண்டென்றால்தான், நாம் சரியானவற்றைப் பேசவும் செயற்படுத்தவும் பிறருக்கு வழிகாட்டவும் முடியும்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

## தவறான முடிவெடுத்து யுவதியொருவர் இறப்பு

சாவகச்சேரி, மார்ச் 20

சாவகச்சேரியில் யுவதியொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று 19ஆம் திகதி காலை சாவகச்சேரி சிவன்கோவிலடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குளித்துவிட்டு வருவதாகக்கூறி கிணற்றடிக்குச் சென்ற குறித்த யுவதி அருகிலுள்ள மரத்தில் தூக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையில் மே[...]ண்ட பரிசோதனையில் அவர் ஏ[...]வே உயிரிழ[...] விட்டார் என்று [...]துவர்கள் தெரி[...]துள்ளனர். (ச[...]

ராகு- [...]யர்ச்சியின்
இடப ரா[...] பலன்கள்
நாளை [...]ட்கிழமை
பி[...]தும்.

## பொருளாதார நெருக்கடிசார் கருத்துரைகளும் கலந்துரையாடலும்

புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிஸக் கட்சியின் ஏற்பாட்டில், "இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் தீர்வுக்கான திசைமார்க்கமும்" என்ற தலைப்பிலான பகிரங்க கருத்துரைகளும் கலந்துரையாடலும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

த.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள கலந்து[...] உரைகளை பு[...] லெனினிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், கட்சியின் வ[...] பிரதேச செயலாளர் செல்வம் கதிர்கா[...]நாதன், கட்சியின் வன்னி மாவட்[...] செயலாளர் என்.பிரதீபன் ஆகியோ[...] [...]அத்துடன் சபையோர் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...**

### மஹிந்தவுக்கு...

பொருளாதார மத்திய நிலையத்துக்கு முன்பாக இன்று காலை 9 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் ஆகியன இணைந்து இந்த அழைப்பை விடுத்துள்ளன. (ஓ-125)

### ஊடகங்களுக்கு...

அனுமதிக்கப்படவில்லை. பிரதமர் ஊடகப் பிரிவே நிகழ்வு தொடர்பான ஊடக அறிக்கை மற்றும் ஒளிப்படங்களை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்தது. (அ-ஒ-26)

### எரிபொருள்...

நிலையில் உயிரிழந்துள்ளார். முதியவர் சுமார் 5 மணித்தியாலங்கள் வரையில் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் கண்டி - உடதலவின்ன - வத்தேகம பகுதியைச் சேர்ந்த 70 வயதானவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. முதியவர் மயங்கி விழுந்த வேளையில் அவரை மருத்துவமனையில் சேர்க்க எரிபொருள் நிரப்பு நிலைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையென பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ஒ-இ)

### மருந்துகளுக்குத்...

மு.நந்தகுமார் தெரிவித்தார்.

கண் சத்திர சிகிச்சை நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'மருந்துப் பொருள்கள் சிலவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. சில மருந்துப் பொருள்கள் மிகக் குறைவான அளவிலேயே உள்ளன. மருந்துப் பொருள்கள் இல்லாமையால் கண் சத்திர சிகிச்சை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் மருந்துப் பொருள்களுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது' - என்றார் மருத்துவர் நந்தகுமார். (அ-ஒ-5)

### ஹெரோய்ன்...

கொண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த இரண்டு வாரங்களுக்குள் போதைப்பொருளை அதிகளவு எடுத்துக் கொண்டதால் உயிரிழந்த இரண்டாவது சம்பவமாக இது பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையைச் சேர்ந்த 28 வயதுடய இளைஞரே நேற்று முற்பகல் வீட்டில் உயிரிழந்துள்ளார்.

'குறித்த இளைஞர், போதைப்பொருளுக்கு கடந்த 4 ஆண்டுகளாக அடிமையாக இருந்து வந்துள்ளார். வீட்டில் பணம் கேட்பது மற்றும் திருட்டுக்களிலும் ஈடுபட்டுவந்துள்ளார். அவரை மறுவாழ்வுநிலையத்துக்கு அனுப்ப பெற்றோர் முயற்சித்துள்ளனர். நேற்றுக் காலையில் ஹெரோய்ன் போதைப்பொருளை எடுத்துக்கொண்டுவிட்டு வீட்டுக்கு வந்த இளைஞர் நெஞ்சைப் பொத்தியவாறு நிலத்தில் சரிந்து உயிரிழந்துள்ளார்' என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞரின் உயிரிழப்பு அதிகளவு ஹெரோய்ன் போதைப்பொருளை எடுத்துக்கொண்டமையாலேயே ஏற்பட்டது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார்.


போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டு தெல்லிப்பழை - கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்தார்.

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்தாவிடின் இளவயதினரின் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கும் என்று மருத்துவர்களும் சமூக ஆர்வலர்களும் தெரிவிக்கின்றனர்.

கிராமமட்ட அமைப்புக்கள் பொலிஸாருடன் இணைந்து போதைப்பொருள் விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-ஒ-26)

# கொரோனா அபாயம் தணிந்துவிடவில்லை

## சுகாதாரத்துறை எச்சரிக்கை



**கொழும்பு, மார்ச் 20**

**நாட்டில் கொவிட் நிலைமை முன்னரைப் போன்று தீவிரமாகக் காணப்படாத போதிலும், அச்சுறுத்தல் நிலைமை முழுமையாக நீங்கவில்லை என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துட்டாவ தெரிவித்தார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனாத் தொற்றுக்குள்ளானோரில் 57 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர். முன்னரை விட தற்போது கொரோனா நிலைமை தீவிரமாக இல்லாத போதும், முழுமையாகக் குறைவடையவில்லை. புதிய பிறழ்வுகள் தோற்றம் பெறக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. அதனால் அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி அனைவரும் பாதுகாப்பாகச் செயற்படவேண்டும் - என்றார். (எ-இ)



## இராஜன் கதிர்காமர் கிண்ணம்

# சென்.பற்றிக்ஸை வீழ்த்தியது வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணம், மார்ச் 20

29ஆவது இராஜன் கதிர்காமர் மட்டுப்படுத்தப்பட்ட ஐம்பது பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 46 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. 164 எனும் இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 46 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

2008ஆம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரி இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளது. இந்த இடைவெளியில் 5 வருடங்கள் ஆட்டங்கள் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)





திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ச்சியாக 18 தினங்கள் மஹோற்சவம் இடம்பெறவுள்ள நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி இரதோற்சவத் திருவிழா இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14,125)

## பரந்தனில் விபத்து சிலருக்கு காயம்

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் சிலர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி ஏ-9 வீதியால் யாழ்.நோக்கிச் சென்றுகொண்டிருந்த உழவியந்திரம் முன்னால் சென்ற வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டவேளை கிளிநொச்சி நோக்கி எதிரே வந்த கனரக வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் கிளிநொச்சிபொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,113)

## பஸ் விபத்தில் எழுவர் காயம்

பதுளை நமுனுகுல - பசறை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் எழுவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பசறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகுதடி!

காலி கந்தேகொட மைதானத்துக்கு எரிபொருள் சிலிண்டர்களுடன் வாகனம் வருவதாகக் கிடைத்த தகவலையடுத்து அந்தப்பகுதி மக்கள் நேற்று அதிகாலை 2 மணியிலிருந்து காத்திருந்தனர்.

(அ-ஒ-இ)

## தமிழ் பேசும்...

நயினாதீவை தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் இடமாக எமது நவதகல தேரர் உருவாக்கியுள்ளார். அதற்குக் காரணம் அவர் சரளமாகத் தமிழ் பேசக் கூடியவர். இந்தப் பிரதேசங்களுக்கு தமிழ் மொழி தெரிந்த பிக்குகளை அதிகளவில் வரவழைப்பதன் மூலம் இங்கு சிறந்த தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என அமரபுர மகா சங்கசபையின் தலைவர் கந்துனே அஸ்ஸஜி மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

(அ-ஒ-இ)

## மஹிந்தவால்...

ஜென் சோதனையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(அ-ஒ-26)

## பிக்குகள்...

யாழ்ப்பாணம், மார்ச் 20

கடந்த 2010 ஆம் ஆண்டு நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள மக்களால் நிர்மாணிக்கப்பட்ட சமித்தி சுமண விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிக்குமார் தங்குமிடம் கட்டடம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால்இராணுவத்தினரின் பங்களிப்புடன் இந்தத் தங்குமிடம் கட்டடம் கட்டப்பட்டது.

கட்டடத்தை திறந்துவைத்த பிரதமர், அப்பகுதியில் உள்ள 50 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகள் 36 பேருக்கு பிரதமரால் வீட்டு உரிமைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் உடனிருந்தார்.

(அ-ஒ-இ)

## புத்தர்...

நயினாதீவு விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரம் வழங்கும் வகையில், யாழ்ப்பாணம், நயினாதீவு ரஜமஹா விகாரையில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சூலோதர மஹோதர மாமாவுக்கும் மருமகனுக்கும் இடையே எழுந்த இரத்தினக்கல் கதிரைக்காக நடந்த போரை நிறுத்துவதற்காக புத்தபெருமான் நயினாதீவு புனித இடத்துக்கு வந்ததாக சாசன வரலாறு கூறுகிறது. அப்போது அனைவருக்கும் தர்மம், உபதேசம் செய்யப்பட்டதால், ஏற்படவிருந்த பெரும் பேரிடரை தடுத்து நிறுத்த முடிந்தது.

அன்றிலிருந்து இந்தப் பெறுமதி வாய்ந்த இடம் சிங்கள பௌத்தர்கள் மட்டுமன்றி பௌத்த தத்துவத்தில் பற்றுகொண்ட அனைத்து தேசிய இன மக்களும் வழிபடும் இடமாக மாறியுள்ளது. துட்டகைமுனு மன்னன், சத்தாதிஸ்ஸ மன்னன் போன்ற மாபெரும் ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் இந்த இடத்தைப் பாதுகாத்ததாகவும் வரலாறு கூறுகிறது.

### ஒற்றுமை

வடக்கிலும் - தெற்கிலும் பழங்காலத்திலிருந்தே மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளனர் என்பதை இது எமக்கு எடுத்துக்காட்டுகிறது. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்ட பாதகமான நிகழ்வுகளால் 30 வருடங்களுக்கு மேலாக இந்த இடம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது என்று கூறுவது சரியானது. தென்னிலங்கை மக்கள் வடபகுதிக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அன்றைய காலப்பகுதியில் கடற்படையினர் இந்த ஆலயத்தை பராமரித்து பாதுகாத்து வந்ததோடு பிக்குகளுக்கு அன்னதானம் வழங்கியதையும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

வடக்கு மாகாணத்தை மையமாகக் கொண்ட போர் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் மக்களையும் அழித்தது. இவ்விகாரையை பராமரிக்க அப்பகுதியில் வாழும் ஏராளமான தமிழர்களும் ஒன்று திரண்டு வந்ததை மரியாதையுடன் நினைவு கூருகிறேன்.

### விகாராதிபதி

அவர்கள் மற்றும் கடற்படையினரின் உதவியோடு இவ்விகாரை தற்போதைய விகாராதிபதியால் அபிவிருத்தி செய்யப்பட்டது. எமது வணக்கத்துக்குரிய நவதகல பதுமகீர்த்தி நாயக்க தேரர் அவர் என்னுடன் மிகவும் நட்புடன் பழகும் தேரர். மேலும், அவர் சொல்ல வேண்டியதை பயப்படாமல் சொல்வதும் அவரிடமிருந்து நான் கண்ட பண்புகளில் ஒன்று. மேலும் இந்தப் பகுதி மீதும் விகாரையின் மீதும் மிகுந்த அன்பு கொண்டவர். அவர் இந்த மக்களையும் விகாரையையும் விட்டு வெளியே வரவே இல்லை. எனக்கும் அரசுக்கும் மிகவும் விசுவாசமாக இருந்தார்.

### அபிவிருத்தி

நயினாதீவு விகாரைக்கு செல்லும் பாதையை அமைக்கவும், மருத்துவமனையை சீரமைக்கவும் முடிந்தது. நயினாதீவு மற்றும் ஏனைய தீவுகளுக்கு செல்லக்கூடிய குறிகாட்டுவான் இறங்குதுறையை புனரமைத்து, நயினாதீவு விகாரைக்கு வருகை தரும் பக்தர்களுக்கான தங்குமிட வசதிகளை மேலும் மேம்படுத்தவும் நாம் எதிர்பார்க்கிறோம். இந்த ஆலயம் புனிதமான இடமாக மாற்றப்பட்டதன் காரணமாகவே இவை அனைத்தும் சாத்தியமானது என்றே கூறவேண்டும்.

30 ஆண்டுகால பயங்கர போருக்குப் பின்னர் இந்த விகாரையை பெரியளவில் மேம்படுத்தி பக்தர்கள் வழிபடும் இடமாக மாற்ற நினைத்தோம். எனவேதான் கடந்தவருட அரச வெசாக் விழாவை வடமாகாணத்தில் இந்த ஆலயத்தை மையப்படுத்தி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாக, உலகம் முழுவதையும் மூழ்கடித்த கொரோனாத் தொற்றால் அதனைச் செய்ய முடியாது போனது.

இந்தப் புனித பூமியைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் தொடர்ந்து செய்யும் என்று உறுதியளிக்கிறேன் - என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் பங்கேற்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திலும் வழிபாடுகளை பிரதமர் மேற்கொண்டார். அதேபோன்று யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாரையிலும் பிரதமர் வழிபாடுகளில் ஈடுபட்டார். (அ-ஒ-இ)

## முன்னணி...

கந்தரோடையில் விகாரைக்கு அடிக்கல் நடுகை செய்ய பிரதமர் மஹிந்த ராஜபக்ச செல்லவிருப்பதாக வெளியான தகவலையடுத்து அந்தப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து விகாரைக்கு அடிக்கல் நடுகை செய்யச் செல்லும் திட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ச கைவிட்டுள்ளார்.

கந்தரோடையில் கதுறுகொட புராதன விகாரை என்று இராணுவத்தினரால் அடையாளப்படுத்தப்பட்ட இடம் உள்ளது. அதற்கு அருகில் புதிய விகாரை அமைப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது யாழ்ப்பாணப் பயணத்தின்போது அங்கு செல்வார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து மதியமளவில் கந்தரோடையில் விகாரை அமைக்கப் படவுள்ளதாகக் கூறப்படும் இடத்துக்கு முன்பாகவும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'விகாரைக்கு அடிக்கல் நடாதே', 'தமிழினத் துரோகிகளே வெளியேறு', 'அங்கஜன், டக்ளஸின் அடிவருடிகளே வெளியேறு', 'வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்', 'எப்பா எப்பா (வேண்டாம்) ஏக்கிய ராஜ்ஜிய (ஒற்றையாட்சி) எப்பா', 'இராணுவமே வீடு செல்', 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்று பல்வேறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸாருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையில் வாக்குவாதமும் ஏற்பட்டிருந்தது.

போராட்டக்காரர்கள் அங்கிருந்து அகலாத நிலையில், பிரதமரின் பயணம் கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டது. இதனையடுத்து அங்கு பாதுகாப்புக் கடமையிலிருந்து பிரதமர் பாதுகாப்புப் பிரிவினர், இராணுவத்தினர், பொலிஸார் அங்கிருந்து அகன்று சென்றனர். (அ-ஒ-26)

## காணாமற்...

யோகத்துக்கு இலக்காகியுள்ளனர்.

14 வயதான இரண்டு சிறுமிகள் கடந்த 16ஆம் திகதி காணாமற் போயிருந்தனர். சிறுமிகளின் பெற்றோர், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு புதுக்குடியிருப்பு பேருந்து நிலையத்துக்கு அண்மையில் இரண்டு சிறுமிகள் சந்தேகத்துக்கிடமான நடவடிக்கையையடுத்து பொலிஸார் அவர்களை விசாரணை செய்ததில், காணாமற் போன புதுமாத்தளன் சிறுமிகள் என்பது தெரியவந்தது.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறுமிகளில் ஒருவருக்கு பேஸ்புக் மூலம் காதல் மலர்ந்துள்ளது. மட்டக்களப்பு, செங்கலடி பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவனே காதலன். தன்னிடம் வருமாறு காதலன் அழைத்ததையடுத்து, கடந்த 16ஆம் திகதி, சம்பந்தப்பட்ட சிறுமியும் அவரது நண்பியும் செங்கலடி புறப்பட்டனர். தனியார் கல்வி நிறுவனத்துக்குச் செல்வதாக வீட்டில் சொல்லிவிட்டு புறப்பட்டவர்கள், மிதிவண்டியை பற்றைக்குள் மறைத்து வைத்து விட்டு, பேருந்தில் மட்டக்களப்பு, செங்கலடிக்கு சென்றுள்ளனர்.

பேருந்தில் சென்ற அவர்களை, செங்கலடியில் வைத்து காரில் ஏற்றினான் பேஸ்புக் காதலன். தனது பேஸ்புக் காதலியுடன் பாலியல் உறவில் ஈடுபட்ட இளைஞன் கடந்த 17ஆம் திகதி, இரண்டு சிறுமிகளையும் காரில் ஏற்றி வந்து, யாழ்ப்பாணம் செல்லும் பேருந்தில் ஏற்றி, வீட்டுக்கு அனுப்பியுள்ளான். சிறுமிகள் இடம் தெரியாமல் யாழ். நகரை வந்து சேர்ந்தனர்.

இரவாகிய சமயத்தில் அவர்கள் நகரில் சுற்றித்திரிந்தனர். இரவு வேளையில் பான்சி கடையில் பொருள்களை வாங்கிய வேளை, அவர்களுக்கு உதவிசெய்வதாகக் கூறி இரண்டு இளைஞர்கள், சிறுமிகளை அழைத்துக்கொண்டு சென்று வீட்டில் தங்கவைத்துள்ளனர். இதன்போது மற்றைய சிறுமியையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

பின்னர் இரண்டு சிறுமிகளையும் யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு பேருந்தில் ஏற்றி அனுப்பியுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு அவர்கள் புதுக்குடியிருப்பை வந்தடைந்த போதே, பொலிஸார் சிறுமிகளை மீட்டனர். சிறுமிகள் முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-10-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்புக்கு சாத்தியங்கள் இல்லை

## ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 20**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான இந்த ஆட்சியின்கீழ் புதிய அரசமைப்பு இயற்றப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பொதுஜன பெரமுன அரசு, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை இழந்துள்ளது. எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கான ஆதரவு மேலும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, பொதுத் தேர்தலுக்கு செல்வது தொடர்பில் ஜனாதிபதி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார். இவை உட்பட மேலும் சில காரணங்களாலேயே புதிய அரசமைப்புக்கான சாத்தியப்பாடு குறைவென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான வரைவு நகலை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. சட்ட வரைவு விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதிகாரப்பகிர்வு பற்றி நிபுணர்குழு கவனம் செலுத்தவில்லை எனவும், அது தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானிக்கும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிபுணர்கள் குழு அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களிடம் கருத்துகளைக் கோரியிருந்த நிலையில், அதைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்தது. எனவே, புதிய அரசமைப்புக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்கப்படுமா என்பது சந்தேகமே.

ஏனெனில் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரைக்கலாம். எனினும், சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாத வகையில் அதில் அரசு திருத்தம் மேற்கொள்ளலாம். ஆனால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் அவசியம். அதைப் பெறுவதில்தான் சிக்கல் நிலைமை உள்ளது.

உரிய அரசியல் தீர்வு இல்லையேல் தமிழ்க்கட்சிகள் அதனை ஆதரிக்காது. அதேபோல உச்ச அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்டால் அதனை கடும்போக்குவாதிகள் எதிர்க்கக் கூடும். இவ்வாறான இடியப்பச் சிக்கலாலேயே புதிய அரசமைப்புக்கான சாத்தியப்பாடுகள் குறைவென சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஜனாதிபதிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நடைபெறவுள்ள சந்திப்பின்போது, புதிய அரசமைப்பு பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன்போது ஜனாதிபதி தரப்பில் இருந்து வழங்கப்படும் பதில்மூலம், அரச தரப்பின் நிலைப்பாட்டை அறியக்கூடியதாக இருக்கும் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

(எ-44)

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 2 பேர் வசிக்கக் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (CS 18924) (5/6)
077 660 4014

**D.O இடமாற்றம் தொடர்பானது**
மன்னார் மாவட்ட நில அளவைத்திணைக்களத்திற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு இடமாற்றம் பெற விரும்புபவர் தொடர்பு கொள்ளவும். (CS 18923) (4/6)
077 100 0633

**காணி விற்பனைக்கு**
பூநகரி மண்ணித்தலையில் 11 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. (CS 18893) (3/6)
077 672 9422, 071 469 5010

**வீடு வாடகைக்கு தேவை**
அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றுக்கு கந்தர்மடம், தட்டாதெரு, கலட்டி, பிறவுண் வீதியை அண்மித்த பகுதியில் தேவை. (CS 18712) (3/6) 074 070 2678

**தனியார் வகுப்புக்கள்**
தரம் 6 - O/L வரை விஞ்ஞானம் தனியார் வகுப்புக்கள் தமிழ், ஆங்கிலமொழி மூலம் பரீட்சை மீட்டல் வினாக்களுடன் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
(CS 43655) (3/6) தொடர்பு : 076 878 6628

**ENGLISH CLASSES**
யாழ்நகரில் தனி வகுப்புகள்
A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.C.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள் Language
தரமும் திருத்தப்படும்.
K.Ganesh B.A 077 766 8725

**உதவியாளர் தேவை**
சிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை. (CS 43639) (3/6)
தொடர்பு : 076 399 6505

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1984 ஆம் ஆண்டு பிறந்த தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் பதவிவகிக்கும் ஆண் மகனுக்கு இதே குலத்தைச் சேர்ந்த அழகான மணப் பெண்ணை எதிர்பார்க்கிறோம்.
(CS 18920) (3/6) தொடர்பு : 077 387 4601

**விற்பனைக்கு**
❖ Jack முட்டு (இரும்பு)
❖ Concrete Mixer (CS 18959) (4/6)
076 021 5858

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. மற்றும் காணி விற்பனைக்கு இருப்பினும் தொடர்பு கொள்ளவும். (CS 18940) (4/6)
077 930 7774

**வீடு வாடகைக்கு**
K.K.S Road தட்டாதெருச் சந்தியிலிருந்து 500m தூரத்தில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(CS 18933) (3/6) 077 403 9786

**EDUS | Online Institute**
with GLOBAL STANDARDS
சிறந்த ஒன்லைன் கல்விக்கான நிரந்தர தீர்வு!
தரம் 1 தொடக்கம் A/L
(English & Tamil Medium)
Professional courses for beginners
Admissions Open...!
www.edus.lk 077 712 3330

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ். கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 09 பரப்புக் காணி 2 பரப்பாகவும். 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
❖ கைதடி சந்தியில் இருந்து 600m தூரத்தில்
❖ நல்ல சூழலில்
❖ கைதடி சந்தி (A 09 றோட்) பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதியில்
தொடர்பு : 074 291 3725 /074 291 3726

**வேலைக்கு ஆட்கள் தேவை**
யாழ். நகரில் இயங்கும் பிரபல மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை.
❖ விற்பனைத்துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
❖ முழு நேர, பகுதி நேர வேலை வாய்ப்பு உண்டு. (CS 18958) (1/6)
தொடர்புகளுக்கு:- 076 888 0808

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ். மானிப்பாயில் பிரதான வீதியில் (யாழ். காரைநகர் வீதி) அரசடி பிள்ளையார் கோயில் முன்பாக 9 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
❖ மானிப்பாய் சந்தையில் இருந்து 1km தூரத்தில்
❖ 14 அடி பாதையுடன்
❖ பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில்
ஒரு பரப்பின் விலை 5 இலட்சம் ரூபாய்
(CS 18954) (4/6)
074 291 3727

**காணி விற்பனைக்கு**
விலாசம்:
புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு
5 3/4 பரப்பு- Rs.68,00,000/- (68 லட்சம்)
5 பரப்பு - Rs.58,00,000/- (58 லட்சம்)
சிறியவீடு, மின்சாரம், கிணறு, தென்னைமரங்கள்
அசோக் - 077 0804 026

**தேவை**
கொக்குவில் பிரதேசத்தில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண் உதவியாளர் தேவை. சம்பளம் 20000 - 30000 (முழுநேரம் விரும்பத்தக்கது)
(CS 43656) (3/6) தொடர்பு : 077 950 7546

**Student Visa**
கனடா சென்று கல்வி கற்க தொடர்பு கொள்ளவும்.
(IN 17038) (3/6) 077 994 7484

**வேலை ஆட்கள் தேவை**
யாழ். மாவட்டத்தில் வசிக்கும் முதியவர் ஒருவரை முழு நேரமும் அவருடன் இருந்து பராமரிப்பதற்கு ஆண் ஒருவர் தேவைப்படுகின்றார். தகுந்த சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். (CS 43638) (3/6)
தொடர்பு 077 424 6587

**நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்த தீர்வு**
**Water Proofing**
மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்கள் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவு, ஊறல், சுவர்களில் ஏற்படும் வெடிப்புகள் போன்ற பிரச்சினைகளை 10 வருட உத்தரவாதத்துடன் சீர்செய்து தருகின்றோம்.
10 வருட முன் அனுபவமுள்ள ஊழியர்களை கொண்டு உத்தரவாதத்துடன் சீர் செய்து தருகின்றோம்.
போலி இரசாயனத்துடன், போலிமுகவர்கள் உங்கள் இல்லம் தேடிவந்து கேட்பவர்கள் ஏமாறவேண்டாம்
FINEX இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்
North and East Engineering
55, Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000 (CS 43369 A) (2/6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.